The "BHARATI" Reg. No. M. 2456.

பிப்ரவரி 1930.

# பாரதி

OFFICE OF THE RE
6-MAR 1930
RAS




மாலை 2. மணி 2.

## ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

ரா. நாராயணசுவாமி,
ஆசிரியர்.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

211,N29BH
N30.2.2
98525

# 'பாரதி'யின் போஷகர்கள்.

1\. Messrs. மச்சா முனுஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ்,
சென்னை.

2\. ஸ்ரீமான் காசையஸ்வாமி அவர்கள், மானேஜர்,
தேவாரம் ஜமீன், தேவாரம்.

3\. ,, T. A. K. அழகர் ராஜா அவர்கள்,
சொந்தக்காரர், மஹேஸ்வரி விலாஸ் ராஜா எஸ்டேட், தேவாரம்.

4\. ,, C. சங்கரலிங்கம் அவர்கள்,
சொந்தக்காரர், ஆனந்த விலாஸ் எஸ்டேட், தேவாரம்.

5\. ,, சி. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், தேவாரம்.

6\. ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், கூடலூர்.

7\. ,, ம. ச. வேலுச்சாமி அவர்கள்,
ஜவுளி வியாபாரம், கூடலூர்.

8\. ,, V. S. சுப்ரமண்யம் அவர்கள்,
மிராஸ்தார், சித்தயங்கோட்டை.

9\. ,, பெயர் தெரிவிக்க இஷ்டமில்லாதவர்.

10\. ,, ஜான் அந்தோனி ஆஜ— அவர்கள்,
பைசன் வாலி, தேவிகுளம், திருவாங்கூர்.

## போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

6-MAR 1930

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார் & முனிசிபல் சேர்மன், போடிநாயக்கனூர்.

12. „ உ. ம. சே. முகிமித்தின்பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

13. „ ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

14. „ K. பண்டார் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

15. „ K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம்.

16. „ ராவ்சாகிப் A. S. அழகணன் செட்டியார் அவர்கள், மிராஸ்தார் & மெம்பர், ராமேஸ்வரம் தேவஸ்தானக் கமிட்டி, போடிநாயக்கனூர்.

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.


---


## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| „ ½-க்கு | „ | „ | 5—8—0 |
| „ ¼-க்கு | „ | „ | 3—0 0 |

¼-பக்கத்திற்குக் குறைந்த விளம்பரங்களுக்கு இடமில்லை. விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்ப வேண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் செய்வோர் எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர், "பாரதி."



படங்களுடன் வெளிவந்துலாவும் தேசீய மாலிகை.

## பொருள் அடக்கம்.


தொடர் எண் | பக்கம்.

1. இன்னிசை வாழ்த்துக்கள் ... ... 81
   (1) திருவாளர் பா. ஆதிமூர்த்தி அவர்கள் ,,
   (2) ,, K. அப்துல் சுகூர் அவர்கள் 83
   (3) ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மையார் அவர்கள் 85
   (4) திருவாளர் அ. சு. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் 86
   (5) ஸ்ரீமதி P. S. அரங்கநாயகி அம்மையார் அவர்கள் ,,
   (6) திருவாளர் சங்குப் புலவர் அவர்கள் 87
2. நமது பெண்களின் தற்கால நிலையும் அவர் தம் வேலையும்— [ஆசிரியர், "பாரதி" ... 88
3. சாரதாவின் சட்டமும் சமய வாதப் போராட்டமும்— [ஸ்ரீமான் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள், **M.A.,B.L.** 94
4. அழகும் ஆரோக்கியமும்—திருவாளர் வ. உ. சிதம்பரம் [பிள்ளை அவர்கள் ... 98
5. வீர சுதந்திரம்—திருவாளர் **P.** கந்தநரசிம்மன் அவர்கள், [**B. A., B. L.** ... 102
6. அதிமதுரத் துண்டுகள்—ஆசிரியர், "பாரதி" ... 116
7. உடற் பயிற்சி—சாண்டோ ஸ்ரீமான் லெ. சோமசுந்தரம் [அவர்கள் ... 137
8. மின்சாரம்—திருவாளர் **K. G.** கிருஷ்ணன் அவர்கள், [**B. Sc., (Hons.)** 146
9. ஆசிரியர் குறிப்புகள்—ஆசிரியர், "பாரதி" ... 160


### படம்.


1. சாண்டோ லெ. சோமசுந்தரம்.



சாண்டோ லே. சோமசுந்தரம்.

# பாரதி

ஓர் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர். (பாரதி.)

ஆசிரியர்: ரா. நாராயணசுவாமி.

மாலை 2 | உத்தமபாளையம் 1930-ஞு பிப்ரவரிமீ | மணி 2

## இன்னிசை வாழ்த்துக்கள்.

### திருவாளர் பா. ஆதிமூர்த்தி அவர்கள்.

வாழி வாழி "சுதந்தர பாரதி" வாழி வாழி வளம் பல வோங்கியே!
வாழி வாழி "சுதந்தர பாரதி" வாழி வாழி வளர் புகழ் தாங்கியே!!

(க) ஆழி சூழ்புவி யுள்ளவர் யாவரும்,
அமர ரோடு முனிவ ரடங்கலும்,
ஏழி ஞெடொரு ஏழுல கங்களும்,
எங்கும், எட்டுத் திசையுமெக் காலமும்
ஊழி நாளி லுதித்தநம் பாரதி
ஒருவ ருக்கும் அடிமை யில்லையெனத்
தாழ்வி லாத "சுதந்தர" மெய்திய
சக்தியே நிலை நின்று தழைத்திட. (வாழி வாழி)

198525



(உ) அன்னி யர்க்கிங் கடிமைகள் அல்லம்யாம்!
அறிவும், ஆற்றலும், ஆண்மையும், செல்வமும்
"கன்னி பாரதி"க் கேயுரித் தாயதால்
கவலை நீங்கிக் கருமம் பலித்ததால்;
இன்னல் நீங்கின இன்பம்வந் தெய்தின,
எங்கும் வெற்றியை யெய்தி யிலங்கினோம்!
தன்ன லத்தை யிழந்தநம் வீரர்தம்
தவமும் இன்று பலித்தன சாற்றினே! (வாழி வாழி)

(ரு) பட்ட பாடு பலித்திட லாயின,
பகைவர் கண்டு பயந்தன ரெங்கணும்,!
தொட்ட நல்வினை சோபித மெய்தின,
"சுதந்த ரச்சுடர்" தோன்றிய தெங்குமே!!
அட்ட சித்திகள் எய்திநம் "பாரதி"
அகில மெங்கும் புகழ்பெற வோங்குவாள்
இட்ட சித்திகள் ஈய வெழுந்தனள்
எங்கள் "பாரதி"க் கீடெவர் எங்குமே. (வாழி வாழி)

(சு) உலக மெங்கும் "சுதந்தரம்" நாட்டவும்,
உத்த மக்களை யோங்கி வளர்க்கவும்,
கலக மின்றியென் னாளும் தழைக்கவும்,
கருணை யால்அர சாட்சிகள் காக்கவும்,
பலரும் சோதர ராகிப் பரவவும்,
பாரி லேயறப் பாதை திறக்கவும்,
தலைவன் காந்தியின் சீர்த்தி தழைக்கவும்,
சமர சப்பயிர் ஓங்கி வளர்கவே. (வாழி வ...

(ரு) வாழ்க! வென்றும் "சுதந்தர ராகியே"
மனித ஜாதியின் மானம் நிலைக்கவே,
வீழ்க! அன்னியர் ஆட்சிகள் எங்கணும்!
வீணர் தீமை விளிந்து கழிகவே!
தாழ்க மாயையும், தந்திர ஜாலமும்,
தவறும், ஏய்ப்பும், சதியும், சமர்களும்!
ஆழ்க [illegible]ன்னலம் யாவும், அகிலமேல்
[illegible] அருள்ஒளி வீசியே!!. (வாழி வாழி)

211, [illegible]84



(சு) ஜாதி யேற்றமும் தாழ்வும் தவிர்கவே,
சாஸ்தி ரப்பொய் அழிந்து தகர்கவே,
சோதி யாகும் "சுதந்தர வெள்ளத்தில்"
சுத்த மாகும் சமரசம் தோன்றவே!
பேதி யாதவிஞ் ஞான விவேகத்தைப்!
பெற்று யர்ந்து பிழையறு பீடுடை
நீதி யோங்கி வளர்ந்து பெருகவே
நீண்டு "பாரதி" கீர்த்தி நிலைக்கவே!! (வாழி வாழி)

(எ) வீடு தோறும் கலைகள் வளர்கவே!
வீதி தோறும் கழகம் மிளிர்கவே!
நாடு தோறும் அறிஞர் நிலையங்கள்!
நம்ம வர்க்கு விஞ்ஞானத்தை நல்கவே!
மாடும் மற்ற நிதியமும் ஓங்கிநாம்!
மனித வர்க்கக் குபேரர்க ளாகியே!
பீடு பெற்ற உலகிற் குதவியாய்ப்
பெருகி வாழ்க எம்"பாரதி" என்றுமே!! (வாழி வாழி)

வந்தேமாதரம்.

---

## திருவாளர் K. அப்துல் சுகூர் அவர்கள்.

(மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிரு-என்ற சந்தம்.)

பொன்னைநாடுவர் பொருளைநாடுவர் போகமாதரை நாடுவர்
தன்னைநாடிடுந் தன்மையில்லவர் தம்மைச்சீர்பெறச் செய்தனை
என்னை! "பாரதி" நின்புகடனை யேழையேங்கள் சொலற்கெவண்
அன்னைவாழியி வகிலமீதுந லருங்கலைச்சுடர் வீசியே. (1)

பெண்மையோங்கிட நன்மைதாங்கிடப் பேசுபாரத நாடெலாந்
திண்மைவீங்கிட உண்மைநோங்கிடத் தேசசேவை புரிந்தனை
விண்மையோங்குநின் புகழ்பரந்து விரிந்துசால மிளிர்ந்ததால்
வண்மைதாங்கிட வந்த "பாரதி" வாழ்கமானில மீதிலே (2)

முந்தையோர்வழிக் கொள்கையென்னுங்கண் மூடியாடு வழக்கத்தைச்
சிந்தைநீயிருந் தோட்டிநேர்வழி செல்லுமாறெமைச் செய்தனை
விந்தையோங்குநிற் கென்கைம்மாறு விரும்பியோம்புதல் காண்கிலேம்
எந்தை "பாரதி" வாழ்கமானில மேழையெம்துயர் நீக்கியே. (3)

தேசமாபெரும் பக்தியூட்டிச் செழித்தசெந்தமிழ்க் கல்வியை
நேசமாயெமக் கீந்துநற்புகழ் நீணிலத்தினி லாக்கினை
மோசமேசெயும் நீசர்வாழ்க்கையை முற்றிலுஞ்சிதைத் தேநறும்
வாசமாமலர் தாங்கிநானிலம் வாழ்க "பாரதி" வாழ்கவே. (4)

ஈரமற்றவன் னெஞ்சினோர்சொலு மிருண்மலிந்ததீண் டாமையின்
பாரமுற்றிலு மெம்மைவிட்டுப் பறந்துபோம்படி செய்தனை
நாரமுற்றநம் இந்தியரெலாம் நம்புசோதர ரென்னவே
வாரமுற்றில கத்துதித்தனம் வாழ்க "பாரதி" வாழ்கவே. (5)

விஞ்சுபல்புகழ் பெற்றநாட்டினர் வீதிவாயுறங் கித்தினம்
பஞ்சைவாழ்வு புரிந்துபல்கதை பகரும்வேலை யொழித்தனர்
கொஞ்சுநின்மொழி செவிமடுத்தவர் கோதிலாதவ ராவரால்
வஞ்சநீக்கிட வந்த "பாரதி" வாழ்கமானில மீதிலே. (6)

கொங்குமாமலர் தங்குநற்புயக் குவலயத்திளை ஞோர்க்கெலாந்
தங்குநல்லுணர் வூட்டியேயருந் தமிழ்ச்சுவையுணச் செய்தனை
பொங்குமாமழை யென்னலாம்படிப் புந்தியோங்கப் புகழெலாந்
தங்கு "பாரதி" வாழ்கமாபெருந் தாரணிமீது தழைத்தரோ. (7)

வேற்றுமையெனுஞ் சேற்றிலேசெல விட்டிடாதருள் செய்தநற்
பேற்றினைப்புகழ்ந் தேத்தி யேத்திநின் பெருமையேதினம் பேசினேம்
ஊற்றுமிக்கவைங் காப்பியச்சுவை யோங்குநற்றமிழ்ச் சேவையை
ஆற்றுநின்புகழ் வாழ்க "பாரதி" அகிலமீது தழைத்தரோ. (8)

பருதியாலுல கிருளெலாமகல் பான்மைபோலவிப் பாரிலே
கருதிநீபல கலையிலாமனக் கசடிருள்தனை நீக்கினை
சுருதியோடுநற் றமிழ்மணச்சுடர் சூழவீசியி வாண்டுபோல்
வருதியாலுல குள்ளநாள்வரை வாழ்க "பாரதி" வாழ்கவே. (9)



சந்தம்வீசு நற் றமிழ்தழைத்தன தரணியோங்கின சர்ஜனர்
சொந்தமாயுனை வாழ்த்திநல்லிசை சொல்லியின்பஞ் சுகிப்பரால்
பந்தமோங்குநம் காமர்நாட்டினர் கண்விழித்திடக் கருணையால்
வந்த "பாரதி" வாழி! வாழி! நின் வண்மையோங்கி வளர்ந்தரோ. (10)

---

## ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மையார்.

### வெண்பா.

பாரதிக்கி லெங்கும் படரும் புகழ்வீசிப்
"பாரதிப்"பேர்ச் சஞ்சிகைதான் பண்புறவே—பாரதிப்பேர்
என்தெய்வ முள்ளிரங்கி யீயும் பெருங்கருணை
நன்றெய்தும் பேரால் நயந்து.

### அகவற்பா.

தண்டமிழ் நாட்டின் தனியர சிருக்கை
மண்டில மாகு மதுரா புரியைச்
சார்தரு மேன்மை யார்தரு சீர்த்தி
யுத்தம பாலைய வித்தக னெனவே
எத்திசை யோரும் எதிர்கொண் டேற்கத்
தீராத் தேசபக்தியிற் சிறந்த
நாரா யணப்பெயர் நம்பியா லினிது
தோற்றியே "பாரதி"ப் பெயரொடுந் தூய
ஆற்றினிற் படிப்போர் அறிவது விரிய
மேற்றிசைப் புலவர் விரிவா ராய்ச்சியிற்
சாற்றிடு முண்மை பலவொடு சமூக
முன்னேற் றம்படு முறைதனக் கினிய
மின்னு மெழுச்சியும் விழுமிய கல்வியும்
பொன்னேர் வளந்தனைப் புதுக்குறு குறிப்பும்
தன்னே யத்தொடு சால்புறு கட்டுரை
அளப்பில தாங்கி யோராண் டகவை
களிப்பொடு கடந்து தாவியீ ராண்டினை
எய்துநல் விழாவை யின்பொடும் வாழ்த்தி
மெய்தக வோடு மேனிலை வளர
இறைவிதன் திருவருள் ஏத்துவன் இனிதே.

---

## திருவாளர். அ. சு. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.

திருவளர் அமுத மென்சொற் செந்தமிழ் செழித்து வாழ
அருளறம் பெருகு சிந்தை அறிவின ராகி யாரும்
உருவொடு சிறந்து வாழ உரிமைபெற் றுலகு வாழப்
பருதியி லொளிகான் றென்றும் "பாரதி" வாழி வாழி.

தொல்லாண்டு கண்ட வண்மைத் தூயநம் புவித்தாய் மக்கள்
மல்லாண்ட மணித்தோள் மாண்பும் மதியாண்ட வனப்பு மிக்குச்
சொல்லாண்ட பெருமான் காந்தி சொல்வழி யுரிமை காண
பல்லாண்டு பல்லாண் டாகப் "பாரதி" வாழ்க மன்னோ.

---

## ஸ்ரீமதி P. S. அரங்கநாயகி அம்மையார்.

### அகவற்பா.

நம்தமிழ் நாட்டிடை நலமிக உதித்துச்
செந்தமிழ் மொழியிற் சீரிய முறையில்
ஆண்டொன் றுய்மிக அரும்பணி யாற்றித்
தொண்டு புரியும் தூய"பாரதி"யே!
அன்பே யுருவாய் அழகெலாந் திரண்ட
அன்னைபாரதியின் அழகிய வுருவும்;
அன்னவள் கைத்தலத் தணிபெற விளங்கும்
வீரச் செறிவுடை வெற்றிக் கொடியும்;
பார்க்கப் பார்க்கப் பார்ப்போர் கண்களை
ஈர்த்து ஈர்த்து இன்புறச் செய்யும்
புறவழ குடைய புகழ்"பாரதி"யே!!
அமிழ்தே அனைய அருமை மொழியாம்
தமிழ் மொழி தன்னில் தெள்ளிய நடையில்
பாலரும் பயின்று பயனுறு மாறும்;
சாலச் சிறந்த சான்றோர் பலரின்



அமிர்த மொழியோ டாசிகள் பெற்றும்
அறிஞர் பலரின் அறிவோ டமைந்து
நன்மை பொதிந்த நல்லுரை யாலும்;
இன்னோ ரன்ன இனியகட் டுரைகள்
பலவற் றாலும் பொலிவுறப் பெற்றுத்
திங்கள் தோறும் திங்கள் தோறும்
திகழு கின்ற தன்மை வாய்ந்த
அகவழ குடைய அரும்"பாரதி"யே!!!
ஓராண் டினில்நீ ஒப்பறு புகழும்
சீரும் சிறப்பும் செல்வாக் கையுமே
சேரப் பெற்றுச் செழித்து வளர்ந்தனை!
ஆரே நின்போல் ஆண்டொன் றினிலே
அனைத்தும் பெற்று அழகுறப் பொலிந்தோர்!
நின்றன் ஆசிரியர் நீடூழி வாழ
இறைவன் அடியிணை இறைஞ்சு வாமே.
ஊக்கமிக் குலவும் உயர்"பாரதி"யே
நாட்டின் நலமே நாடி
ஆக்கம் நல்கும் ஆறே செல்க.

---

## திருவாளர் தி. சங்குப் புலவர் அவர்கள்.

### கலிப்பா.

தண்பாரதிவுயருத் தமபானை யத்துதித்துப்
பண்பா [illegible]மெகிமைப் பண்டிதர்பால் வளர்ந்துகலை
வெண்பாரதியருளின் மேதினியெல் லாமுலவும்
வண்"பாரதி"மகவு பல்லாண்டு வாழியவே.

பரதகண்டத் துதித்தவரைப் பாவிப்பீர் சோதராய்
விரதங்கொள் வீரடிமை விடுதலைபெற் றிடுவதற்கே
சரதமுட னுமதுசுதந் தரம்பெறமுன் வருவீரென்
[illegible]லகத்தார்க் கியம்பும் "பாரதி"வாழி.

நோய்நாடி நோய்க்குமுத லாடியதி னைந்தயர்ந்த
சேய்நாடி யப்பிணிக டீர்க்கமருந் துதவுதல்போல்
தாய்நாடுந் தாய்மொழியுந் தக்கநிலை குன்றிநின்ற
வாய்நாடி மேலுபர்த்த வருவதிது வாழியவே.

# நமது பெண்களின் தற்கால நிலையும் அவர் தம் வேலையும்.*

ரா. நாராயணசுவாமி,
ஆசிரியர், "பாரதி."

நமது பரத கண்டத்தின் நூல்களெல்லாம் ஆடவர்களைக் குறித்துக் கூறும்பொழுது பெண்களைப் பற்றியும் கூறாமலிருப்பதில்லை. சீதை, அநுசூயை, சாவித்திரி, தமயந்தி, பாமதி, புனிதவதி, திலகவதி, சம்யுக்தா, மீராபாய், தாரா பாய், ஜான்சிராணி முதலியோர் போன்ற கணக்கற்ற வனிதா ரத்னங்கள் தோன்றி நம் நாட்டைப் பெருமைப் படுத்தி யிருக்கிறார்கள். சீதை யில்லாவிட்டால் ராமாயணமில்லை. திரௌபதை யில்லாவிட்டால் பாரதமில்லை. தமயந்தி யில்லாவிட்டால் நளோபாக்கியானமில்லை. தமிழ் நாட்டின் ஒப்பற்ற காவியங்களெல்லாம் அநேகமாகப் பெண்களைக் குறித்தே வெகுவாக விவரித்திருக்கின்றமையை நாம் காண்கின்றோம். ஔவையாரைக் குறித்து அறியாதார் தமிழ் நாட்டில் இல்லை என்றே கூறலாம்.

வரதுங்க பாண்டியன் மீது அவன் சகோதரன் அதிவீரராம பாண்டியன் படையெடுத்து வர, வரதுங்க பாண்டியன் பத்தினியான மதன லீலையார்

* இலங்கை மாதர் சங்கத்தின் முதலாவது ஆண்டு வெளியீட்டிற்காக எழுதப்பெற்றது.



"செஞ்சடா ரோன் மைந்தனையுந் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டிருந்து மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்"

என்னுங் கவியைப் பாடியனுப்பி அதிவீரராமபாண்டியனைச் சாந்தப் படுத்தினார்.

ஒரு நாள் ஏகம்பாவணனைச் சேர சோழ பாண்டிய மன்னர்களிகழ்ந்துபேச அப்பொழுது ஏகம்பவாணன் மனைவியார்,

சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த வடிச்சேற்றில்—மானபிரான்
மாவேந்த னேகம்ப வாணன் பறித்துநட்டான்
மூவேந்தர் தங்கண் முடி"

என்னுங் கவியால் அவர்கள் கர்வத்தை யடக்கினார்.

பூமியைப் பூமாதேவி யென்றும், ஆகாயத்தை ஆகாயவாணி யென்றும், செல்வத்தை இலட்சுமி யென்றும், கலைகளைச் சரஸ்வதி யென்றும், பலத்தைச் சக்தி யென்றும் போற்றி வணங்கும் இந்தியர்கள், பெண்களை அடிமைப்படுத்திக் கேவலமாக நடத்தி வருவது மிக மிக வருந்தத்தக்க விஷயமாகும்.

திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் சொல்லுகிறார். "நமது நாட்டின் முப்பத்து முக்கோடி மக்களுள், பதினைந்து கோடி மக்கள் பெண் மக்களாவர். இப் பெண் மக்களுக்குக் கல்வி கொடாமல் இவர்களை யடிமைகளாக்கி வைத்திருந்தால் நாம் முன்னேறுவ தெங்ஙனம்? முதலாவது பெண்கள் தாழ்ந்தவ ரெனவும் ஆண்கள் உயர்ந்தவ ரெனவும் கருதியதே தீது. இத்தகைய தீய கொள்கை இடைக் காலத்திலேயே யெழுந்தது. வட மொழியிலும் தென் மொழியிலும் பண்டை நாளில் இத் தீமைக்குச் சான்று கிடையாது. நம் நாட்டுப் பெண்களை நாம் கடவுளுருவிலுங் கண்டு வழிபடுகின்றோ மல்லவா? பிற் காலத்தார் பெண் என்றால் இழிந்த பிறப்பென்றும் பாவவுருவென்றும் பெண்கள் மெய் நூல்கள் படித்தல் கூடாதென்றும் காலக் கொடுமையால் கருதுவ ராயினர்."

"எத் தேசத்தில் பெண்களை மரியாதையுடன் நடத்துகின்றார்களோ அத் தேசம்தான் சீருடன் சிறப்புடனிருக்கிறது" என்று மனு கூறுகிறார். அநேக ஞானிகளையும் வீரர்களையும் பெற்றெடுத்த ஞானத் தாய்மார்கள்—வீரத் தாய்மார்கள் வழிவழியாக வந்த நாம், நம் அன்னைகளைச் சகோதரிகளை அடிமைகளாக வைத்திருப்பது கேவலம்! கேவலம்!! அந்தோ! அவர்கள், மோகத்தை யடக்குங் கருவிகளாகப், பிள்ளைகளையுண்டாக்குங் கருவிகளாக, அடிப்பூதிகளாகக் கருதப்படுகின்றார்கள். பார்வதியைச் சிவன் வாம பாகத்திலும், இலட்சுமியை விஷ்ணு மார்பிலும், சரஸ்வதியை பிரமா நாவிலும் வைத்திருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றனவே. இமாலயத்திற் சிவனும், குமரியிற் சக்தியும் கோவில் கொண் டெழுந்தருளி யிருப்பதின் தத்வந்தான் கவனிக்கப்படத்தக்கதில்லையா? பட்சிகளும் மிருகங்களும், தத்தம் பெண்ணினங்களை எவ்வாறு காப்பாற்றிக் களிப்பிக்கின்றன? கவனிக்க! கவனிக்க!!

பால்மணம் மாறாக் குழந்தைகளுக்கு விவாகங்கள் நடத்துகிறார்கள். சாதாரணமாகப் பலரும் கல்யாண வைபத்தைக் கண்டுகளிக்க விரும்புகின்றனரே யன்றி, மணமக்களுக் குண்டாகுங் கஷ்ட நஷ்டங்களை நினைப்பதேயில்லை. சமூக வழக்கம், மதமென்ற பெயரால் இத் துர்வழக்கம் சில ஜாதியாருள் அதிகமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. தமிழர் ஆதியில் இவ் வழக்கத்தை யறியாதிருந்தன ரென்பது எவருக்கும் நன்கு தெரியலாகும். விவாகமே இன்னதென்று அறியா வயதிற் செய்யும் மணந்தான் மணமாகி மணக்குமோ? பருவமடைந்த பின் விவாகம் நடத்திவந்த நம் தேசத்தில் முகம்மதியர் படையெடுப்பால், இவ் வழக்கம் ஹிந்து சமூகத்திலும் புகுந்து இன்றளவும் நின்று நிலவி வருகின்றது. உலக விஷயங்களை நன்கு அறியா வயதில் மனைவி, வீட்டுக்காரி, காதற்கிழத்தி, சகி, சதி, வாழ்க்கைத் துணைவி, பாரி என்றவை போன்ற பட்டங்களுடன் குடும்ப பாரந் தலைக்கேறியது மட்டுமின்றி, கணவனைச் சந்தோஷப் படுத்துவதுடன், மாமனார், மாமி, மைத்துனர், வேலைக்காரர் முதலானவர்களுக் கெல்லாம் திருப்தியாக நடக்கவேண்டி யிருக்கிறது. வளர்ச்சி யடையாத வயதிலுண்டாகுங் கருப்ப வேதனையையும் அவ் வயதிற் பிறக்கும் சிசுவின் தன்மையையும் விரிக்கிற் றுயரமே. நம் நாட்டில் அதிகமான சிசு மரணத்திற்குக்



காரணந்தான் முதலாவது பால்ய விவாகமென்பதை யெவர்தான் மறுக்க முடியும்?

" அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்—வண்ணமுலை
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்."

என ஆன்றோராற் குறிக்கப்பட்ட உண்மையை யறியாதிருக்கும் இளம் பிராயத்தில் வாழ்க்கைப்படும் பெண்கள் நிலை, பரிதாபம்! பரிதாபம்!!

தாமாகவே கணவனை வரித்த நம் சகோதரிகள், இக் காலத்திற் சந்தைகளில் விற்கப்படும் மாடுகள் போன்று விற்கப்படுகிறார்களென்றே சொல்லவேண்டி யிருக்கிறது. பிராயப் பொருத்தம், குணப் பொருத்தம், அழகுப் பொருத்தம், அறிவுப் பொருத்தம் முதலியவைகளையாவது கவனிக்க வேண்டும். ஒன்றையுமே கவனியாது விட்டாலும் மனப் பொருத்தத்தையாவது மதித்துப், பெண்கள் காதலிக்கும் காதலர்களை மணக்கும்படி செய்யவேண்டியது கடமையாகும். தகுதியற்றோர்களை விரும்பும் பெண்களுக்குத் தக்கவாறு புத்தி புகட்டி, மனதைச் சரி செய்து விவாகம் நடத்தவேண்டுமே யல்லாது பெண்களைக் கட்டாயப்படுத்தி மணஞ் செய்விப்பது நன்றன்று. பலவந்தமான விவாகங்களே குடும்ப சச்சரவுக்கெல்லாம் முதற் காரணம். சில பாவங்களுக்கும் இது கொண்டுசெல்கின்றது. அநேகம் உத்தம ஸ்திரீகள் "புல்லென்றாலும் புருஷன், கல்லென்றாலும் கணவன்" என்பதை மனதிற் சிந்தித்துக்கொண்டு தங்கள் வாழ்நாட்களை யெல்லாம் கொடிய கணவர்களிடம் கஷ்டப்பட்டுக் கொண்டே கழிக்கிறார்கள். இவ்வாறாகவே மிருகம் போன்ற மனைவிமார்களிடம் துன்பப்படும் நாயகர்களும் அநேக ரிருக்கிறார்கள். இந் நாட்டிற், கைம்பெண்களுக்குச் செய்த செய்து வருங் கொடுமைகளைச் செப்பத் தரமன்று. சுமார் மூன்றேகால் லக்ஷம் சகோதரிகளை மதத்தின் பெயரால் நாம் வாட்டிக்கொண்டு, தேச முன்னேற்றத்தையும் சமூக முன்னேற்றத்தையும் பாழ்படுத்துகிறோம்.

விதவைகளில் இயற்கையின் சக்தியைத் தாங்கமாட்டாது தற்கொலை செய்துகொண்டவர்க ளெத்தனைபேர்? சிசுக் கொலை செய்தவர்க ளெத்தனைபேர்? சமூகக் கட்டுப்பாடுகளைத் தாங்கமாட்டாது அயல் மதங்களிற் பிரவேசித்தவர்க ளெத்தனைபேர்? இவ்வாறு கைம்பெண்களை யநேகதிக்கு ஆட்களாக்கிக்கொண் டிருக்கிறோம்.

"ஆயிரக் கணக்கான விதவைகள் நம் தேசத்தி லிருக்கிறவரையில், வெடிச் சுரங்கத்தின்மீது நாம் உட்கார்ந்துகொண் டிருப்பதாகவே நினைத்துக்கொள்ளல் வேண்டும். அந்த வெடி, சமயம் நேரிடும்போது வெடிக்கும். நாம் புனிதர்களாக வேண்டுமானால் இந்தக் கட்டாய வைதவ்யம் என்பதை யொழிக்க வேண்டும்" என்று காந்தியடிகள் தமது "யௌவன இந்தியா"ப் பத்திரிகையில் எழுதுகிறார்.

பெண்களுக்குக் கல்வி கட்டாயம் கொடுக்க வேண்டுமெனப் பத்திரிகைகள் பலவாண்டுகளாக வெளியிட்டு வெளியிட்டுச் சலித்துவிட்டன. உபந்யாசகர்கள் பல விடங்களில் பலமுறை பல வருடங்களாகப் பேசிப் பேசி அலுத்துவிட்டார்கள். அநேக சங்கங்களில் தீர்மானஞ் செய்து காகிதத்தி லெழுதி யெழுதி வைக்கிறார்க ளன்றிச் செயலிற் காட்டுவோரில்லை. எவ்விடத்திலோ சிலர் செய்தும் வருகிறார்கள்.

"விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

என்பது வள்ளுவர் வாக்கு. "உலகிற்கே ஒரு பெரும் புதையல் கிடைத்திருக்கிறது. அது என்னவெனில், நாம் பெண்களின் உபயோகங்களை யறிந்துகொண்டோம்" என்று ஒரு அமெரிக்க தத்துவ சாஸ்திரி கூறுகிறார். மண்டன மிசிரருக்கும் சங்கரருக்கும் சாஸ்திர வாதம் நடந்தபோது அதில் நியாயத் தலைவியாக விளங்கியவர் மண்டன மிசிரரின் பாரியாரல்லவா?

முற் காலத்திலே நமது பெண்கள் வித்வாம்சைகளாகவும், பண்டிதைகளாகவு மிருந்து, தத்தம் புருஷர்க ளில்லாத பொழுது தங்கள் மக்களுக்கும் சிஷ்யர்களுக்கும் வித்தை போதித்து வந்தார்களென நாம் நூல்களின்மூலமா யறிகின்றோம். "கல்வி யின்மையே



எல்லாத் தீங்குகளுக்கும் காரணம்" என்றார் புத்தபிரான். எத்தனையோ பெண்களை யீன்ற நம் நாடு, இப்போது எந்நிலையி லிருக்கின்றது? அந்தோ கேவலம்! கேவலம்!! பெண்களுக்குக் கல்வி கொடுத்தால் வானம் இடிந்துதான் விழுமோ? பூமிதான் பிளந்துவிடுமோ? சமுத்திரந்தான் பொங்கிப் புவியை நாசமாக்கிவிடுமோ? யாதெனத் தெரியவில்லை.

மாதர்களெல்லாம் கற்றவர்களா யிருந்தால் அவர்களிற் கணக்கற்ற அறிஞர்கள் தோன்றித் தேச நன்மைக்காகப் பல துறைகளிலும் முயற்சிப்பார்கள். இவர்களால் தேசமடையும் நன்மைகளோ பலவாகும். ராஜா ராம் மோகனராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகரர், மலபாரி முதலியோர் போன்று, பெண்கள் சமூகத்திற்காகப் பாடுபடும் தேசாபிமானிகள் நம் நாட்டில் அநேகர் தோன்றாதது மிக வருந்தத் தக்கதே. நம் நாடு ஆங்கிலமாக மாறிக்கொண்டேவரத் தலைப்பட்டுவிட்டது. நகர ஸ்திரீகள் ஆங்கில நடை, உடை, ஊண் ஆதியவற்றை விரும்பிக்கொண்டு வருவதையும், கிராமப் பெண்கள் அறிவிலிகளாகி வருவதையும் காண நாட்டுப் பற்றுடைய எவரும் மௌனமாகவிருக்க நியாயமில்லை.

சகோதரர்களே, பெண்கள் வெகு காலமாகக் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கிறார்கள். "பெண் ஜென்மம் புண் ஜென்மம்" "பெண் ஜென்மம் பாவ ஜென்மம்" என்ற பழமொழிகளுக்கு அவர்கள் தற்சமயம் இலக்காக விருக்கிறார்கள். உலகத்தில் ஒருவித நூதன சக்தி யுதயமாகித் தாண்டவமாடுவது நீங்களறியாததா? மாதரியக்கந்தோன்றி யிருக்கிறது. கான்பூரிற் கூடிய பாரத ஜன சபையில் ஸ்ரீமதி சரோஜனி தேவியார் அக்கிராசனம் வகித்ததே பெண்களுடைய பிற்காலத்துக்கான சுப அறி குறிகளிலொன்றாகும். பெண்கள் முன்னேற்றம் உங்கள் கைவசமே யிருக்கிறது. அவர்களை அறியாமையில் அடிமைப்படுத்தி யிருக்கும் வரையிற் பாரத தேவி யடிமைப்பட்டவளே என்பதை அறிந்து அவர்கள் குறைகளை யெல்லாம் நிவர்த்திக்க வழிதேட முயலுங்கள்.

"இந்து ஒருவன் உலகத்தி லிருக்கும் வரையில் சீதை மறக்கப்படாள். பல ராமர்களை நாம் பார்க்க முடியுமென்றாலும், வேறு ஒரு

# சாரதாவின் சட்டமும் சமய வாதப் போராட்டமும்.

ஸ்ரீமான் எஸ். சோமசுந்தர பாரதியார், M. A., B. L.,

அகில இந்திய சட்ட சபையில் திருவாளர் சாரதா கொணர்ந்த சிசுமண விலக்கு மசோதா, சமீபத்திற் சட்டமாகச் செய்யப்பட்டதை அறியாதாரில்லை. அந்தச் சட்டத்தால் மதங்களே அடியறுக்கப்பட்டு அழிந்து பாழ்படுவதாக ஆங்கிலப் புலமை நிறைந்த பல இந்தியர்கள்கூட நாள்தோறும் பிரலாபித்து வருகிறார்கள். இந்தச் சட்டத்தை உடனே மாற்றாத வரை இது அரசியலையே அடியோடு அழித்துவிட முயற்சி செய்வதாயும், அப்படி அருங்கேடு விளையுமுன்னே தங்கள் பெரு முயற்சியால், தாங்கள் சொல்லுகிறபடி இந்தச் சட்டத்தை ரத்துச் செய்துவிட வேண்டுமென்றும் இச் சமய வாதிகள் அரசாங்கத்தாரை அச்சுறுத்தி மிரட்டுகின்றனர். இந்த நிலையில் இச் சட்டத்தின் போக்கையும் அதை ஆக்ஷேபிப்பவர்களின் நோக்கையும் சிறிது விசாரிக்க வேண்டியது அவசியமாகிறது.

முதலில், நன்மை தீமைகளை யாராய்ந்து தத்தமக்குத் தீர்மானித்துக்கொள்ளும் சுதந்தரமற்ற வயது வராத சிறுவர்களை, அவர்களிஷ்டத்தைக் கூடக் கருதாமல் பிறர் அவர்களை ஆயுள் வரை மாற்ற

---

சீதையைப் பார்க்க முடியாது" என்று ஸ்வாமி விவேகானந்தர் பாரதப் பெண்மணிகளைக் குறித்துப் பேசுகையிற் கர்ஜித்திருக்கிறார். வருங்கால சுதந்திர இந்தியா—தரும இந்தியா—ஞான இந்தியா—வீர இந்தியா-நாகரீக இந்தியா பெண்களாலேயே உண்டாக்கப்படவேண்டியிருக்கிறது. இதை அறிந்து நாம் வேலையைச் செய்ய முன் வரல் வேண்டும்.



முடியாத விவாக பந்தத்துக் குட்படுத்துவதே தருமம் என்று எந்தச் சமயமாவது சொல்லுமா? அப்படிச் சொல்கிற வைதீக ஹிந்து சமயத்தில் மக்கள் எல்லாரும் மலராத சிறுமிகளை மணக் கயிற்றாற் கட்டித் தீரவேண்டுமென்று கூறவில்லை. ஏதோ பார்ப்பனர்களுக்கு மட்டும் அப்படி ஒரு விதி சுருதியில் இல்லாவிட்டாலும் பின் வந்த சில ஸ்மிருதிகளில் இருப்பதாகத் தற்கால வைதீக வேடதாரிகள் சிலர் வாதிக்கின்றனர். இவர்களில் வைதீக ஹிந்து சமயிகளான பல பிராமணர்கள் இவ் வாதம் தவறென்றும், மனு முதலான ஸ்மிருதிகளிலும்கூட ருதுமதி விவாகம் பார்ப்பனருள்ளிட்ட எல்லாருக்கும் சொல்லப்படுவதாயும் விவகரிக்கின்றனர். இவ்வுண்மை எதுவாயினும் ஆகுக. தருமம் கூறும் ஸ்மிருதி நூல்கள், காலதேச வர்த்தமானங்களை அனுசரித்து யுக்தி அனுபோகங்களால் மாற்றக்கூடியதும் மாற்ற வேண்டியதுமான அனுஷ்டானங்களைச் சொல்ல வந்தவைகளே தவிர, சமயத்துக் கடிப்படையான தத்துவங்களைப் பேசவந்தவை யல்ல. வேதத்தில் இவ் விதியில்லை. நாரதர் முதலிய பிற்கால ஸ்மிருதிக்காரர் ருதுமதி விவாகத்தையே பார்ப்பாருக்கும் வற்புறுத்தியிருக்கக் காணுகிறோம். மனுவிலும்கூட ருதுமதி விவாகம் நடந்தால் அது செல்லாதென்றாவது, அது சமய விரோதமானதென்றாவது சொல்லப்படவில்லை. சொல்லுவதாக வைத்துக்கொண்டாலும், ஸ்மிருதிகளின் முக்கிய நோக்கம் இடம் காலங்களுக்குத் தக்கபடி பொருத்தமாக ஆசாரங்களை மாற்றவேண்டுமென்பதே யாகையால், மனு விதியை மறந்து தற்கால நடு நிலை யறிவுக்குப் பொருத்தமான திருத்தங்களை அமைப்பது சமுதாய நலம் கருதுபவர் கடமையாகும். பல கோடி மாந்தருக்குப் பொருத்தமெனக் கொண்டபிறகு, பார்ப்பனருக்கு மட்டும் சிசுமணம் இன்றியமையாதது என்று ஹிந்து மதம் கூறுவதாகக் கொள்ளுவது அறிவுக்குப் பொருத்தமாகாது. இனி ஹிந்து மதம் போல விவாகத்தைச் சமய சம்ஸ்காரமாகக் கொள்ளாமல், எப்போதும் எல்லாருக்கும் வாழ்க்கை நலம் வளர்க்குமொரு ஒப்பந்தமாகக் கருதும் இஸ்லாம் மதத்திற்குச் சிசுமண விலக்கு எப்படி விரோதமாகும் என்பதுதான் சிறிதும் விளங்கவில்லை. இத்துணை வயதுகளில்தான் மனிதர்கள் மணம் செய்துகொள்ள வேண்டுமென்ற வரம்பே முஸ்லீம் சமய நூல்களெதிலு மில்லை.

மேலும் சிசுமணம் நல்லதென்று இந்தச் சமயத்திலெவர்களும் கூடச் சொல்லத் துணியவில்லை. வைத்திய உடற்கூற்று நூல் வல்லவரும், சமுதாய அனுபோக வாதிகளும், நடுநிலை அறிவுடையோர் அனைவருமே சிசுமணம் நல்லதில்லையென்று ஒருதலையாக உடன்பாடு கூறுகின்றனர். சமயத்திற்கும் விவாக வயதுக்கும் இன்றியமையாத தொடர்பு ஒன்றுமில்லை. இந்நிலையிலிவர்கள் அரட்டுக்கு அடிப்படை என்ன இருக்கிறது? அந்நிய அரசியலில் அரசாங்க அதிகாரிகளை அரட்டி மிரட்ட எதுவு முகவும் என்ற பொது உபாயம் தவிர வேறு நியாயம் எதுவும் காணப்படவில்லை. இதுமட்டுமல்ல, இச் சட்டமானது சிசு மணத்தை அறவே மறுப்பதாவாவது இருக்கிறதா? அதுவுமில்லை. சிசுமணத்தை விலக்கச் சிறிதளவு முயற்சி மேற்கொண்டது தவிர இச் சட்டம் அத்தீமையை மறுக்க வரவில்லை. குறித்த வயதுக்குக் கீழ்ப்பட்ட சிசுக்களைப் பிறர் மணச் சடங்குகளுக்குட்படுத்தி விட்டால், பழையபடி என்றும்போல் இச் சிறுவர் மாற்ற முடியாத கட்டுப்பாட்டுக் குட்பட்ட அடிமைகளாக இருக்கும்படி இந்தச் சட்டம் சொல்லுகிறது. வயது வராத சிறுவர் பொருளற்ற தங்கள் சிறு சொத்துக்களை விற்றால் அது செல்லாது. அவர்கள் செய்யும் மற்ற எந்த ஒப்பந்தங்களும் ஊர்ஜிதமில்லை. ஆனால் அவர்களிஷ்டத்தை எதிர் பாராமல் மற்றவர்கள் இந்தச்சிசுக்களுக்கு விவாகச் சடங்கு நடத்திவிட்டால் மட்டும் இவர்கள் என்றும் கட்டுப்பட வேண்டும். அச் சிசுமணம் செல்லாதென்று சாரதாச் சட்டம் மறுக்கவில்லை. ஐந்து வயதுச் சிறுவனுக்கு இரண்டு வயதுப் பெண்ணை மணமுடித்ததாக அவர்கள் பெற்றோர்கள் விழாச்செய்துவிட்டால் போதும். சட்டம் அவர்களை உடனே மணமுடித்த தம்பதிகளாகவே கருதிவிடும். அந்தக் கூலிக் கலியாணக் கேலியைக்கூடச் செல்லாதென்று சொல்லச் சட்டசபையும் அரசியலாரும் அஞ்சுகிறார்கள். வயது வராத பெண்ணைப் பிறர் மணம் செய்துகொடுத்து ருது சாந்தியான பிறகும் தன் வயது வந்தவுடன் அப் பெண் தன் விவாகத்தை மறுத்து விலக்கிவிடலாமென்று கருணையும் அறிவுமுள்ள மகமதியச் சட்டம் இடம் தருகிறது.

சாரதாச் சட்டம் ருது சாந்தி நடைபெறாத நிலையிற்கூடச் சிசு மணத்தை மறுக்கவில்லை. சிசுக்களை மணம் செய்வித்தால், அக் கொடிய செயலால் வரும் கெடுதிகளை, அச் சிசுக்களுக்கு மாற்றிவைக்க இச் சட்டம் இடம் தரவில்லை. ஆனால் அப்படி மணம் நடத்தின பெரியவர்களுக்குச் சிறிதளவு அபராதம் அல்லது வேலையற்று உண்டுறங்கி யிருப்ப




தற்கான வெறு மெய்காவல் இச் சட்டத்தில் விதிக்கப்படுகிறது. சிசு மணம் மறுத்தபாடில்லை. அதை நடத்தி வெறியாடும் சிலரை விலக்கச் சிறிதளவு முயலுகிறது. இச் சட்டமில்லாமலே மணச் செலவு ஆயிரக் கணக்காக விரயமிட்டு மகிழும் வைதிகர்களுக்கு அவ் விழாச் செலவிற்கூட ஒரு நூறு அல்லது இரு நூறு ரூபா கூட்டிச் செலவிடுவதில் வருமாபத்தென்னவோ? இச் சட்டப்படி சிசு மணத்தை முடித்துவிட்டு ஒன்று சொல்ப அபராதம் கொடுத்துவிடலாம் அல்லது அரசியலார் செலவில் வேலையில்லாமல் விருதாச் சோறுண்டு சிறுபோது அரச விருந்தினராயிருந்து வரலாம். மற்றப்படிச் சிசு மணம் பண்ணுவோர்களுக்கு இச் சட்டத்தால் வருங் கெடுதி ஒன்றுமில்லை. சமயத்தில் அழுத்தமான பற்றுடையவர்களுக்குச் சிறு தொகையைக் கூட்டிச் செலவிடக்கூட மனமில்லையா? அல்லது தங்கள் மதாபிமானத்தை இந்தச் சிறு அபராதத் தொகையளவுகூட விலை மதிக்கவில்லையா? தெரியவில்லை. முதற் குற்றம் அறியாமற் செய்பவர்களை, அதாவது சிசு விவாஹம் செய்பவர்களை முதிரா அறிவுடையோராகப் பாவித்து இனிமேல் நடத்தாதிருக்க, அவர்களுக்கு அபராதம் மெய்காவல் முதலிய எவ்வித தண்டனையுமில்லாமல் எச்சரித்து விட்டுவிட வேண்டுமென்று ஒரு திருத்தச் சட்டமும் கொண்டுவர மசோதா சட்ட சபையில் வருகிறது. எதைச் செய்யாமல் தடுக்க எப்போது எவரை எச்சரிப்பதோ? அவ்வெச்சரிப்பால் யாது பிரயோஜனமோ? என்ன விமோசனமோ? தெரியவில்லை. வேண்டுமென்று சட்டத்தை மீறி இரு சிறுவர்களை என்றைக்கும் மீளாத மணப் படுகுழியில் வீழ்த்திய பிறகு அப் பாவிகளை எச்சரித்தாவதென்னே? எச்சரியாததிலென்னே? இத் திருத்தச் சட்டமும் வந்துவிட்டால் சிசுமண விலக்கு முயற்சியின் முடிவுதான் ஏதோ? உற்றுப் பார்த்தால் இச் சட்டத்தால் சிசுமணம் தடுக்கப்படவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். அப்படியிருக்க இச் சட்டத்தால் தங்கள் சமயமே அழிந்துவிடுவதாக அழுபவர்களின் மாயத்தை எப்படி மதிப்பது?

அன்றியும் சிசு மணத்தால் மட்டும் நிற்கும் சிசுக்கள் மணவாமலிருப்பதனால், அல்லது அச் சிசு மணம் சிறிதளவும் விலக்க முயற்சி

# அழகும் ஆரோக்கியமும்.

திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்.

## II



### நமது முகங்களை அழகுசெய்யும் விதம்

ஒருவன் தனது குற்ற மற்ற மகனை வாழ்த்தி வழியனுப்பிய காலையில் "நீ உனது முகத்தின் அழகைத் திரும்பக் கொண்டுவரவேண்டும்" என்று கூறினான். ஒரு மனிதனுடைய முக அழகு அநேக வருஷங்களாகச் செய்யப்பட்ட வேலைப்பாடு. அவனது வாழ்க்கையின் சம்பவங்கள் அவனது முக அழகைத் திருத்துகின்றன. அவைகள் உண்மையில் அவனுடைய முகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. ஜனங்கள் எவ்விதமாகத் தோற்றுகிறார்களோ

---

க்கப்படுவதனால் அது பற்றி இறந்துவிடும் சமயங்களிருந்தால், அச் சமயங்கள் இருப்பதிலும் விரைவில் இறப்பதுவே நலமன்றோ? சமுதாயத்தை நாசப்படுத்தி மக்களை மணமற்ற நடைபிண மாக்கிவரும் சிசு மண உணவால் வாழும் ஒரு மதமுண்டானால் அதையே முதலில் பலிகொடுத்து இந்தியச் சமுதாய நல்வேள்வி நடத்துவதே நன்மையாகும். ஆனால எந்த மதமும் சிசுக்களை மணப் பலி கொடுக்கும்படி தூண்டவில்லை. அத்தகைய விதிகளை உண்மைச் சமயநூல்களிற் காணவுமுடியாது. மடியா மடமையாற் பீடிக்கப்பட்ட இந்திய சமுதாயத்தில் நடுநிலை யறிவற்ற மதம் பிடித்த சில மத வாதிகளை ஒழித்து, வேறு யாரும் இச் சட்டத்தில் எவ்வித நியாய ஆக்ஷேபனையும் கூறுவதற்கில்லை என்பதே சிந்திப்பார் எல்லார்க்கும் ஒப்பமுடிவதாம் துணிபாகும்.

---



அவ்விதமாகவே இருக்கிறார்கள். அவ்விஷயத்தை நாம் எல்லோரும் நமது இயற்கையுணர்வால் அறிகின்றோம். சிறு குழந்தைகளும் சில உயர்தர மிருகங்களும் அந்நியன் ஒருவனைக் கண்ட மாத்திரத்தில் அவனுடைய முகத்திலிருந்து அவனது நல்ல குணத்தையோ தீய குணத்தையோ அறிந்து அவனுக்குச் சமீபத்தில் செல்கின்றன; அல்லது அவனை விட்டுத் திரும்பி விடுகின்றன.

"நாள்தோறும் முகத்தோற்றத்தால் பாதிக்கப்படாத ஒரு மனிதனையும், தான் மிக விரும்புகிற அல்லது வெறுக்கிற ஒரு முகத்தைத் தன் மனத்துள் உருவகப் படுத்தாத ஒரு மனிதனையும், அந்நியன் ஒருவனுடன் சேர்ந்த முதல்தடவையில் அவனது முகக் குறிப்பைக் கவனித்தும் சிந்தித்தும் ஒப்பிட்டு அவன் இத்தகைய மனிதனென்று தீர்மானிக்காத ஒரு மனிதனையும் இவ்வுலகத்திற் காண முடியாது" என்று லாவேற்றர் என்னும் ஐரோப்பிய பண்டிதர் ஒருவர் கூறுகின்றார்.

தனது ஒழுக்கத்தை உண்டுபண்ணுகிறவன் தானே என்பதையும் தனது மனத்தை ஆளுகிறவன் தானே என்பதையும் நாம் ஒப்புக்கொள்வோமாயின், தன் தன் முகத் தோற்றத்திற்குத் தானே பொறுப்பாளியென்பதை மறுக்க முடியாது. ஒரு முகம் தனது வடிவத்திலும் தோற்றத்திலும் எவ்வளவு அழகு எய்ததாயிருந்தாலும் அவ்வழகைக் கூட்டுவதும் குறைப்பதும், இலக்ஷணமாக்குவதும் அவலக்ஷணமாக்குவதும் அதனைக் காட்டிக்கொள்ளும் தன்மையைப் பொறுத்திருக்கிறது. நமது வாழ்வின் தொடக்கத்தில், அதாவது நினைப்புக்கள் ஒழுக்கத்தையும், மனம் முகத்தோற்றத்தையும் பாதிக்குங் காலமாகிய இளமைப் பருவத்தில் நாம் நமது முகங்களின் விளக்கங்களை உண்டுபண்ண ஆரம்பிக்கிறோம். ஒரு புருஷன் அல்லது ஒரு ஸ்திரீ முப்பது வயதை அடையுங் காலையில் அவருடைய முகத்தோற்றம் அநேகமாக ஸ்திரமாகி விடுகின்றது. அநேக வருஷங்களாகச் செய்யப்பட்ட முகத் தோற்றத்தை—அக ஆன்மாவைப் புறத்திற் காட்டும் ஆபாசத்தை முப்பது வயதுக்குப் பின்னர் மாற்றவேண்டுமானால், மனத்தை அதிகமாகப் பயிற்ற

வேண்டும்; புதிய குணங்களைப் பிடிவாதமாக வளர்க்க வேண்டும். இனிய முகங்கள் பொதுவாக இளமைப் பருவத்திற் செய்யப்படுகின்றன. அவை பல புன்சிரிப்புகளுடையவும், சந்தோஷ நினைப்புக்களுடையவும், மனத் திருப்திகளுடையவும் சேர்க்கைத் தோற்றமேயன்றி வேறல்ல. மனத்தின் ஒவ்வொரு சலனமும் முகத்தில் ஒவ்வொரு பதிப்பை உண்டுபண்ணுகின்றது. அப் பதிப்பு உடனே கண்ணிற்குப் புலப்படுவதில்லை. ஆனால், அச் சலனத்தை மனமானது திரும்பத் திரும்பக் கொண்டபோது முகமானது அச் சலனத்திற்குத் தக்கவாறு இலக்ஷணத்தை அல்லது அவலக்ஷணத்தை அடைகின்றது.

மனம் சகல வகைக் கலக்கங்களினின்றும், முகத்தின் ஆகிருதியைப் பாதிக்கும். ஒவ்வொரு நினைப்பினின்றும் விடுபட்டாலொழிய முகம் ஒருபோதும் பூரண அழகை அடையமாட்டாது. டாக்டர் ஜே. எச். லாகு என்னும் ஓர் அறிஞர் "அழகு, முகத்தின் தோலைமாத்திரம் சம்பாதித்த தன்று; அது சரீரப் பாங்குகளினும் மனப் பாங்குகளையும் ஒழுக்கங்களையும் அதிக முக்கிய ஆதாரங்களாகக் கொண்டுள்ளது. தகுதியற்ற ஓர் ஒழுக்கத்தை மறைத்து வைத்துக்கொண்டிருக்கிற ஒரு முகமானது அழகுள்ளதாயிருக்க முடியாது. அகத்தையும் முகத்தையும் எவ்வளவு அசட்டையோடு கடவுள் சிருஷ்டித்திருந்தாலும், அகத்தின் நல்ல ஒழுக்கம் முகத்தில் கெட்டதாக வெளிப்பட மாட்டாது. முகமானது அகத்தின் கண்ணாடி; ஒழுக்கத்தின் பிரதி பலிப்பு. ஒழுக்கத்தின் உயர்வோ அல்லது தாழ்வோ, சுவரில் எழுதப்பட்ட எழுத்துப்போல முகத்தில் நன்றாகத் தெரியும். முகத்தோற்றத்தால் அக ஒழுக்கத்தை அறிவதற்கு அவதார புருஷர்கள் வேண்டுவதில்லை" என்று கூறியிருக்கின்றனர்.

## முகத்திருத்த மருமங்கள்.

நாம் அநேக வருஷங்களாக வேலை செய்து அடைந்திருக்கின்ற நமது முகங்களின் ஸ்திரமான தோற்றங்களைத் திருத்துதல் முடியாத காரியம்போல முதலில் தோன்றும். அது மரணத்தை நீக்கும்



மருந்தொன்றைக் கண்டு பிடிக்கும் பொருட்டு மத்திய நூற்றாண்டில் தமது பொருளையும் காலத்தையும் வீணாக்கிய சில தத்துவ சாஸ்திரிகளின் செயலைப் போன்றதாகத் தோன்றும். என்றாலும் முகத் திருத்த சாஸ்திரத்தை ஆழ்ந்து ஆராய்ந்து நோக்குங்கால் அது செய்து முடிக்கத்தக்க ஒரு காரியமென்றே தெரியவரும். இது முன் நாம் கூறியபடி மனமானது முகத் தோற்றத்தைச் சிருஷ்டித்துத் திருத்தும் ஒரு சக்தி வாய்ந்தது. படம் பிடிக்கும் மெல்லிய தகடுகளில் ஒளி வேலை செய்தல் போல, முகத்தின் மெல்லிய பாகங்களில் மனத்தின் சக்தி வேலை செய்கின்றது. உண்மையில் முகமானது, வழக்கமாகக் கொள்ளப்பட்ட நினைப்பும் மனப் போக்குமாகிய இவ் விரண்டின் படமேயாகும். ஆதலால் முக அழகை அடைய விரும்புகிறவர், முதலில் தமது அக நிலைமையை ஆராய்ந்து பார்க்கவேண்டும். எவை யெவை துன்ப முகத் தோற்றத்தை உண்டுபண்ணுகின்றன, எவை யெவை இன்ப முகத் தோற்றத்தை உண்டு பண்ணுகின்றன என்பதை அறியும் பொருட்டுத் தமக்கு வழக்கமாக ஏற்பட்டுள்ள நினைப்புகளையும் மனச் சுபாவங்களையும் காணவேண்டும். துக்க நினைப்புக்களால் சிருஷ்டிக்கப்பட்டுத் துக்க மனங்களிலிருந்து வெளிவந்துள்ள துக்க முகங்களையுடைய மனிதர், இவ்வுலகத்தில் இருக்கின்றனர். இத் துக்க முக மனிதர் இவ் வுலகத்தைப்பற்றிய ஒவ்வொன்றையும் எப்பொழுதும் தளர்ச்சியோடு நோக்குகின்றனர். அதாவது, அவர் தம் ஆன்மாவின் மீது உற்சாகமாகிய சூரியப் பிரகாசம் படாதபடி தம் ஆன்மாவின் சாளரக் கதவுகளை அடைத்துவிடுகின்றனர். அத்தகைய மனிதர் தம் சுபாவத்தை (அது சுபாவமன்றி வேறன்று)த் தொலைப்பதற்குத் தம் மனோ சக்தியை மிக அதிகமாக உபயோகிக்க வேண்டும். சந்தோஷமும் உற்சாகமு முள்ள ஒரு மனச் சுபாவத்தை உண்டுபண்ண அநேக நாட்கள் செல்லக் கூடும். ஆனால் அதனை உண்டு பண்ணிய பொழுது அது முகத்தின் தோற்றத்தை முற்றிலும் மாற்றிவிடும்.

# வீர சுதந்திரம்.

திருவாளர் P. கந்தநரசிம்மன் அவர்கள், B. A., B. L.,

உலகெல்லாம் சுதந்திர முழக்கமே கேட்கிறது. உலக மக்களிடம் தற்காலம் சுதந்திரத் தாகமும் சுதந்திரப் பசியுமே அதிகரித்து நிற்கின்றன. சுதந்திரம் பெறவேண்டி எத்துணை முயற்சிகள், எத்துணைச் சாதனங்கள், துறைகள், முறைகள் ஆகியவைகளை மனிதன் கண்டு பிடித்துக் கையாளுகிறான்! அதற்காக எத்துணைத் தியாகம், எத்துணைத் தைரியம், வீரம், தீரம், உறுதி, ஊக்கம், துன்பச் சகிப்பு ஆகியவைகளைக் காட்டுகிறான்! இந் நிகழ்ச்சிகளைக்கொண் டாராயுமிடத்துச், சுதந்திரமே மனிதனுக்கு அவன் விரும்பும் இன்ப நிலையைக் கொண்டாடும் பெற்றியதென்றும், மனிதனுடைய வளர்ச்சிக்கும் முற்போக்கிற்கும் அவனிடத் துறைந்து மறைந்து கிடக்கும் அரிய பெரிய குணங்கள் வெளிப்பட்டு உலகிற் சிறந்து விளங்குவதற்கும் சுதந்திரமே காரணமா யிருக்கிறதென்றும விளங்கும். மனிதன் உலகத்துப் பல தேச சரித்திரங்களைப் படித்ததினின்றும் தன்னைக் கட்டுப்படுத்தி வருத்தும் அகப் புறத் தளைகளை உடைத்தெறிந்து சுதந்திர நிலையடையவே போர் முதலியவைகளி லீடுபட்டானென்றும், உண்மையான சுதந்திர நிலையிலேயே அவனது கல்வி, அறிவு, ஞானம் இவைகள் வளர்ந்தன வென்றும் அறியப்படும். ஆகவே, இவ்வுலக வாழ்வினை அழகு படுத்துவதும், அவ் வாழ்க்கையின்பத்தை நுகரச்செய்ய வல்லதும், மனித வாழ்வின் சீரிய நோக்கிற்கு அவனைத் திருப்பி அதனைப் பெறும் வழியில் அவனைக் கொண்டு செலுத்துவதும் சுதந்திரம், சுதந்திரமே. ஆனதால் 'கண்ணிலு மினியது சுதந்திரம்' என்றார் நம் சுப்ரமண்ய பாரதியார்.



ஒருவன் தான் விரும்பியதைப் பெறத் தன்னாலான வழிகளில் எல்லாம் முயலும் உரிமை அல்லது பாத்யதைதான் முதற் பிறப்புரிமை. உதாரணமாக ஒருவன் தான் வாழவேண்டும் என்று விரும்பி அதற்கு முயற்சி செய்யும் இயற்கையான அவ் வுரிமை பிறப்புரிமையாகும். அவ் வுரிமைக்குப் பங்கம் அல்லது தடை இல்லாதிருப்பதே சுதந்திர மென்பதாகும்.

மனிதன் தனிப்பட்டு வசிப்பவனல்ல. ஆனால் அவன் மன்பதையிடை மக்கட் சமூகத்தில் வதிபவனாகையால், அவனுக்குத் தான் விரும்பியபடி எதையும் செய்யும் முழுச் சுதந்திரம் கிடையாது. ஏனெனில், தன்னுரிமையைத் தான் அநுபவிக்கையில் பிறர் உரிமைக்குப் பங்கம் விளைவியாதிருக்க வேண்டிய கடமை அவனுக்குண்டு. அம் முதற் பெருங் கடமையை மறுக்காது, ஆனால் அதை மதித்து நடந்துகொள்வதிலேயே அவனிடத்துள்ள பகுத்தறிவு விளங்கி, நியாயம் பொலிந்து, மனிதன் என்ற அவன் பெருமை வெளிப்படுகிறது. கரைகளுக்குட்பட்டுப் பாயும் ஆற்று நீர், வாய்க்கால் வழியோடி வயல்களை நிரப்பி விளைவுக்குச் சாதனமாவது போலக் கடமைகளாகிய வரம்பிற்குட்பட்ட சுதந்திரமே மனிதனுக்குப் பயன் தரும். கரைகளின்றி, அல்லது கரைபுரண்டு ஓடும் வெள்ளத்தால் அழிவும் பயனில்லாமையுமே விளைவதுபோல, கடமைகள் அற்ற அல்லது கடமைகளை மறுத்து விளங்கும் சுதந்திரத்தால் நற்பயன் விளையாது.

மனிதனுக்கு இவ் வுலகும் இவ் வுலகில் உள்ள யாவும் சாதனங்களே. ஆத்ம சொரூபமாக அல்லது ஏதோ ஒரு சொல்லமுடியாத (Entity) ஒன்றாக இருக்கும் மனிதனுக்கு அவன் உடம்பே ஒரு சாதனமென்பது நுண்ணறிவால் நுனித்து ஆராய விளங்கும். உயிர் வாழ்வதற்கான சுவாசம் (காற்று), நீர், உணவு இவைகளும் சாதனங்களே. மேலும், அவனுக்கு இன்பம் பயக்கக் காரணமாயிருக்கும் கலை, சித்திரம், சங்கீதம், வண்டி, கப்பல், வானவூர்தி (Aeroplane), தந்தி, காந்தவிசை (Electricity), புற உலக சக்திகள் இவைகள் யாவும் சாதனங்களே. உருவாயிருக்கும் இச் சாதனங்களைப் போல, அருவாயிருக்கும் சுதந்திரமும் அறிவு, அன்பு, அருள், அறம், உரிமை, கடமை இவைகளைப்

போல ஒரு சாதனமே யாகும். ஒரு பெரும் வெளியில் பறந்தோடக்கூடியதான நீராவியைச் சில கட்டுகளுக்குட்படுத்தி இயக்கினால், அதனால் சக்கரங்கள் சுழன்று இரயில், கப்பல் முதலியன செல்வது போலச், சுதந்திரத்தையும் மனிதன் சில கட்டுக்களுக்குட்படுத்திக் கொண்டாலேயே அது அவனுக்கு நலந்தருஞ் சாதனமாகும். அக்கட்டுகளே அறம், அன்பு, அருள் அல்லது கடமை, சமத்துவம் (Duty, Equality, Fraternity) என்பன. இக் கட்டுகள் இல்லையேல், அச் சுதந்திரம், மனிதனை விழுங்கவந்த பேயாகித் துன்பத்திலாழ்த்தும்.

மனிதன் மானத்தோடும், பிறருக் கடிமையா யில்லாதும், தன்னுரிமைகளைத் தான் செலுத்தக் கூடுமானதுமான சுதந்திர வாழ்விலேயே சுகத்தை நுகருவ தியற்கையானதால் ' சுதந்திர வாழ்வே சுக வாழ்வு" எனப்படும். எனவே, உலகில் பல தேயங்களில் பல காலங்களில் தோன்றிய அறிஞர்கள், கவிகள் முதலோர் சுதந்திரத்தைப் பலப் பல விதமாகப் போற்றிப் பாடி வழுத்தி யிருக்கிறார்கள். மேனாட்டாரிடம் 'சுதந்திரம்!' என்றாலேயே அவர் உடல், உள்ளம், உயிர் யாவும் ஊக்கங்கொண்டெழும். நியூயார்க் பட்டணத்தில் ஓருயர்ந்த ஸ்தம்பமிருக்கிறது. கப்பலில் வெகு தூரம் வருவார்க்கும் புலப்படும்படி வெகு உயரமானதொன்றாம் அதன் உச்சியில் ஒரு பெண்ணுரு தன் வலது கையால் ஒரு சுடர் தூக்கி வைத்துக்கொண்டு நிற்கும் பாவனையிலிருக்கிறது. அதற்கு அமெரிக்கர்கள் சுதந்திரம் (Liberty) என்று நாமம் சூட்டியிருப்பது அவர்களின் சுதந்திர உணர்ச்சியைக் காட்டுகிறது.

சமீபகாலத்தில்தான் அவ் வுணர்ச்சி நம் நாட்டிலும் தீவிரமாகப் பரவியிருக்கிறது. அவ் வுணர்ச்சி வெள்ளத்தில் முழுகித் திளைத் தாடிப் பாடிய சுப்ரமண்ய பாரதியார் பாடல்களைத் தமிழன்பர்கள் படிப்பார்களாயின் அவர்களைப் பற்றிய அடிமை உணர்ச்சி (Slave-mentality) மங்கிச், சோம்பல் நீங்கி எழுந்து, சுதந்திர வாழ்வில் திகழ்வார்கள். அவர் சுதந்திரத்தைப் பற்றிப் பாடிய பாட்டுகள் நெஞ்சையள்ளும் பெற்றியனவே. கவியானதால் சுதந்திரத்தை ஒரு தேவதையாக அவர் உருவகப்படுத்திப் பாடிய பாட்டுகளை யிங்கே தருகிறோம்:—



"நின்னருள் பெற்றிலாதார் நிகரிலாச் செல்வரேனும்
பன்னருங் கல்விகேள்வி படைத்துயர்ந் திட்டாரேனும்
பின்னரும் எண்ணிலாத பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கைபாழாம் அணிகள்வேய் பிணத்தோடொப்பார்."

"தேவி! நின் ஒளிபெறாத தேயமோர் தேயமாமோ
ஆவியங் குண்டோசெம்மை அறிவுண்டோ, ஆக்கமுண்டோ
காவிய நூல்கள்ஞானக் கலைகள் வேதங்களுண்டோ
பாவிய ரன்றோநின்றன் பாலனம் படைத்திலாதார்?"

ஒரு பாட்டின் பொருள் மனதிற் படவே, உணர்ச்சியெழும்படியான இசை, மெட்டு அல்லது இராகத்தைக் கொண்டு பார்த்தாலும் பாரதியார் பிறவிக் கவிஞன் (Born poet) என்பது தென்படும். "சுதந்திரப் பெருமை" என்பதைப் பற்றிய ஏழு பாட்டுக்களை அவர் 'தில்லை வெளியிலே கலந்துவிட்டாலவர் திரும்பியும் வருவாரோ' என்ற சாதாரண, ஆனால் கம்பீர மெட்டில் பாடியிருக்கிறார். அவைகளை இசையோடு பாடக் கேட்டால் ஒருவருள்ளம் இன்பத்தேன் நிறையப்பெற்று வீர ஒளி வீசும். அவைகளில் முதற் பாட்டை நான் வாய்விட்டும் மனதினுள்ளும் பாடிப் பாடிப் பாடியே ஒரு நாள் "அதென்ன வீரசுதந்திரம்?" என்பதாராய வேண்டுமென்றுட்கார்ந்து இக் கட்டுரையை எழுதத் துவங்கியது. சுதந்திரம் என்பதற்கு 'வீரம்' என்ற அடைமொழி தந்த அவர் பெருமை என்னுள்ளத்தைக் கவர்கிறது. நம் நாட்டு நாகரிகம், இலக்கியம், இதிகாசம் இன்னும் பல சிறந்தவைகளின் உட்பொருள்கள் யாவும் 'அவ் வீர சுதந்திரம்' என்பதில் மறைந்தொளிர்கின்றன என்பேன். அவ்வுட்பொருள்களை விரிவாக அடுத்து வரும் பாடல்களில் பாடியிருக்கிறார். அவர் எழுதிய சுதந்திரம்-விடுதலை ஆகியவைகளைப் பற்றிய பாடல்களைப் படித்து அவைகளை அறிக.

சுதந்திரம் என்பதைப் பற்றிச் சில முக்கிய குறிப்புகள் கூறியாய்விட்டதால் இனி "வீர சுதந்திரம்" என்பதென்ன என்றறியவும் வீரம் என்பது என்ன? வாழ்வில் அது எப்படி இன்றியமையாதது? என்று ஆராயவும் வேண்டியிருக்கிறது.

'வீரம்' என்பது ஒருள்ள உணர்ச்சி. குறித்துக்கொண்ட ஒன்றைப் பெற அதைப் பெறுவதன் முன்னர் ஏற்படக்கூடிய இடர், இன்னல், இடுக்கண் ஆகியவைகளினால் பயப்படாது மனந் தளராது, சகிப்புடன் தன் முழு ஆற்றலைச் செலுத்தித் தான் முன் செல்ல முயலும் குணமோ அல்லது மன நிலையோ வீரம் என்பதாகும். முயற்சியிற் காட்டும் குணமே யன்றி வெற்றியாகிய முடிவை மாத்திரம் பற்றிய குணமன்று வீரம் என்பது.

வெற்றி பெறினும் பெறாவிடினும் முழுப் பலத்தோடு பின் வாங்காது "போர் செய்து மரிப்பவர் பெறுவது வீர சுவர்க்கம்' என்ற நம் நாட்டு வழக்கும் இங்குக் கவனிக்கத் தக்கது. ஆகவே, வெறும் உடல் தோற்றத்தால் மட்டுமன்றி, இந்த மன நிலை-அல்லது இவ் வுள்ளத் துயர்ந்த வுணர்ச்சி மிகுந் திலங்குபவர்களையே உலகம் 'வீரர்' என்றழைக்கிறது. கஷ்டப்பட்டுப் பெறும் தங்கம், வயிரம், போன்ற பொருள்களுக்கே அருமையும் பெருமையும் மிகுதியு முண்டாவது போலக், கஷ்டங்களைப் பயப்படாது சகித்துத் தான் கோரியதைப் பெற்று வெற்றிகொண்டவர்களையே உலகம் 'வீரர்' எனப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடும். அது இயற்கையே. 'அரிகரப் பிரமாதிகட்கும் ஜெயிக்கமுடியா அசுரனைத் தேகங் கிழித்து வடிவேலினால் இருகூறு செய்து, அமரர் சிறை தவிர்த்த' முருகனைத் தமிழ்ப் பண்டைப் பெரியோர்கள் 'மயில் வீரா!' என் றழைத்ததும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. பழைய உலகம் செல்வந்தர்களைப் பாராட்ட வில்லை. ஆனால் வீரர்களையே பாராட்டியது. உரோமர்கள் போரில் வெற்றி பெற்று வந்த வீரரை, அலங்கரித்துத் தூக்கிக்கொண்டு நகர் புகும் வைபவ வர்ணனைகளும், மார்பிற் காயம் பட்டுக் குருதி சோரப் போர் புரிந்து வெற்றியுடன் திரும்பியவர்க்கு மாலை சூட்டிக் கொண்டாடிய நம் நாட்டுத் தமிழ் நாட்டுச் சரித்திரமும் பழைய வீரர் வழிபாட்டைத் தெரிவிக்கின்றன வன்றோ? இராமாயணம், பாரதம், பாகவதம், ஒடீஸி, இலியட் போன்ற பழைய நூல்கள், காவியங்கள் இவைகளிலும் போர் நிகழ்ச்சிகளே விரித்துரைக்கப்பட் டிருக்கின்றன. ஏனெனில் பழைய காலத்தில் நாகரீகம் முதிராத நிலையில் போர் நிகழ்ச்சிகளே



ஓங்கி யிருந்தன. மேலும் போரே வீரம் என்பதான அரிய பெரிய உண்மைகளை உலகுக் குரைத்துப் புகட்ட நினைத்த அறிஞர் கவிஞர் புலவர்களும் தத்தம் நூல்களில் போர்ப் புகழ்ச்சியையே சாதனமாகக் கொண்டனர் போலும். மேலும், தற்காலங்கூட நம் மனம் ஒருமையுடனிருந்து கவனிக்க ஏதுவாயிருப்பது ஒரு போர்க் கதையல்லவா? அப்படி யிருக்கப் போர் மலிந்த பழைய காலத்தார் மனதிற் கேற்றது போர்க்கதையே. ஆனதால் பழைய நூல்களில் போர் நிகழ்ச்சிகள் பெரிதும் கூறப்பட் டிருக்கின்றன. நிற்க, வாழ்வே மனிதனைத் தன்னுடைய உண்மை வீரத்தைக் காட்டும்படி அவனுக்கு ஒரு போரழைப்பை (Challenge of life)த் தருவதாகையால், கத்தி முதலிய கருவிக ளில்லாத காலத்தும் போருணர்ச்சி மனித வுள்ளத் திலிருந்தே வந்திருக்கிறதன்றோ? இவ் வுணர்ச்சிக் கண் கொண்டு கந்த புராணம் முதலிய நூல்களைப் படித்தால் பல இயற்கை யுண்மைகள் (அரக்கர் அசுரர் என்ற பல) சிலேடைப் பொருள்கள் வாயிலாக உரைத்திருப்பது தெரியும்.

போர் அல்லது சண்டைகளி லீடுபட்டவர்களிடம் மாத்திரம் வீரம் விளங்கும் என்பதல்ல. அல்லது போர்க் காலங்களில் மட்டும் வீரம் விளங்குகிற தென்பதல்ல. அதாவது போர், என்றும் வீரம் காட்டுவதற்கேற்ற சிறந்த சந்தர்ப்பமானதா யிருந்தாலும், சாதாரண சமாதான காலங்களிலும், போரிற் றலைப்படாது நின்றொதுங்கியவர்க ளிடமும், வீரம் செறிந்து விளங்குவ துண்டு. உலகம் போற்றும் மகான்களைப் பற்றி ஆராய்ந்து பார்த்தால் இவ் வுண்மை புலப்படும். அவர்களில் எவரேனும் இடர், இடுக்கண், இன்னல் இன்னும் பல பிற துன்பங்களை அடையாமலும், பொறுமை, சகிப்பு, தீரம் இவைகளைக் காட்டாமலும் விளங்கினார்களா? இல்லை. அவர்கள்காட்டிய வீரமன்றோ அவருக்கு மகத்வம் தந்து அவரை மகான்களாக்கியது? மணிமுடி, அரியாசனம், அழகிய அரண்மனை, அருமை மனைவி, மகன் ஆகிய அனைத்தும் விட்டுத் துறந்து காடேகி விரதத்துடனமர்ந்து கடுந்தவம் புரிந்து குறிக்கோளைக் கண்டனுபவித்த புத்தர் பெருமானிடமும், உயிர்களுய்யச் சிலுவையிலும் உயிர் துறந்த இயேசு நாதரிடமும், கல்லடிபோன்ற கடுந் துன்பங்கள்

சகித்த மகம்மது நபிநாயக மவர்களிடமும் இவ் வரும் பெருங் குணமாகிய வீரமன்றோ ஒளி வீசுகிறது. மேலும், ஆண்டவனுக்கெனவும், ஆண்டவன தன்பர்க்கெனவும் தற்சுகத்தைப் பாராது, பிறர் நலம் நாடித் தனக் கருமையான கண், கை, காதலி, குழந்தை இவைகளையும் ஈந்த நாயன்மார்களிடம் இவ் வீரமன்றோ செறிந்து விளங்குகிறது. மனோதத்துவக் கண் (Psychological eye) கொண்டு பார்த்தால் பெரிய புராணமும் ஒரு வீரர் புராண மென்பது தெளிவாகும். அதைப் பாடிய சேக்கிழார் பெருமான், நாயன்மார்களிடம் அக் குணத்தைக் கண்டு ஆச்சரியமுற்றே அவர் அடியார்களின் "வீரமென்னால் விளம்புதற்கெளிதோ" என்றார்.

தற்காலத்திலும், பலத்த ஆராய்ச்சி செய்து சிரமப் பட்டு உலகத்து நோய் தீரும்படி மருந்து கண்டுபிடித்தவர்க்கும், தற்பெருமை, தன்னலம் ஆகியவைகளைப் பொருட்படுத்தாது பிறர் நலத்தின் பொருட்டு உலகுக்குத் தன் உடல், உரை, உறுபொருள் ஆகியவற்றால் பெரிய உபகாரம் செய்தவர்க்கும் அதாவது பொதுவாக இடர் தீர்த்தவர்க்கும், இன்பம் வளர்த்தவர்க்கும் போரில் வெற்றி யடைந்தவர்க்கு அளிக்கின்ற (Knight) வீரன் என்ற பட்டமளிக்கப் படுவதும் நோக்கத்தக்கது. நிற்க,

இனி வாழ்க்கைக்கு வீரம் இன்றியமையாததோ வெனில், வீரத்தோடு வாழும் வாழ்க்கையே வாழ்க்கை என்பேன். அஃதில்லா வாழ்வு வாழ்வல்ல. உடல் வலிமை புறைந்தவனாயினும், வீரமற்று வதிபவனை வாழ்வில்லாத நடை பிணமே என்னலாம். உண்மையான வாழ்க்கை என்பது சாதாரணமல்ல, இலேசல்ல. அது சந்தடியற்ற சாத்மீகப் போராட்டமே யாகும். (Life is not anaut like that of dancer's but like not of a wrestlers in which you must be prepared for unexpected onslaughts— Marcus Aurelius) மார்க்கஸ் ஆரீலியஸ் என்ற ஒரு உரோம சக்ரவர்த்தியானவர் வாழ்வு நாட்டியம்போ லல்ல; அது குஸ்திப் பந்தயம்போல்வது; ஆதலால் அதில் நீ எதிர்பாராத குத்துகளுக்கு முன் ஜாக்கிரதையுட னிருக்கவேண்டும் என்று கூறுகிறார். அதாவது அரிய சோதனைச் சந்தர்ப்பங் (Psychological



moments) களில் வீரத்தைக் காட்டவேண்டு மென்பதே. அங்ஙனம் காட்டியவர்களே உலகிற் பெருமையும், புகழும், சீரும், சிறப்பும் பெற்ற பெரியோர்களாவர்.

முன்பு ஓரிடத்தில் மனிதனுக்கு இவ் வுலக வாழ்க்கையே ஒரு சாதனமென்றேன். இச் சீரிய சாதனமும், அரும்பெரும் சந்தர்ப்பமுமான மனித வாழ்வி (Grand opportunity of life)ல் வீரத்தைக் காட்டாது வேறெங்குதான் எப்போதுதான் காட்டுவது? இங்குக் காட்டாவிடில், இவ் வாழ்வினாற் பெறப்படு மொப்பற்ற இன்பத்தைச்-சுயராஜ்யத்தின் சுவையை மனிதன் எப்படி நுகரவல்லான்? அவ் வீர சுவர்க்கத்தை எப்படி நண்ணுவான்? ஆகவே, வீரவாழ்வே வாழ்வு எனப்படும்.

வீரத்திற்கும் தியாகத்திற்கும் தொடர்புண்டு; தியாகத்திற்கும் உண்மைக்கும் தொடர்புண்டு; உண்மைக்கும் அன்பிற்கும் தொடர்புண்டு; அன்பிற்கும் அருளுக்கும் தொடர்புண்டு; அருளுக்கும் இயற்கைக்கும் தொடர்புண்டு. எனவே, வீர வாழ்வென்பது இயற்கையோ டிசைந்த வாழ்வே யாகும். சாதாரண மனிதர் முதலாகத் தவஞ் செயும் முனிவரேயுள்ளிட்ட யாவரும் ஏதோ ஒரு விடுதலையைத் தத்தமக்கு வேண்டிய ஒரு சுதந்திரத்தை நாடியவண்ணமா யிருக்கிறார்கள். ஆகவே மக்க ளியற்கையாக விரும்புவது சுதந்திரமே யானதாலும், மக்களின் வளர்ச்சிக்கும், முற்போக்கிற்கும் சிறந்த சாதனமா யிருப்பது சுதந்திரமே யானதாலும், இவ் வியற்கை செறிந்த சுதந்திர வாழ்வே வீரவாழ்வாகும். அவ் வீர வாழ்வே சுதந்திர வாழ்வாகும். அதாவது வாழ்வில் வீரமும் சுதந்திரமும் சேர்ந் திலங்க வேண்டும். இவ்வுண்மையைக் குறிக்கவே பாரதியார் "வீரசுதந்திரம் என்று பாடினார் என்றெண்ணுகிறேன்.

ஓரிளஞ்செடியு மல்லவா தனக் கின்றியமையாது வேண்டிய காற்று, நீர், ஒளி இவைகளைப் பெறுமாறு வேர்களைக் கீழே அனுப்பியும், முளையால் தரையைப் பிளந்து வெளிப்பட்டும் முயன்று அம் மூன்றையும் பெற்றவுடன் சுதந்திர மடைந்த

தென்னைப் பூத்துக் காய்த்துக் கனியீந் துதவுகிறது? அப்படி யிருக்கப் பகுத்தறிவாட்சியிற் பொலியும் மனிதன் தன் கூர்த்த மெஞ்ஞானத்தா லுணர்ந்த இன்றியமையாத உரிமைகளை அநுபவிக்கவும், அதனால் பெறப்படுமின்பத்தைப் பெறவும் சாதனமாகிய சுதந்திரத்தை அடையும்வரை எங்ஙனம் வாளா இருக்க முடியும்? அதைப் பெறும்வரை, தன்னுடல் உயிர் போகும்வரை அவ் வீர மனிதன் முயன்றே-போர் செய்தே தீருவான். அம் முயற்சியின் போரின் முடிவில் அவன் வெற்றியையே பெறுவான் என்பது ஓரியற்கை யுண்மை. இவ் வியற்கை ஆட்சிக்குத் தடையாயுள்ள மனிதன், படை, அரசு, சாம்ராஜ்ஜியம், வெடிதண்டு, பீரங்கி, ஈட்டி, கத்தி ஆகிய எதுவாயினும் சரி, முடிவில் தோல்வியே யுறும். இயற்கைத் தேவியின் இச் செம்பொருட் செய்தியை மறத்தல் அல்லது மறுத்தல் செய்வதாலேயே, பல சீரிய அரசுகளும் அதிகார வர்க்கங்களும் சிதறிச் சிதைவுற்றுச் சீரழிந்து குலைவுறுகிறது. மற்றும், இச் செய்தியின் மாண்பினை உணர்ந் தறிந் தெழுந்து ஊக்க வீரத்துடன் உறக்கம் விட்டெழுந்து உண்மை யறப்போர் நிகழ்த்தாத மக்களே-நாடே மண்ணொடு மண்ணாய் மடிந்து மறைந்து நலிந்து நசிப்பது. சுதந்திரமில்லா வாழ்வு சுகமற்ற வாழ்வானால் அச் சுகம் பெறப் போர் தொடுக்காத நாட்டை அல்லது மனிதனை மக்கள் கூட்டத்தின்பாற் பட்டதாகச் சொல்வதா அல்லது பகுத்தறிவற்ற மாக்களினத்திற் கூட்டுவதா? அவ்வுணர் வில்லா மக்கள் வதியும் நிலம் வீரநிலமன்று; அவர் வாழும் கூட்டமும் வீரர் கூட்டமன்று. ஆனால் பேடிகள், பயங்கொள்ளிகள், பாருக்குப் பாரமாக முளைத்த பாவிகள் கூட்டமேயாம். அவர் இருப்பதினும் இறப்பதே சாலச் சிறப்புடைத்து. நிற்க,

இனி ஒரு நாடோ அல்லது ஓர் மனிதனோ கடமைகளாற் கட்டுப்பாடுற்ற சுதந்திர மடைவது, வேலையின்றி வாளா கிடந்து சோம்பேறித் தனத்தால் காலங் கழிப்பதற் கல்ல. சுதந்திரம் அடைந்துவிட்டோ மென்று களியாட்ட மெய்துங்காலைப் பாடும் பாட்டுகளில் பாரதியாரின் பின்வரும் பாடல்கள் அத்யாவசியம் கவனிக்கத் தக்கனவாம்.



"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம்-வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓயமாட்டோம்"

என்னும் இது போன்ற மற்றவைகளையும அன்பர்களே படித்தறிக.

எகிப்திய கிரேக்க உரோம நாகரீகங்களின் சரித்திரங்களைப் படித்தால், அவர்கள் தாம் தாம் சுதந்திரமடைந்ததும், சோம்பல் உழைப்பின்மை வெறும் பொருட்சுகம் ஆகிய இவற்றிலேயே வீழ்ந்து கிடந்ததும், பின்னர் வெகு விரைவில் சீரழிந்து மறைந்ததும் நன்கு புலனாகும் ஆகவே, ஒரு நாடு தான் கோரிய சுதந்திரத்தை அடைந்ததும் அதி தீவிர உழைப்பில்தான் தலைப்பட வேண்டும். அவ் வுழைப்பும் அறநெறி அருள்நோக்கு அன்புமணம் அறிவுடைமைகொண்டு விளங்கவேண்டும். அதாவது நாகரீகமற்றும், கல்வி, அறிவு, ஞானம், செல்வம், வலிமை ஆகியவை வளராது தேய்ந்து மங்கும் கீழ் நிலையிலுள்ள பிறமக்களை அல்லது நாடுகளைச் சீர்நிலைக் குயர்த்த வேண்டி உழைக்கும் உழைப்பில் அருள் மிகுந் தீடுபடல் வேண்டும். மேலும், தன்னுரிமைகளையுங்கூட மறந்து, பிறருக்குத் தன்னால் இயற்றக்கூடிய கடமைகளை அறவழியில் அன்பு வகையில் அருள் விதத்திற் செய்வதற்கே "வீரசுதந்திரம்" என்பது ஒரு தனி மனிதனுக்கோ ஒரு நாட்டிற்கோ ஆவசியம் வேண்டுவதேயாம். ஏனெனில் "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்றாரன்றோ தெய்வப் புலவர். பிறருக்கு "உரியர்" என்றதால் தம் அந்த எலும்பையுங்கூடத் தியாகித்து விடுவதே கடமை என்று குறிப்பிடுகிறார். ஆகவே, சுதந்திரத்தை அங்ஙனம் ஆண்டு கொள்வதாலேயே—பயன்படுத்திக் கொள்வதாலேயே ஒரு தனி மனிதனோ நாடோ தெய்வநிலை பெறுவதற்கியலும். கருணையிற் கசிந்துருகித் தன் காயத்தாலும், பிறவற்றாலும் கைம்மாறு கருதாது கடனாற்றிக் கிடப்பதே தன் கருமம் எனக் கருதிக் காரியங்களியற்றும் காந்தியடிகளைத், தெய்வநிலை எய்திய கிறிஸ்து நாதருக்கொப்பாகக் கிறிஸ்தவ மக்களே போற்ற வில்லையோ? தான் சுதந்திர மடைந்ததும் கைம்மாறின்றிக் கடமைகளைச் செய்வதில்தான்

வீரம் பெரிதும் வேண்டும். அன்பு மனமும் அருள் நெறியும் படைத்தவர்களாலேயேதான் அது முடியும். அவர்களே பெரும் தியாகம் செய்து, தம் முடல், உறுபொருள், உடை, உணவு, உயிர் ஆகியவைகளையும் தியாகம் செய்து தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்ப் பொலிவர். தாம் சுதந்திர மடைந்தவராயினும் பிறர் பொருட்டுத் தம் முரிமைகளையும் பறிகொடுத்துக் கடமைகளாற்றுவார்கள். அவர்களது அவ் வீரமன்றோ வீரம். இதற்கு அப்பர் சுவாமிகளே ஒரு சான்று ஆவர். ஏனெனில், "நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்திலிடர்ப் படோம்" என்று சொல்லிப் பாடித் தன் வீர சுதந்திரத்தைக் காட்டிய அவரே மீண்டும் "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்றும் பாடியிருக்கிறார். தன்னாட்டிற்குச் சுதந்திரம் பெறவேண்டி அல்லும் பகலு முழைக்கும் காந்தியடிகள்கூட ஓரிடத்தில் "பிறநாடுகளுண்மையில் உய்ய வேண்டியிருந்தால் தன்னுடைய இந்திய நாடு அழிந்தாலும் சரி" என்ற பொருள்படச் சொல்லியிருக்கிறார். ஆகவே தான் விடுதலை பெற்றதும், விடுதலையற்ற பிறர் விடுதலையடைய அறவினையாற்றும் மனிதனோ அல்லது நாடோ வீர சுதந்திரத்தால் விளையும் பயன் பெறக் கூடும். இந்த அளவுகோற்கொண்டு நோக்கினால், நாகரீக மடைந்தவர்களெனப் பொய்ப் பறை சாற்றிப் பிற நாடுகளைத் தந்திரமாகக் கொள்ளையடித்து அவைகளின் உறுபொருள்களையும் உரிமைகளையும் பிடுங்கி உயிர்வதை செய்து வாழும் மேனாட்டார் அநுபவித்து வருவது வீர சுதந்திரமல்ல. ஆனால் அது சோர சுதந்திரமே என்னலாம். அந் நாடுகளில் உள்ள ஆட்சி முறைகள் வீர சுதந்திர ஆட்சிகளாமோ? அல்ல; அல்ல. அவையனைத்தும் அறம் அன்பு அருள் என்பவை அறவே அழிந்த அரக்கர் ஆட்சியே என அற நெறியாளர் அருத்தமாக அறைவர்.

மேனாட்டில் ஐரோப்பிய யுத்தம் நடக்கையில் அறப்போரில் ஈடுபட்டுப் பிறர் விடுதலை பொருட்டு வினையாற்றுவதாகப் பிதற்றிய (Lloyd George) போன்ற தலைவர்களும் தேயங்களும், தம்மிடைக் கடுகளவாயினும் உண்மை வீர மிருந்தால், இந்திய நாடுபோன்ற பிற நாடுகள் தம் பிறப்புரிமைகள் அநுபவிப்பதற்கான சுதந்திரமடையத்



தடை செய்வர்களோ? ஆனால் இங்கிலாந்தும் அமெரிக்காவும் இஷ்டப்பட்டு உண்மை வீரத்துடனெழுந்து அருள் நோக்கொடு அன்புடன் அறவினையாற்றத் தங்கள் ஆதிக்கத்தையும், அரும் பெருஞ் செல்வங்களையும், ஆற்றல் படைத்த அரிய ஆண் சிங்கங்களென்ன மனிதரையும் உபயோகித்தால், ஆஹா! அல்லல்-அவதி-அமைதியின்மை இவைகளருகி, அறம் பெருகி, ஆண்டவனிலை பெற்றிலங்கு மன்றோ இவ் வவனி? ஆனால் அந் நாடுகளின் சரிதங்களையும், நாகரீகங்களையும், பழக்க வழக்கங்களையும் பார்த்தால், அவை அறநெறியாட்சி குறைந்து பொருள் நெறி (Materialistic) ஆட்சி மலிந்து விளங்குவதாகக் காணலாம். ஆகையால்தான் அவை உலக க்ஷேமத்தின் பொருட்டுத் தம் சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. தன்னாட்டுரிமை (Nationalism) அல்லது தன் தேசீயத்தையே போற்றிப், பொது நாட்டுரிமை (Internationalism) அல்லது பொதுத் தேசீயத்தைக் கவனியாது வந்தன; வருகின்றன. ஏதோ சமீபத்தில்தான் போர்க் கருவிகளைக் குறைத்தல் செய்தல் போன்ற சபைகளை ஸ்தாபித்து உலக க்ஷேம வேலைகளில் ஈடுபடுவதாக ஒரு தோற்றம் தெரிகிறது.

ஆனால் நம் பாரத நாட்டுச் சரிதத்தையும், அதில் மிகப் பழைய காலத்தில் நிகழ்ந்த அறப் போர்களையும், இந்நாட்டின் உயர்ந்த நாகரீகத்தையும், முக்கியமான பழக்க வழக்கங்களையும் நோக்கு மிடத்து, "வையகமும் துயர் தீர்கவே" என்றும், "தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற சிறந்த கொள்கைகளுடன் விளங்கியதோடு பொதுநாட் டுரிமைகளுக்குத் தன்னால் அரணும் ஆக்கமும் உண்டாகும்படி தன் வீர சுதந்திரத்தைச் சாதனமாகக் கொண்டு வினையாற்றிவந்தது எனத் தெரியவரும். தற்காலத்தில் தன் நாட்டில் வீண் ஆடம்பரச் செலவுகளைச் செய்யவும், பிற நாட்டின் ஜீவாதாரமான உரிமைகளைப் பிடுங்கவுமே வினையாற்றும் இக் காலக் கமிஷன் கமிட்டிகளைப்போலன்றி, கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்குமாறு அசோகன் முதலானோர், தன் தொண்டர் சபைகளைப் பலப் பல நாடுகளுக் கனுப்பிவந்து உலகத்துக்கே அறவினை

கள்-அன்பு வினைகள் பல பல ஆற்றி அநுபவித்த, வீர சுதந்திரத்திற் பிறந்ததன்றோ அன்பு நெறி மிகுந்த இந்திய நாகரீகமென்பது? இந் நாகரீகம் படைத்த பாரத நாடே, எதிர்காலத்தில் உலக க்ஷேமத்தின் பொருட்டு உழைத்து உலகில் உறுதியான க்ஷேமத்தை நிலைக்கச் செய்யும் பெற்றியது. ஆனால் தற்போது தானே சுதந்திரமின்றித் தள்ளாடித் தத்தளிக்கும் காலத்தில், பிறர் பொருட்டு எப்படி நம் நாடு வீரத்துடனெழுந்து வினையாற்றுவது? ஆகையினாலேயே வீரக் கவி பாரதியார், நம் நாட்டிற்கு விடுதலை வேண்டுமென்றும், உண்மை நிலை தவறாது, ஈனத் தொண்டாற்றுவதை விட்டுவிட்டுக், கைகட்டிப் பிழைப்பதை நிறுத்தி, வெறும் உலகின்பங்களை விரும்பாது, சுதந்திரத்தின் மாண்பினை யிழக்காது விளங்க வேண்டுமென்பதை உணர்ந்து. அடிமைக்குழியினை விட்டேறி வீர சுதந்திரத்தையே நாடிப் போர் புரிய வேண்டுமென்றார். நம் நாட்டுக்கு நாம் வீர சுதந்திரத்தைச் சம்பாதிப்பதே தெய்வப் பணியாகுமென்றுணர்த்தவே "வந்தே மாதரம் ஒன்றே தாரகம்" என்று பாடினார். அதாவது தாரக மந்திரத்தை எத்துணை உள்ளன்புடன்-உறுதியுடன் ஜெபிக்கிறோமோ அதைப்போல் நம் தாய் நாடாகிய பாரத நாட்டின் விடுதலையை எண்ணியே நம் மனம் வாக்குக் காயங்களால் வினையாற்றிப் போற்ற வேண்டும் என்றும், அவ் வுழைப்பாலேயே நம் நாடு தான் நாடியிருக்கும் வீர சுதந்திரம் பெற்றுத் தனக்கும் பிறருக்கும் பயன் படத் திகழ்ந்து வாழும் என்றும் குறிப்பிக்கிறார்.

உலக மெல்லாம் அறநெறி யோங்கச் செய்யும்படியான உழைப்பிற் றலைப்படத் தன் நாட்டிற்கு வேண்டியது வீர சுதந்திரம் ஒன்றே ஆதலால் அதை 'ஆரமுது' என்று போற்றியும், அடிமை நிலையை "கள்" எனக்கடிந்து தூற்றியும் முன்னையதில் விருப்புப் பெருகவும், பின்னையதில் வெறுப்புப் பிறக்கவும் அழகாகப் பாடியிருக்கிறார். நண்பர்கள் மற்றப் பாடல்களையும் படித்து அதிலுள்ள உயர்ந்த குறிப்பான எண்ணங்களை அறிக. "ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு" என்றார் பாரதியார். அதாவது ஒற்றுமையாக உழைப்பதாலேயே நாமியற்றும் வினை விரைவில் வெற்றியைத்



தரும் என்பது. இது நம் தேயத்துக்கும் உலகுக்கும் பொதுவான உண்மை. ஆகவே உண்மைச் சுதந்திரமே நமக்கு வேண்டுவது. அதற்கெப் பெயர் இருந்தாலென்ன? நமக்கு வேண்டுவது வீர சுதந்திரமே. அதைப் பெற்றுவிட்டால் நம் நாடு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தி லிருந்து கொண்டே அதை ஓர் அற உலகாக்கி உலகையும் தன் அற நிலை யடையச் செய்யும். ஆகையால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள் ளிருந்து கொண்டே கொல்லா நெறியும் உண்மைநிலை தவறாததுமான அறப்போர்-அன்புப்போர்—சத்யாக்ரகம் செய்து நம் நாட்டிற்குச் சுதந்திரத்தைப் பெறுவோமாக. பாரதி அல்லது பாரதவர்ஷமென்ற பாரத நாட்டிற் சுதந்திர நாதமே பரந்து கேட்பதாலும், 'பாரதி'ப் பத்திரிகையும் அந் நாதத்தைப் பரப்பி ஒளிர்வதாலும், இயற்கைப் பாவலனாகிய பாரதியார் பாடிய பாட்டின் சுதந்திர நாதமும், வீர முழக்கமும் தமிழ் நாட்டிலே ஓங்க வேண்டுமென்ற என் அதி தீவிர விருப்பத்தாலுமே அவர் பாடிய 'வீர சுதந்திரம்' என்பதைப்பற்றி மருளுறு மனத்தினால் எண்ணி. என் சிற்றறிவிற் கெட்டிய மட்டில் எழுதியிருக்கிறேன். பாரத சகோதர சகோதரிகளின் விடுதலையாகிய இவ் வினிய ஒலி பரவி, வீர சுதந்திரமாகிய நல்லொளி விளங்கித், துன்பம் அருகி, இன்பம் பெருகி, நம் நாடு நன்னிலை யடைய அவர்களின் வீர இருதயமும் சுதந்திர சுவாசப் பையும் அவர்களை உள்ளிருந்து உந்த அவர்கள் உவகையும் உறுதியும் ஊக்கமும் உற்சாகமும் கொண்டு அறப்போர் செய்து வெற்றிபெற அனைத்தையும் ஆக்கவல்ல ஆண்டவன் அருள் புரிவானாக என்பதே என் மனமார்ந்த வேண்டுகோள்.

---

மாதந்தோறும் வெளிவரும் "பாரதி"ப் பத்திரிகை, என் வாசகசாலைக்கு ஓர் பூஷணமாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

T. ராமலிங்கம் பிள்ளை,
தலைமை மொழிபெயர்ப்பாளர்,
திருவாங்கூர் சமஸ்தானம், திருவனந்தபுரம்.

---

# அதிமதுரத் துண்டுகள்.

ரா. நாராயணசுவாமி.
ஆசிரியர், "பாரதி."

## I

(1) ஒரு குக்கிராமத்திலே ஒரு குடிசையிலே வறுமைமையிலேயே உதித்து, வறுமையிலேயே வளர்ந்து, வயலிற் கூலி வேலை செய்வது, கடலில் மீன் பிடிப்பது, குதிரை லாயத்தில் வேலை செய்வது முதலிய தொழில்களைச் செய்து, தனது பெற்றோர்களுக்கு உதவி செய்து, தனது 25-ம் வயதிலே லண்டனுக்குச் சென்று, கையில் ஒரு காசுமின்றிப் பட்டினியாய் வீதிகளில் அலைந்து திரிந்து பற்பல சில்லரை வேலைகளைச் செய்து கஷ்டப் பட்டுக் காலந் தள்ளி, இராப் பள்ளிக்கூடங்களிலே கல்வி கற்று, உயர்வடைய வேண்டுமென்ற ஆசையால் பல பல விஷயங்களை அறிந்து, கடைசியில் தொழிலாளர் இயக்கத்திற் பிரவேசித்து ஈடுபட்டு உழைத்துப் பார்லிமெண்டு சபையில் அங்கம் பெற்றுத் தொழிற் கட்சிக்குத் தலைவராகி, ஒரு முறை முதல் மந்திரியாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பினும், இப்பொழுது இரண்டாம் தடவையாக இங்கிலாந்து தேசத்தின் முதல் மந்திரியாக விளங்குகிறார் ராம்ஸே மாக்டொனல்டு.

(2) ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து, பண்ணையிலே வளர்ந்து, ஒருநாள் ஒரு நாட்டு வண்டியில் தன் தகப்பனுடன் தனது 12-வது பிராயத்தில் பிரயாணம் செய்யும் பொழுது, ஒரு இயந்திரத்தைக் கண்டு கவனித்ததிலிருந்து இயந்திரங்களிலேயே மனம் சென்றதால் 17-வது வயதில் தனது படிப்பை முடித்துக்கொண்டு, தனது பெற்றோர்களின் தொழிலாகிய பண்ணை வேலைகளை விரும்பாது, ஒரு நகரத்திற்குச் சென்று, கடிகாரங்கள் பழுது பார்க்கும் ஒரு கடைக்காரனிடம் அமர்ந்து, அத் தொழிலையும் நன்றாய்க் கற்று, விவசாயிகளுக்கு வேண்டிய சில இயந்திரங்களை நூதனமாய்ச்



செய்து, ஒரு சொற்பமான தொழிற் சாலையைத் தனக்காக ஏற்படுத்தி, மோட்டார் வண்டி செய்ய அடங்கா ஆவல் கொண்டு, தனது எண்ணமெல்லாவற்றையும் மோட்டார் செய்வதிலேயே செலுத்தி, எவ்வளவோ கஷ்டங்களையும் பொருட்படுத்தாது ஒரு வண்டியை எப்படியோ செய்து விடாமுயற்சியாய் நடத்தித் தனது சக்தியை முற்றிலும் மோட்டார் அபிவிருத்தியிலேயே பிரயோகித்ததால் தனது தொழிலில் வெற்றி பெற்றுத், தனது மோட்டார் வண்டிகளை உலகத்தார் அதிகமாய் வாங்கி உபயோகிக்கவே, 1921-ம்௵ 50,00,000 வண்டிகள் செய்து விற்றுத் தனது தொழிற் சாலைக்கு வேண்டிய முக்கிய சாமான்களுக்காகப் பெரும் வனங்கள், பல இரும்புச் சுரங்கங்கள், அநேக நிலக்கரிச் சுரங்கங்கள் ஆகியவற்றை வாங்கி, ஏராளமான வண்டிகளை உற்பத்தி செய்து கொடுத்ததால் நாள் 1-க்கு 80,000 பவுன் வருமானமென்றும் இப்படியே, 10௵ இருந்தால் தின வருமானம் 2,00,000 பவுன் கிடைக்குமென்றும் அவருடைய மொத்த ஆஸ்தி 15,00,00,000 பவுனுக்கு மேலேயிருக்கும் என்றும் சிலவருடங்களுக்கு முன் மதிப்பிடப்பெற்று உலகில் இப்பொழுது மகா பெரிய முதலாவது கோடீஸ்வரப் பிரபுவாக விளங்குகிறார் ஹென்றி போர்டு.

(3) ஒரு சிறிய குடும்பத்திலே ஜெனித்து, படிக்கும் வயது வந்தவுடன் பள்ளிக்குச் சென்று, வாசித்துக்கொண்டிருந்த பொழுது அங்கிருந்த உபாத்தியாயர் தன்னைப் பார்த்து "உனக்கு மூளையே யில்லை" யென்று சொல்லியதைக் கேட்டு மன வருத்தமடைந்து, பள்ளிக்கூடத்தை விட்டு விலகித் தனது தாயாரிடமே படித்து, ரயில்வே ஸ்டேஷனில் பத்திரிகையும் மிட்டாயும் விற்கும் பையனாக இருந்து கொண்டே ஒரு சிறு பழைய அச்சு இயந்திரத்தை வாங்கி, அதை ஒரு சாமானேற்றும் வண்டியில் வைத்து, ஒரு சிறு வாரப் பத்திரிகையை அச்சிட்டு வெளிப்படுத்தி, ரயிலில் பிரயாணம் செய்யும் ஜனங்களுக்கும் கிராம ஜனங்களுக்கும் விற்றுக்கொண்டிருக்கும் சில நாட்களில் தான் அச்சு வைத்திருக்கும் வண்டியில் தன்னிடமிருந்த அக்கினித் திராவகத்தால் அகஸ்மாத்தாய்த் தீப் பிடித்துவிடவே, தீ அணைக்கப்பட்டு அச்சுச் சாமான்களையும் பரிட்சைச் சாமான்களையும்

வண்டியின் மேல் அதிகாரியால் அடுத்த ஸ்டேஷனில் கீழே இறக்கி வைத்து விடவே, ரயில்வே ஸ்டேஷனில் பத்திரிகை விற்கும் தொழிலை விடாது, வீட்டிலேயே ஆராய்ச்சிச் சாமான்களை வைத்துத் தந்தி சம்பந்தமாகக் கவனிக்கத் தொடங்கித் தந்தி விஷயமாக அறிந்து, இரவில் தந்தி அடிக்கும் உத்தியோகம் ஏற்று, சிறிது காலம் பார்த்து, அதிலிருந்து விலகி, சில ரூபாய்களுடன் நீயூ யார்க் பட்டணம் சென்று, ஒரு மிஷினைப் பழுது பார்ப்பதற்கு நல்ல சம்பளம் பெற்றுக் கொண்டே தனது அறையில் ஒழிவு நேரங்களிலும் இரவுகளிலும் ஒரு நூதன மெஷின் புதிதாகச் செய்துகொண்டிருக்கையில் தனது முதலாளிகள் 8,000 பவுன் கொடுக்கவே, அந்தத் தொகை அனைத்தும் பரீட்சை செய்வதிலேயே செலவு செய்து, அல்லும் பகலும் அரும் பாடு பட்டுப் பட்டு மின்சார விளக்குகள், மின்சார வண்டிகள், கிராமபோன்கள், இன்னும் எத்தனையோ வகை வகையான மின்சார இயந்திரங்களை நூதனமாய்ச் செய்து பெரிய தொழிற்சாலையையும் ஸ்தாபித்து பெரும் ஐஸ்வர்யமும் அந்தஸ்தும் பெற்று இன்று உலகத்தாரால் பெரிதும் போற்றப்படுகிறார் **தாமஸ் ஆல்வா எடிசன்.**

(4) ஒரு பலசரக்குக் கடைக்காரன் மகனாய்ப் பிறந்து வயது வந்தவுடன் தனது தகப்பனார் கடையிலே சிறிது காலம் இருந்து, அத் தொழில் பிடிக்காது சோப் செய்யும் வேலையில் பிரவேசித்து, ஒரு சிறிய தொழிற்சாலையை ஏற்படுத்திச் சோப்பு உண்டாக்கிய பொழுது அதிகம் அதிகமாக விலையாகவே வேண்டுவோருக்கெல்லாம் விலைக்குக் கொடுக்க முடியாது தவித்து, ஒரு புதிய இடத்தில் ஒரு பெரிய தொழிற் சாலையைக் கட்டி அந்த இடத்திற்குப் போர்ட் சன்லைட் (Port Sunlight) என்று பெயர் வைத்துத் தொழிற் செய்ய ஆரம்பித்தவுடனே வியாபாரம் பெருத்ததால் 1,69,000 பங்குதாரர்களைக் கொண்டு 13,00,00,000 பவுன் மூலதனத்துடன் லீவர் சகோதரர்கள் (Lever Brothers) என்ற பெயருடன் ஒரு கம்பெனியை ஏற்படுத்தி அதில் 40,000 ஆட்களை வைத்து வேலை வாங்கி அக் கம்பெனியின் தலைவராகி லார்டுப் பட்டமும் அதற்கு மேற்பட்டதாகிய வைகவுண்டுப் பட்டமும் பெற்றிருக்கிறார் **லார்டு லீவர் ஹூம்** (Lord Lever Huhme).



(5) ஒரு ஜவுளிக்கடையில் ஒரு சிற்றாளாகவிருந்த பிறகு ஒரு சிறு பள்ளிக்கூடத்தில் துணை ஆசிரியராக இருந்து கொண்டே அல்லும் பகலும் அடிக்கடி படித்து அதிக ஆற்றலை அடைந்து, கற்பனையிற் சிறந்த அநேக நூற்களை எழுதி இன்று பெரிய புஸ்தக ஆசிரியராகக் கீர்த்தி பெற்றுக்கொண்டிருக்கிறார் **வெல்ஸ்.**

(6) ஒரு எளிய உபாத்தியாயருக்கு மகனாய்ப் பிறந்து, இரண்டு வருட காலத்தில் தனது தந்தையார் இறந்து விடவே, கிராமத்தில் செருப்புத் தைத்து ஜீவனம் செய்துகொண்டிருந்த தனது தாய் மாமனாரிடம் தாயும் மக்களும் வந்து, அவரது ஆதரவில் இருந்து, அவருடைய சகாயத்தினால் இளமையில் நன்றாய்க் கிராமப் பள்ளியிற் படித்துத் தேறிய பின் வக்கீல் குமஸ்தாவிற்கு வேண்டிய படிப்புகளைப் படித்து, 16-ம் வயதில் ஒரு குமஸ்தா வேலை பார்த்துக்கொண்டே விடா முயற்சியாய் ஊக்கத்துடன் வக்கீல் வேலைக்குப் படித்துச் சித்தி பெற்றுத் தனது தொழிலில் ஆரம்பத்திலிருந்து பிரகாசமடைந்து, இராஜீயத் துறையில் இறங்கிப் பார்லிமெண்டு மெம்பராகிச் சிற் சில பதவிகளையும் வகித்து, ஐரோப்பியப் பெரும் போர்க்காலத்தில் இங்கிலாந்தின் முதல் மந்திரியுமாகி இப்பொழுது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முக்கியஸ்தர்களிலேயே ஒருவராக விளங்குகிறார் **லாயிட் ஜார்ஜ்.**

(7) ஸ்காட்லாண்டு தேசத்தில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்து சின்னஞ்சிறு வயதாயிருக்கும் பொழுதே தன் குடும்பத்தாருடன் அமெரிக்காவிற்குச் சென்று அங்குக் குடியேறி, வறுமையால் குடும்பமே வாடி வதங்கித் திகைத்துக்கொண்டிருந்ததால் தாயார் சில்லரைக் கடை வைத்துக்கொண்டும் செருப்புகளைப் பழுது பார்த்துக் கொண்டும் தகப்பனார் நெசவு வேலையைச் செய்து கொண்டுமிருக்கத் தானிருந்த ஊரில் தண்ணீர்க் கஷ்டமிருந்ததை அறிந்து தான் பள்ளிக்கூடத்திற்குப் போவதற்கு முன்பு தன் வீட்டிற்கு வேண்டிய தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்து இன்னும் சிற்சில வேலைகளைச் செய்து, தனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமே யென்று எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணி எண்ணிச் சமீபத்திலிருக்கும் ஒரு நெசவு சாலையில் தகப்பனார் நெய்யத் தான் அதற்கு உதவி செய்யும்

பையனாக விருந்து வாரம் 1-க்கு 5 ஷிலிங் சம்பாதித்து அதில் திருப்தி அடையாது, 14-வது வயதில் தந்தி ஆபீஸில் தந்தி கொண்டு போய்க் கொடுக்கும் பையனாக அமர்ந்து, காலை முதல் மாலை வரை பற்பல வீதிகளில் விலாசதார்களை விசாரித்து அலைந்து கொண்டும் ஒவ்வொரு வியாபார ஸ்தலங்களையும் அத்துடன் கவனித்துக் கொண்டும் தனது மானேஜரின் நல்லபிப்பிராயத்தைப் பெற்றுக் கொண்டும் அவ் வூரிலுள்ள பெரிய மனிதர்களின் நல்ல எண்ணத்தையும் சம்பாதித்துக் கொண்டும் ஒரு சோம்பேறித் தந்தி உத்தியோகஸ்தரால் தந்தி அடிப்பதையும் அறிந்து, ஒரு ரயில்வேக் காரியஸ்தருக்குக் குமஸ்தாவாகவும் தந்தி அடிப்பவராகவும் உத்தியோகம் பெற்று, பொறுப்பு வாய்ந்த தந்தி அடிக்கும் பதவிக்கும் தனது ஊக்கமான உழைப்பால் உயர்ந்து, ரயில்வேயில் பிரயாணிகளுக்குப் படுக்கை வண்டிகள் அவஸியம் என்பதை ரெயில்வேக் கம்பெனிக்காரர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவ் வேலையில் தானும் பாகம் சேர்ந்து, பணமில்லாதபடியால் ஒரு பாங்கில் கடன் வாங்கி வேலையைச் செய்து. அமெரிக்காவில் உள் நாட்டுச் சண்டை ஏற்பட்ட பொழுது, தனது பழைய எஜமானராயிருந்த சண்டை உதவிக் காரியதரிசியால் பட்டாளத்து ரயில் வண்டிகளையும் தந்திகளையும் மேற் பார்க்கும் உத்தியோகத்தை அடைந்து, தனது படுக்கை வண்டிகளால் கொஞ்சப் பணம் இலாபம் கிடைக்கவே தான் ஒரு இரும்புக் கம்பெனியில் கூட்டுக் கூடியிருக்கும் பொழுது ரசாயன மூலமாக இரும்பை எஃகாகச் செய்யலாமென்று கண்டு பிடித்து, வேலை செய்ய ஆரம்பித்த வுடன் உலகில் எஃகு யுகமே உண்டாகித் தனக்குத் தகுந்த விதமாய் வருமானம் ஏற்பட்டு மேலும் மேலும் இத் தொழிலில் பிரவேசித்துப் பல லட்ச லட்சம் பவுன்களாகச் சம்பாதித்துக்கொண் டிருக்கும் பொழுது தனக்குப் போட்டியாகக் கிளம்பிய கம்பெனிகளையும் சேர்த்து, 50,00,000 பவுன் மூலதனம் வைத்து, கார்னீஜி ஸ்டீல் கம்பெனி (Carnegie Steel Co.,) என்று ஒன்று ஸ்தாபித்துக் கொண்டு எஃகு அரசராக விளங்கிப் பெரும் பணம் சம்பாதித்து, 7,50,00,000 பவுன் பல தர்ம ஸ்தாபனங்களுக்குக் கொடுத்து தான் இறக்கும் பொழுது 50,00,000 பவுன் வைத்திருந்தார் **ஆண்டிரு கார்னீஜி.**



(8) ஸ்காட்லாண்டு தேசத்தில் ஒரு சிறிய குடும்பத்திலே பிறந்து சிறிது நன்றாய் வாசித்தறிந்து, ஸ்காட்லாண்டு இளைஞர்களைப் போல் சொந்த நாட்டில் தங்காது. கானடாவில் ஹட்ஸன் பே கம்பெனி (Hudson Bay Company)யில் ஆண்டு 1-க்கு 20 பவுனும் உணவும் உறைவிடமும் பெற்றுக் கொண்டு குமஸ்தா வேலைக்கு அமர்ந்து, கொஞ்சக் காலத்தில் தனது வேலையி லிருந்து ஒரு அற்பக் குற்றத்திற்காக நீக்கப்பட்டு, லாப்ராடர் பிற தேசத்தில் பிரவேசித்து விவசாயம் செய்து பிரபல்யமடைந்து, தான் முன் குமஸ்தாவா யிருந்து வந்து வேலை நீக்கப்பட்ட அதே ஹட்சன் பே கம்பெனிக்கே தலைவராகி, கானடா தேசத்தில் பெரியதோர் நீண்ட ரயில்வே போடுவதற்கு முக்கியஸ்தராக இருந்து, பெரும் பொருள் சம்பாதித்துப் பற் பல பொதுக் காரியங்களுக்குப் பொருளை அதிகமாக உதவி, கானடாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அரண் செய்து, உன்னத பதவி அடைந்து கிழ வயதிலும் தேசாபிமானத்தால் கானடாவின் ஹை கமிஷனர் உத்தியோகம் தாங்கி நின்றார் **லார்டு ஸ்ட்ராத்கோனா (Lord Strathcona).**

(9) வறுமையிலே பிறந்து பொறுமையிலே வளர்ந்து, சங்கீதப் படிப்புப் படித்துக்கொண் டிருக்கும் பொழுது அவருடைய உபாத்தியாயர் அவரைப் பார்த்து "உனக்கு ஒருக்காலும் சங்கீதம் வராது" என்று சொல்லியதையும் அமைதியுடன் கேட்டுக் கொண்டு, எத்தனையோ வித இன்னல்களையும் அடைந்து, தனது 43-ம் வயதுவரையில் ஒரு சங்கீதப் பெட்டிகூட வாங்க முடியாதபடி அவ்வளவு எளிய நிலையிலேயே யிருந்து, சில நாடகப் புஸ்தகங்களை எழுதின போதிலும் அவைகளை வாங்கி ஆதரிப்பாரற்றுக் குழப்பக்காரனென்று சில தடவை நாடு கடத்தப்பட்ட போதிலும் தனது உற்சாகத்தைக் குன்ற விடாது சதா உழைத்து, 6 மாதங்களுக்குள் தான் எழுதி யிருந்த நாடக சரித்திரத்தை நாடக மேடையில் 164 தடவை நடித்துக் காட்டும்படியாக அவ்வளவு பெயர் பெற்றுத், தனது அரசரே மகிழ்ந்து தனக்கு அதிக ஆதரவு அளிக்கும்படியாகப் பல புஸ்தகங்களை எழுதி உலகப் புகழ் பெற்றார் **ஜெர்மன் தேசத்து வாக்னர்.**

(10) ஒரு சாதாரண வக்கீல் குமஸ்தாவா யிருந்து, ஓய்வு அகப்படும் தருணங்களி லெல்லாம் பற் பல நூற்களை வாசித்து வாசித்துத் தனது அறிவை அபிவிருத்தி செய்து, ஒரு சிறிய நூலாசிரியராகி அநேக நவீன நாவல்களை எழுதிப் பேர் பெற்ற ஆசிரியராய்ச் சிறப்படைந்துகொண் டிருக்கிறார் **ஆர்னால்டு பென்னட்.**

(11) தான் வேலைக்காக அலைந்துகொண் டிருக்கையில், "ஒரு சுறு சுறுப்பான வாலிபன் தேவை" என்ற விளம்பரத்தை ஒரு பத்திரிகையிற் பார்த்த வுடன் அந்த இடத்திற்குச் சென்று, அங்குப் படம் பிடிப்பவனுக்கு உதவி வேலை செய்து கொண்டே தனது ஓய்வு காலங்களை யெல்லாம் தனது சித்திரத் தொழில் அபி விருத்தியிலேயே செலவிட்டு, அதிலே கண்ணுங் கருத்துமா யிருந்து உழைத்து, நன்கு பயிற்சியும் பெற்றுத் திறமையும் அடைந்து, முற்கால விஷயங்களை நவீன முறையிற் சித்திரங்களாக எழுதுவதிற் சிறப்புற்று அரசராலும் விரும்பப் பட்டார் **ஸர் ஜான் லாவேரி.**

(12) ஒரு சிறு பட்டியில் ஒரு மரக் குடிலில் பிறந்து, சின்னஞ் சிறுவயது முதலே வறுமையால் அடிபட்டு, பிழைப்புக்குத் திண்டாடிச் சில புதிய இடங்களுக்குச் சென்று குடியேறி, அங்கு தன் தகப்பனாருடன் காடுகளை வெட்டித் திருத்தி விவசாயம் செய்து, இதுபோல் பல பல வழிகளில் குடும்பத்திற்கு உதவி செய்து கொண்டே ஒரு உபாத்தியாயரிடம் சிறிது கல்வி கற்று, கசாப்புக் கடை குதிரை லாயம் பண்ணை முதலிய இடங்களில் வேலைகளைச் செய்தும் படகு ஓட்டியும் ஒரு கிராமப் பண்டகசாலையில் ஒருகுமஸ்தாவாய் அமர்ந்தும் தனது குடும்பத்திற்குச் சம்பாதித்துக் கொடுத்துக்கொண் டிருக்கையில் வேறொரு புதிய மாகாணத்திற் குடியேறும்படியாய்ப் போக நேர்ந்தபொழுது, மிதியடியு மின்றியே நெடுந் தூரம் நடந்து சென்று, தங்கள் புதிய சொந்தப் பூமியில் மகா கஷ்டத்துடன் உழைத்துக் கொண்டே தனது கல்வியையும் சுய முயற்சியினாலேயே விருத்திசெய்து, தனது சகாக்களுடைய மனதைத் தனது நேர்மையாலும் யோக்கியதையாலும் தன்பால் கவர்ந்து சட்டசபைக்கு அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டு, அச் சட்ட சபைக்குச் செல்



லும்பொழுது தனக்குப் போதிய உடுப்புமில்லாமையால் கடன் வாங்கி அணிந்து செல்லும்படியாய் அவ்வளவு எளிய நிலையி லிருந்த போதிலும் இராஜீயத் துறைகளில் இறங்கிய பின்னரே சட்டக் கல்வி கற்று வக்கீலாகி, அதிலும் பிரசித்தி பெற்று விளங்கி, அடிமைவேலை மதுபானம் ஆகிய இவைகளைத் தொலைத்து விடுவதற்கு அரும்பாடுபட்டுக் குடியரசுக் கட்சியில் ஒரு பிரபல பிரமுகராகி, அமெரிக்க ஐக்கிய மாகாணங்களுக்கு ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பெற்று, அமெரிக்காவிலிருந்த அடிமைகள் (நீகிரோவர்) அனைவருக்கும் சுதந்திரம் கொடுத்து உலகப் பிரசித்தி பெற்றார் **ஆபிரகாம் லிங்கன்**

(13) ஒரு பரம ஏழைக் குடும்பத்திலே சோப் மெழுகுவர்த்தி முதலியன உண்டாக்கி ஜீவனம் செய்யும் ஒருவருக்கு 10வது மகனாகத் தோன்றி, குடும்பக் கஷ்டங்களுடன் சிறிதே படித்து, குடும்ப அல்லல்களால் அதிகம் படிக்க முடியாது, தனது தகப்பனாருடைய தொழிலை விரும்பாது, தனது தமயன் வைத்திருந்த சிறிய அச்சுக்கூடத்தில் அச்சுக் கோர்க்கப் பழகும் பையனாக அமர்ந்து, அவகாச நேரங்களி லெல்லாம் அல்லும் பகலும் படித்துக்கொண்டு அந்த அச்சிலிருந்து வெளிவரும் சமாச்சாரப் பத்திரிகையைத் தெருக்களிற் கொண்டுபோய் விற்றுத், தனது பெயரின்றியே அப் பத்திரிகையில் விஷயங்களை எழுதி, அச்சுவேலையையும் ஒருவாறு பழகிக்கொண்டு பிலடெல்பியா நகரத்திற்குச் சென்று, அங்கே அதிகச் சிரமங்கள் அடைந்து ஒருவரிடம் அச்சு வேலையை ஏற்று, அங்கு ஒரு பெரிய மனிதருடைய ஆசை வார்த்தையை நம்பி ஏமாந்து, இங்கிலாந்து போய், அங்கே ஒரு அச்சாபீசில் தொழில் செய்து அச்சு வேலையை நன்றாய்க் கற்று, அப்பால் அமெரிக்காவிற்குத் திரும்பி, மிகவும் கஷ்டப்பட்டு, ஒருவருடன் கூட்டாக அச்சுக் கூடம் ஸ்தாபித்து, உற்சாகத்தைக் குன்றவிடாது வேலைசெய்து, ஒரு பத்திரிகையையும் நடத்தி, வாய்மையையும் நேர்மையையும் கடைப் பிடித்து ஒழுகி தன்னைப் பற்பல வழிகளிற் பண்படுத்தி, அச்சிடுவதிலும் பத்திரிகை பதிப்பிப்பதிலும் விருத்தியாகி மிகவும் பிரக்கியாதி அடைந்து, தான் இருந்த நகரத்திற்கு அநேக நன்மைகளைச் செய்ததுமன்றி, மின்சார விஷயமாய் ஆராய்ச்

சிகள் பல செய்து செய்து, மின் வெட்டுகளாற் கட்டிடங்கள் சேதம் அடையாதபடி "மின் வாங்கி" என்பதைக் கண்டு பிடித்து, இதுபோல் இன்னும் பல விஷயங்களையும் நூதனமாய்க் கண்டுபிடித்து, அமெரிக்கச் சட்ட மகாசபைக்கு ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டு, பல்வேறு வகைகளில் ஜனங்களுக்காகப் பாடுபட்டுத், தானிருந்த மாகாணத்திற்கே கவர்னராகி, அமெரிக்காவின் தூதுவராக இங்கிலாந்திற்குச் சென்றிருந்து, பிரான்சுக்கும் அமெரிக்கத் தூதுவராகப் போய்த் திரும்பி, அமெரிக்கச் சுதந்திர யுத்தத்தில் தக்க விதமாய்ச் சேவை செய்து, அமெரிக்கா சுதந்திர மடைந்ததற்கே காரணமான முக்கியஸ்தர்களில் ஒருவராக விளங்கி, அமெரிக்கா வெங்கும் அபாரப் புகழ் பெற்றார் பெஞ்சமின் பிராங்க்லின்.

(14) கிரேக்க தேசத்தில் ஒரு ஏழைக் குடும்பத்திற் பிறந்து பாரீஸுக்கும் லண்டனுக்கும் எப்படியேனும் ஏதேனும் ஒரு கல்வி கற்கும் பொருட்டுச் சென்று, வயிற்றின் கொடுமையால் அங்கிருந்து பெர்ஷியா தேசத்திற்குப் போனவுடன் அத் தேசத்தில் கணக்கற்ற ஐஸ்வர்யம் எண்ணை ஊற்றுகளாகப் புதைந்து கிடப்பதைக் கண்டு கையில் பணமில்லாதபடியால் எந்தத் தொழிலும் செய்ய முடியாது, சம்பாதிக்கும் பொருட்டு அங்கிருந்து ஜெர்மனிக்குச் சென்று, குரூப் ஆயுதத் தொழிற் சாலையில் கூலிக்காரனாக அமர்ந்து, அதிகமாகக் கஷ்டப்பட்டு உழைத்து, விடா முயற்சியால் மெதுவாக முன்னேறி சலியாது வேலை செய்து, குண்டு துப்பாக்கி முதலியன செய்கிற இரகசியங்களை அறிந்து கொண்டபடியால் அவருக்குப் பணம் சேர ஆரம்பித்தவுடன் தனது ஆஸ்தி அனைத்திற்கும் எண்ணைக் கிணறுகளிலும் சப்பல் கட்டும் கம்பெனிகளிலும் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பெரிய போஜன சாலைகளிலும் பெரிய பாங்குகளிலும் பங்குகள் வாங்கி, சில வருடங்களுக்குள் பெரும் பணக்காரராகி, அநேக பொது ஸ்தாபனங்களுக்குப் பெரும் பணம் உதவி செய்து பெருங் கோடீஸ்வரராக விளங்குகிறார் ஸர். பேஸில் ஸஹராவ் (Sir Basil Saharoff).

(15) ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்து, மிகவும் கஷ்டப்பட்டுக் கொஞ்சம் படித்து, பொது நல சேவையில் மனம் லகித்துச் சேரிகளிலும் இன்னும் சிற் சில விடங்களிலும் அலைந்து திரிந்து, குடிகாரர்க



ளுக்கும் தீயோர்களுக்கும் பிரசங்கங்கள் செய்து புத்தி புகட்டி, இப்படிப்பட்ட வேலைகளை அநேகர் செய்யும் பொருட்டு "இரட்சண்ய சேனை" (Salvation Army) என்ற ஒரு கூட்டத்தை நிர்மாணித்து, அந்த இயக்கத்தை உலக முற்றிலும் பரப்பிக் கணக்கற்ற தொண்டர்களை அதில் பிரவேசிக்கும்படி செய்து, அதை ஒரு பெரிய ஸ்தாபனமாகச் செய்தார் வில்லியம் பூத்.

(16) ஒரு நல்ல சாதாரண குடும்பத்தில் உதித்து, நன்கு வாசித்து, தனது மாணவ வாழ்வை முடித்துக் கொண்டவுடன் பொது நலத் தொண்டில் பிரியம் உண்டாகி, அடிமை விஷயங்கள் அவரது மனதை உருக்கவே தனது வாழ் நாட்கள் முற்றிலும் அடிமை வியாபாரத்தைச் சட்ட மூலமாய் ஒழிக்க வேண்டுமென்று பார்லிமெண்டில் வாதாடி, பார்லிமெண்டை 2,00,00,000 (இரண்டு கோடி) பவுன் அடிமைகளின் எஜமானர்களுக்கு நஷ்ட ஈடாகக் கொடுக்கும்படி செய்து 8,00,000 அடிமைகளை விடுவித்து, அவர்களுக்குச் சுதந்திரம் கொடுக்கும்படி செய்தார் வில்லியம் வில்பர்போர்ஸ்.

(17) இளமைப் பருவத்திலேயே தனது பிழைப்பை நடத்தும் பொருட்டு நாள் 1-க்கு 10 விதமான வேலைகளைச் செய்து, அத்துடன் மிக மிகக் கஷ்டப்பட்டுச் சிறிது படித்து, அதன் பேரில் மயிர் வெட்டும் நாவிதத் தொழில் செய்து, கடைசியில் ஆஸ்திரேலியாவிற்குச் சென்று பற் பல வேலைகளைப் புரிந்து, தனது 19-வது வயதில் பொம்மைகளைப் போன்ற வேடிக்கையான மிட்டாய்களைச் செய்து விற்று விற்று அத் தொழிலில் அதிக அபிவிருத்தி யடைந்து, வருடம் 1-க்கு 6 லட்சம் பவுன் சம்பளம் வாங்கும் 2,600 பேர்கள்வரை வேலை செய்யும் அவ்வளவு பெரியதோர் மிட்டாய்த் தொழிற் சாலையை ஏற்படுத்தி, அதற்குத் தலைவராகவும் சொந்தக்காரராகவும் இருக்கிறார் மாக்பர்சன் ராபர்ட்ஸன்.

18. இத்தாலி தேசத்திற் பிறந்து வளர்ந்து கல்வி கற்றுக் கொண்டிருக்கும் பொழுது மின்சார ஆராய்ச்சிகளில் ஆவலுண்டாகி, அதிகமாய் அதில் உழைத்துத் தனது பரீட்சைகளின் மூலம் தந்தியனுப்பும் விஷயத்தை அறிந்தவுடன் இதனை இத்தாலிய அரசாங்கத்

திற்கு அறிவித்துத் தனது கருவியை விலைக்கு வாங்கிக் கொள்ளுமாறு வேண்ட அச் சர்க்கார் மறுக்கவே, இங்கிலாந்து கவர்ன்மெண்டார் அவருடைய கருவியை ஏற்று வாங்கிக் கொண்ட பிறகும் தனது அதிக அரிய ஆராய்ச்சிகளை யிடை விடாது செய்து செய்து, கம்பியில்லாத் தந்தியைக் கண்டு பிடித்து, உலகத்திற்குப் பேருபகாரம் செய்து அண்டப் புகழ் பெற்றிருக்கிறார் **மார்கோனி.**

(19) தன் 13-வது வயதில் தான் ஒருவாறு படித்து, முடிவான பரீட்சைக்குப் போக 3 ஆண்டுகள் காத்திருக்க வேண்டி ஏற்பட்ட காலத்தில், கொல்லனாகவும் செருப்புத் தைப்பவனாகவும் பிணம் அடக்கம் செய்பவனாகவும் மாதா கோவிலில் பாடுபவனாகவும் மணி அடிப்பவனாகவும் இருந்துகொண்டே பிரன்சு மொழியைக் கற்க ஆரம்பித்ததுமட்டு மன்றித் தனது கலாசாலையில் போதிக்காத பற் பல பாஷைகளையும் கற்றுத் தேர்ச்சி பெற்று, பாவ மன்னிப்பு (Confession) விஷயத்தில் ஆங்குள்ள ஆசிரியர்களுக்கும் தனக்கும் விரோதம் உண்டாகவே வீயன்னா சென்று, அங்குப் பரீட்சையில் தேறி, அங்கேயே இராப் படிப்பு உபாத்தியாயராகி, பிறகு இனியொரு இடத்தில் பேராசிரிய பீடம் ஏற்று, அநேக அரிய பிரசங்கங்களைச் செய்தும் உலகம் மதிக்கும் அநேக புஸ்தகங்களை எழுதியும் செக்கோசிலாவிக்கா நாட்டிற்குப் பெரிதும் உழைத்ததால் இன்று செக்கோசிலாவிக்கா தேசத்துக் குடியரசுத் தலைவராக விளங்குகிறார் **தாமஸ் ஜி மாசரிக்.**

(20) அடிமையாகவே பிறந்து, முற்கால இந்தியாவில் சத்திய காமன் போன்று தன் தகப்பன் யார்? அவர் எங்கிருக்கிறார்? என்பதுவும் அவர் அறியாது அடிமையாகவே வளர்ந்து, உடுப்பதற்குக்கூட உடையில்லாது கனமான சணல் துணி (சாக்கு)யை உடுத்திக்கொண்டு, நாள் 1-க்கு 7-மணி நேரம் உப்பளத்தில் வேலை செய்துவிட்டு இராப் பள்ளிக்கூடத்திற்குச் சென்று சிறிது கல்வி கற்ற பிறகு ஒரு மாதினிடம் வேலைக்காரப் பையனாக அமர்ந்து, 2 ஆண்டுவரை இருந்து கஷ்டப்பட்டு உழைத்துக்கொண் டிருக்கையில் வாசிப்பின்மீது ஆசை உண்டாகவே, 500 மைல்களுக்கு அப்பாலிருக்கும் ஹாம்ட்டன் நகருக்குப் பிரயாணமாகி, நடந்தும் போக்கு வண்டிகளில் ஏறிக்கொண்டும்



அங்குச் சென்ற, அங்கே பள்ளிக்கூடத்தைக் கூட்டிச் சுத்தம் செய்யும் தொழில் செய்துகொண்டே அநேக கஷ்டங்களுடன் போராடிக்கொண்டே ஆர்ம்ஸ்டிராங் பள்ளியில் குன்றா உற்சாகத்துடனும் குலையா ஊக்கத்துடனும் விடா முயற்சியுடனும் வாசித்துத் தேறி, அங்கேயே உபாத்தியாயராகி, அப்பால் டஸ்கிகீ என்ற கிராமத்திற்கு அழைக்கப்பட்டு ஆசிரியராகி, எவ்வளவோ கஷ்டப்பட்டுத் தனது சொந்த முயற்சியால் தனது ஜாதி நீகிரோவர்களுக்குப் பள்ளிக்கூட மொன்று சிறிதாக நல்ல முறையில் அமைத்த, தனது அபார உழைப்பால் அதை எவ்வளவோ வளர்த்து, பற்பல தொழில்களுடன் கல்வி போதிக்கும் பெரிய கல்விச் சாலையாக அதனை விருத்தி செய்து, கல்விக்காகச் செய்திருக்கும் அவர் தொண்டின் பெருமையையும் அவரது ஆற்றலையும் அமெரிக்காவிலே முதன்மை பெற்றுப் பல வழிகளில் சிறப்புற்றுப் பேர் பெற்று விளங்கும் ஹார்வர்ட் சர்வ கலாசாலையார் மதித்துக் கௌரவமாகக் கொடுக்கப்பட்ட எம். ஏ. (Hon. M. A) பட்டத்தையும் பெற்று, எத்தனையோ லட்சக் கணக்கான டாலர்களை (டாலர் அப்பொழுது ரூ 3—2—0. டாலர் அமெரிக்க நாணயம்.) யும் சொத்துக்களையும் அதற்கு ஆஸ்தியாகச் சேர்த்து வைத்து, நீகிரோவர்களுக்குப் பல கலைகளையும் போதிக்கும் மகா கல்லூரியாக—உலகம் மதிக்கும் அவ்வளவு மா பெரும் கலாசாலையாக இன்றும் என்றும் நிலவி வருமாறு அதை ஆக்கினார் **புக்கர் வாஷிங்டன்**

(21) 103-ஆண்டுகளுக்குமுன் தின்பண்டங்கள் செய்து கொடுக்கும் சிறிய கடை யொன்று வைக்கப் பெற்று, 15 வருடகாலம் ரொட்டி பிஸ்கோத்துப் போன்ற பலவகைப் பணியாரங்கள் தாமஸ் ஹண்ட்லி என்பவரால் உருசியுடன் செய்து விற்கப்பட்டு வந்ததை ஜனங்கள் வெகுவாய் உண்டு மகிழவே வியாபாரம் பெருக ஆரம்பித்தவுடன் கூட்டுச் சேர்த்துத் தொழிலை நடத்தி வியாபாரத்தைப் பெருக்கி, உயர் தரமான பிஸ்கோத்துக்களை வெகு நேர்த்தியாய் உண்டாக்கிப் பற்பல மெடல்களும் யோக்கிதாபுகழ் பத்திரங்களும் பெற்றுச் சிறப்புற்று, ரீடிங் என்ற இடத்தில் 36 ஏக்கர் நில விஸ்தீரணத்தில் மூன்றடுக்கு நான்கடுக்கு மெத்தைகளோடு கூடிய பெரியதோர் தொழிற் சாலை

யைக் கட்டித், தினந்தோறும் அதில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்களை வைத்து வேலை வாங்கி, மிகுந்த இலாபம் அடைந்து, அவர்களின் பிஸ்கோத்துக்களை உலகமெங்கும் பிரியத்துடன் வாங்கும்படியாகவும் கம்பெனியின் நிர்வாகஸ்தர்கள் பல பொது நலத் தொண்டுகளைச் செய்ததால் பிரிவி கவுன்ஸிலில் அங்கம் பெறும்படியாகவும் பிரபுத்வம் பெறும்படியாகவும் உயர்ந்து உலகப் பேர் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் ஹண்ட்லி அண்டு பாமர்ஸ் கம்பெனியார்.

(22) அற்ப வேலைகூடக் கிடைக்காது லண்டன் வீதிகளில் அலைந்து திண்டாடிய சேம்பர் என்பவரால் ஏற்படுத்தப் பட்ட சிறிய புஸ்தகக் கடையைச் சலியா முயற்சியுடன் பெருக்கியதால் இப்பொழுது இங்கிலாந்தின் ஒரு பெரும் புஸ்தகப் பிரசுரர்களாக இருக்கிறார்கள் சேம்பர்ஸ் (W. & R Chambers).

(23) துருக்கி தேசத்தில் ஒரு எளிய முகம்மதிய குடும்பத்தில் தோன்றி, தனது தாயார் விரும்பியவாறு ஒரு மசூதிப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கும் பொழுது, குறும்புகள் செய்தபடியால் பள்ளிக்கூடத்தினின்றும் உபாத்தியாயரால் வெளியேற்றப் பட்ட சிறிது காலத்திற்குப் பின்னுல் தனது அன்னையின் ஆட்சேபனையையும் அலட்சியம் செய்து, சலோனிகா ராணுவப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசித்துத் தேர்ந்து, பின்னும் மெட்டினுவிலுள்ள சேனை உத்தியோகஸ்தர்களைப் பழக்கும் பள்ளிக்கூடத்திலும் கான்ஸ்டாண்டிநோபிளிலுள்ள யுத்த சாஸ்திரப் போதனை பள்ளிக்கூடத்திலும் சேர்ந்து வாசித்து வெற்றி பெற்ற பிறகு சில தேசீயப் புஸ்தகங்களைப் படித்ததிலிருந்து தேசாபிமான முண்டாகி, இரகசிய சபைகளில் சேர்ந்து, சில கஷ்டங்களையும் அடைந்து, இராஜீயப் புரட்சியில் ஈடுபட்டு வேலைசெய்து, மாறு பெயருடன் பால்கன் யுத்த சமயத்தில் தன் தாய்நாட்டுச் சேனையில் சேர்ந்து உழைத்து, சிறிது காலத்திற்குப் பிறகு சென்ற ஐரோப்பியப் பெரும் போரில் ஒரு படைத்தலைவராய் நியமிக்கப்பட்டு, அதில் வெற்றியே பெற்று, கான்ஸ்டாண்டிநோபிளில் சீர் கேடான மந்திரி சபை இருக்கும்வரை துருக்கிக்கு ஒருவிதமான முன்னேற்றமும் கிடையாதெனக் கண்டு,



அதை அழித்துவிட்டுத், தேசீயக் கட்சியாரையே அதன் நிர்வாகத்திற்கு வரும்படி செய்து, அதனுல் கலிபா கட்சியைச் சேர்ந்தவர்களால் தேசீய வாதிகள் கைது செய்யப்பட்டு மால்டாவுக்கு அனுப்பப்பட்டபோதிலும் தனது திறமையால் தேசீய சபையை அங்கோரா நகரில் ஏற்படுத்தி வேலை செய்து, தேசீயச் சேனை திரட்டித் துருக்கியரின் விரோதிகளான கிரேக்கர்களை ஸகாரியா யுத்தத்தில் தோற்கடித்து, வெற்றி பெற்று, மாஜி சுல்தானை ஓட்டிவிட்டு, மாண்டு மறைந்து போகக்கூடிய நிலையிலிருந்த துருக்கியைக் காப்பாற்றி, அங்கோராவில் நூதனமுறையிற் குடி அரசு ஏற்படுத்தி, உலகமே கௌரவிக்கும்படியாக இப்பொழுது அரசாட்சி செய்கிறார் அங்கோராவின் ஜனத் தலைவர் ஹாஜி முஸ்தபா கமால் பாட்சா.

(24) ஜப்பானியன் எவனுமே தன தேசத்தை விட்டு அயல் நாட்டுக்கு வெளியேறிச் சென்றால் மரண தண்டனை என்று இருந்த காலத்திலும்கூட கல்வியில் இச்சை கொண்டு, அமெரிக்காவுக்குச் செல்லும் கப்பலொன்றில் கள்ளத்தனமாய்ச் சென்று, தனது கப்பற் பிரயாணச் செலவுக்காக அக் கப்பலில்தானே வேலைசெய்து கொண்டே அமெரிக்காவிற்குச் சென்றபொழுது, ஜப்பான்மீது விருப்புற்ற ஒரு கிறிஸ்தவ வியாபாரியின் ஆதரவில் 9 வருடங்கள் 3 கலாசாலைகளில் வாசித்துத் தனது படிப்பை முடித்துக்கொண்டு, தனது தாய் நாட்டில் ஒரு பள்ளிக்கூடம் தான் ஏற்படுத்தப் போவதாயும் அதற்குப் பொருள் தேவையென்றும் வேண்டுகோள்! செய்யவே, 5,00,000 டாலர்களுக்கு வாக்குறுதி கிடைக்கப் பெற்று, ஜப்பானுக்கு வந்து, கியோட்டோ என்ற நகரில் ஒரு கட்டிடத்தை வாடகைக்கு வாங்கி, அதில் 6 பையன்களுடன் ஒரு சிறு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்துப், பெரிதாக்கி, இப்பொழுது 41,20,000 என் பெறுமான ஆஸ்திகளைச் சொந்தமாக்கிக் கொண்டு ஆண்டு 1-க்கு ஏறக் குறைய 5,00,000 என் (என்-ரூ 1½ ஜப்பான் நாணயம்) செலவு செய்து, இதுவரைக்கும் சுமார் 8000 மாணவர்கள் படித்துத் தேறிப் பல வகைப் பட்டங்கள் பெறும்படியான அவ்வளவு பெரிய சர்வ கலாசாலையாக

டோஷிஷா (Doshisha) வைச் செய்வதற்கு மூலகாரணமா யிருந்து முன்னின்று உழைத்தார் ஜோஸப் ஹார்டி நீஷிமா (Neeshima).

(25) தனது 17-வது வயதில் லண்டனுக்குச் சென்று' வறுமையால் நசுக்கப்பட்டு, புஸ்தகம் கட்டும் தொழி (பைண்டு)லில் சேர்ந்து, சிறிது சிறிதாய் அபிவிருத்தி அடைந்து, 1906-ம் வருஷம், லெட்ச்வொர்த் என்னுமிடத்தில் டெம்பிள் பிரஸ் (Temple Press) என்ற அச்சுக்கூடத்தை ஸ்தாபித்து, "ஒவ்வொரு மனிதனுடைய புஸ்தகசாலை" (Everyman's Library) என்ற தலைப்பின் கீழ் 2,00.00.000 பிரதிகளை அச்சிட்டு வெளிப்படுத்தி, அவைகளைச் சுலபமான விலைக்கு விற்றுப் பிரக்கியாதி யடைந்து, புஸ்தகம் வெளியிடும் பெரிய வியாபாரியாக விளங்கினார் டெண்ட் (Dent).

(26) இத்தாலி தேசத்தில் ஒரு சாதாரணக் கொல்லன் மகனாய்ப் பிறந்து வளர்ந்து, கொஞ்சம் படித்துப் பள்ளியிலிருந்து வெளியேறிய வுடன் தகப்பனார் மகனுக்கு நகர சபையில் ஒரு உத்தியோகம் தேடிய பொழுது கிடைக்காமற் போகவே, ஸ்விட்ஜர்லாண்டு தேசத்திற்குக் கையில் ஒரு காசுமின்றி வயிற்றில் பசியுடன் புறப்பட்டுப் போய், அங்கு அலைந்து அலைந்து அலுத்து ஒரு கட்டிடம் கட்டிக்கொண் டிருந்த கொத்தனுக்குச் செங்கல் தலையிற்சுமந்து கொண்டுபோய்ப் போடும் வேலையில் அமர்ந்து, நாள் தோறும் 11 மணி நேரம் மகா கஷ்டப்பட்டு வேலை செய்தபோதிலும் தனது நல்ல சட்டையைப் பார்த்து எஜமானன் தன்னைச் சோம்பேறி என்று சொல்லியதால், அங்கிருந்தும் பணமின்றி லூசேன் பட்டினத்துக்குப் போய்ப், பல வழிகளில் தினந்தோறும் வேலை செய்து பிழைத்துக்கொண் டிருந்த சில நாட்களுக்குப் பிறகு, ஜெர்மனிக்கும் ஆஸ்திரியாவுக்கும் போய், அத் தேசத்தாரின் வாழ்க்கையை அறிந்து, இத்தாலிக்குத் திரும்பிய பொழுது, தன் தாய் காலஞ் சென்றிருப்பதை அறிந்து, தனக்குத் தக்க போஷணை கிடைக்காததால், ஸ்விட்ஜர்லாண்டுக்குத் திரும்பிப் போய்ச் சில பத்திரிகைகளுக்கு எழுதி வாழ்ந்துகொண் டிருக்கையில், ஸ்விஸ் ஜனங்களின் போக்குப் பிடியாது அங்கிருந்து ஆஸ்திரியாவிற்குச் சென்று, அத்



தேசத்தாருக்கு விரோதமாகப் பத்திரிகைகளில் எழுதவே, அவ்வரசாங்கத்தாரால் சிறை செய்து கைதியாக வைக்கப்பட்ட பொழுது, அத் தேசத்தின் எல்லையை விட்டு வெளியேறி இத்தாலிக்கு வந்து, தன் தகப்பனாருடன் இருந்து, ஒரு கல்யாணத்தை முடித்து, பத்திரிகைத் தொழிலில் ஜீவனத்தை நடத்திக்கொண் டிருக்கையில் ஐரோப்பிய மகா யுத்தத்தில் தன் தாய் நாட்டிற்கு உதவியா யிருந்து, போர் முடிந்த வுடன் பொது உடைமைக் கட்சியைத் தடுக்கும் பொருட்டு பாஸ்சி (Fasci) என்ற ஒரு புதிய இயக்கத்தை உண்டாக்கி, அதை அங்குப் பரப்பி இத்தாலிய அரசாங்கம் எந்தக் காரியமும் செய்யப் பலமற் றிருப்பதைத் தெரிந்து, தனது சைன்யங்களைச் சேர்த்துக் கொண்டு ரோமுக்குச் சென்றவுடன், அவ் வரசர் தாழ்ந்து போகவே, தான் விரும்பியவாறு மந்திரி சபையை ஏற்படுத்தி, தனது மனம்போல் சர்வாதிகாரியாய் இன்று இத்தாலி தேசத்தை ஆளுகின்றார் முசலோனி.

(27) ஒரு சிறிய பட்டியில் மிக மிகச் சர்வ சாதாரணமான குடும்பத்தில் ஒரு சிறிய மரக் குடிசையிற் பிறந்து, படிக்கும் வயது வந்தவுடன் அதிகாலையில் எழுந்து பால் கறந்த பிறகு வீட்டுக்கு வேண்டிய விறகுகளைப் பிளந்து கொடுத்து விட்டு 6 மைல்களுக்கு அப்பாலிருக்கும் கிராமப் பள்ளிக்கூடத்திற்குத் தினமும் சென்று வாசித்து, உயர்தரப் பள்ளியிலும் படித்துக், கொஞ்சக் காலம் வியாபாரக் கலாசாலையிலும் பயின்றுவிட்டுத் தனது 16-வது வயதில் தனக்கு உத்தியோகம் தேடும் பொருட்டு கிளிவ்லாண்டு என்னும் நகரத்தின் வீதிகளி லெல்லாம் எத்தனையோ நாட்கள் அலைந்து அயர்ந்து, ஒரு இடத்தில் இலாபம் கிடைத்தால் ஏதோ சற்றுச் சம்பளம் பெற்றுக்கொள்வதாகப் பேசி மூன்று மாதம் சம்பளமில்லாதே வேலை செய்து, கடைசியில் 50 டாலர் அடைந்து. தனது உற்சாகத்தாலும் உழைப்பாலும் மெல்ல மெல்லக் குமஸ்தா வேலைக்கு உயர்ந்து, பிறகு கணக்கு வேலைக்கு வந்து, கொஞ்சம் பொருள் சம்பாதித்துக் கமிஷன் ஏஜண்டு வேலை பார்த்து, என்ன என்ன புதிய தொழில்கள் செய்யலாமென்று ஆலோசித்துக் கொண்டே பல விடங்களுக்கும் யாத்திரை செய்து கவனித்துக், கடைசியில் மண்ணெண்ணைக் கிண

ங்கள் தோண்டி வேலை செய்யவே, தக்க இலாபம் உண்டானவுடன் மென்மேலும் அத்தொழிலில் அதிகமாகப் பிரவேசித்து, அதன் மர்மங்களை அதிகமாக அறிந்ததால் மற்றவர்களுடைய மண்ணெண்ணெய்ச் சுரங்கங்களையும் சுலபமான விலைக்கு வாங்கி, 10,00,000 டாலர் மூலதனத்துடன் ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனி (Standard Oil Company) என்ற கூட்டுக் கம்பெனியை ஏற்படுத்தி, அதற்குத் தானே தலைவராக நின்று வேலை செய்ததால் 1899-ம் வருஷத்திலே உலகத்திலேயே ஒரு பெரும் கோடீஸ்வரராகி, அவருடைய ஆஸ்தி மொத்தம் 6 40,00 000 பவுன் என்றும் அவருடைய வருமானம் நிமிஷத்திற்கு 5 பவுன் என்றும் அப்பொழுது கணக்கிடப்பட்ட போதிலும், 1921-ம் வருஷத்தில் 48,00,00,000 பவுனுக்குச் சொந்தக்காரராகி, அமெரிக்காவிலும் அநேக அயல் நாடுகளிலும் இருக்கும் அநேக பொது ஸ்தாபனங்களுக்கும் பரோபகார வேலைகளுக்கும் சர்வ கலாசாலைகளுக்கும் 10,00,00,000 பவுன் கொடுத்து உதவி 1910-ம் வருஷத்தில் ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனியின் பாகத்தைத் தனது மக்களுக்குக் கொடுத்து விட்டுத், தனது ஆஸ்தியின் பெரும் பாகத்தை விநியோகித்து உலக க்ஷேமத்திற்காகவும் நாகரீக வளர்ச்சிக்காகவும் அறிவு அபிவிருத்திக்காகவும் தனது பெயரால் மகா பெரும் தர்ம ஸ்தாபனம் ஒன்றை ஸ்தாபித்து உலகப் புகழுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார் ராக்பெல்லர்.

## இந்தியா.

(28) சிறு வயதிலேயே தகப்பனார் காலஞ் சென்று விடவே, விதவையான தனது தாயாரின் உதவியால் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து, ஏழைக் குடும்பமானதால் தனது குடும்பத்தைக் காப்பாற்றும் பொருட்டு தான் ஒரு கணக்கப் பிள்ளையினிடம் மாதம் 1-க்கு ரூ 2, 3 பெற்றுச் சிற்றாளாய் இருந்துகொண்டிருக்கும் பொழுது தனது உயர்வான ஞாபகசக்தியாலும் கெட்டிக்காரத்தனத்தாலும் அவ்வூருக்கு வந்த தாசில்தாரது மனதைக் கவர்ந்து, அவரது உதவியின் மூலம் உயர்தரக் கல்வி கற்று, தனது சலியா உழைப்பால் பரீட்சைகளில் தேர்ந்து, சாதாரண உத்தியோகம் பெற்று, தனது சாமர்த்தியத்தால் மகா உன்னத பதவி அடைந்து,



மெல்ல மெல்ல முன்னேற்றமுற்று, கடைசியில் ஹைகோர்ட் ஜட்ஜி பதவி பெற்றார் ஸர். முத்துஸ்வாமிஅய்யர்.

(29) பாஞ்சாலத்தில் பிறந்து பாஞ்சாலத்தில் வளர்ந்து, ரூர்க்கி தாமஸன் காலேஜில் வாசித்த பிறகு, மராமத்து இலாகாவில் உத்தியோகம் பார்த்து, டில்லி தர்பார்களில் ஊக்கம் காட்டி வேலை செய்து, பல விடங்களில் பெரும் பெருங் கட்டிடங்களைக் கட்டி முடித்துச், சர்க்கார் வேலையிலிருந்து விலகி, உபகாரச் சம்பளம் பெற்று, மறுபடியும் பாட்டியாலா சமஸ்தானத்திற்கு இஞ்சினீயராகி 7 வருஷம் வேலை பார்த்து விலகி, தனது இஞ்சினீயரிங் அறிவை விவசாய விஷயத்தில் செலுத்தித் தரிசாய்க் கிடக்கும் 23,000 ஏக்கர் நிலங்களைச் சர்க்காரிடம் குத்தகைக்கு வாங்கி, அவைகளுக்குத் தகுந்த விதமாய் நீர்பாய்ச்சி, நன்றாய் விவசாயம் செய்து, அதிக இலாபம் அடைந்து வந்ததால், மறுபடியும் 125 சதுர மைல் விஸ்தீரணமுள்ள 80,000 ஏக்கரில் 64,000 ஏக்கர் சர்க்காருக்குச் சொந்தமாயும் மீதி தனக்குச் சொந்தமாயும் உள்ள நிலத்தில் 30 லட்சம் ரூபாய் செலவு செய்து 72 மைல் நீளமுள்ள நீர்ப்பாசனக் கால்வாய்களையும், 626 மைல் தூரம் சென்று நீர் பாயும் வாய்க்கால்களையும், 45 பாலங்களையும், 565 மைல் நீளமுள்ள கிராம ரஸ்தாக்களையும் உண்டாக்கி வேலை செய்து மகா பெரிய விவசாய நிபுணராகிப், பெரும் பணமும் புகழும் சம்பாதித்து, ஸர் பட்டமும் பெற்று 30 லட்சம் ரூபாய் சமீப காலத்தில் தர்மம் செய்து அழியாக் கீர்த்தி பெற்றார் ஸர். கங்காராம்.

(30) திருவாங்கூர் அரசருக்குப் பந்துவான ஒரு குடும்பத்தில் பிறந்து, தாய்ப்பாஷையும் சமஸ்கிருதமும் கற்றுச், சிறு வயதில் திருவனந்தபுரம் அரண்மனையிலிருக்கும் பொழுது, சித்திரம் எழுதுவதில் சித்தம் திரும்பி, அதைக் கவனித்துக்கொண்டிருக்கையில் அரண்மனைச் சித்திரக்காரனிடம் அவர் அனுமதி அவர் எவ்வளவோ முயன்று முயன்று கேட்டும் வேண்டியும் அவருக்கு ஏற்றபடி சித்திரம் எழுதுவதைப் பொறாமையால் அவன் தக்கபடி போதிக்காமலிருந்த பொழுது, அரண்மனைக்குப் படங்கள் எழுதும்படி

வரவழைக்கப்பட்ட ஐரோப்பிய ஒருவனால் அதை நன்கு அறிந்து, தனது சதா உழைப்பால் அத்தொழிலில் நிபுணத்துவம் பெற்று, அநேக சிறந்த படங்கள் எழுதி நல்ல பெயர் பெற்று, அநேக தங்கப் பதைக்கங்கள் அடைந்து, பரோடா மகாராஜாவினுடைய உதவியால் அயல் நாட்டிலிருந்து ஒரு இயந்திரம் வரவழைத்துத், தனது படங்களை அச்சிட்டு வெளியேற்றிக், குறைந்த விலைக்கு விற்றுத், தற்கால இந்தியாவிலே சித்திரக்கலையில் ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்கி, இந்தியா முற்றிலும் ஓவியர் மணியாகக் கீர்த்தி பெற்று விளங்கினார் ராஜா ரவிவர்மா.

(31) சென்னை நகரில் ஒரு சின்னஞ் சிறு கடை வைத்துக் கொண்டிருந்து, தனது ஊக்கத்தால் முன்னுக்கு வந்து, "பெருமாள் செட்டி பென்ஸில்" என்று தனக்காக அயல் நாட்டில் செய்து இங்கு வரவழைக்கப் பெற்ற உயர்வான பென்ஸிலால் இந்தியா வெங்கும் பெயர் பெற்று, ஒரு அச்சு இயந்திர சாலையையும் வாங்கி, தீவிரமாக வேலை செய்து முன்னுக்கு வந்து, இப்பொழுது சென்னையில் பிரபல அச்சிடுபவர்களாகவும் மேலான பென்ஸில் வியாபாரிகளாகவும் விளங்குகிறார்கள் பெருமாள் செட்டியார் குமாரர்கள்.

(32) போதிய மூலதனமின்றி ஆரம்பிக்கப்பட்டு, தபாற் செலவிற்குங்கூடப் பணமில்லாத் திண்டாட்டத்திலிருந்து, ஆசிரியர்களுடைய அபார உழைப்பால் இன்று சுமார் 20000 சந்தாதாரர்களைக் கொண்டு, இந்தியாவிலேயே சிறந்த பத்திரிகைகளில் ஒன்றாக இன்று விளங்குகிறது "ஹிந்து"ப் பத்திரிகை.

(33) சிறு குழந்தைகளுக்கு மட்டும் மருந்துகள் தயாரித்து விற்க ஆரம்பித்துத், தனது ஊக்கத்தாற் பற்பல வியாதிகளுக்கும் மருந்துகளை உற்பத்தி செய்யும் வைத்தியசாலை ஒன்றை ஏற்படுத்தி, அநேக நல்ல மருந்துகளைச் செய்து நல்ல வருமானமும் நல்ல பேரும் பெற்றார் தஞ்சாவூர் ராவ்சாகிப் ஆபிரகாம் பண்டிதர்.

(34) கையில் காசின்றித் தென்னாப்பிரிக்காவில் தனது உற்சாகத்தாலும் தைரியத்தாலும் விடா முயற்சியுடன் வியாபாரம்



செய்து, பெரும் பொருள் தேடிக்கொண்டு திரும்பி இந்தியாவிற்கு வந்து, சென்னையில் சிறந்த வியாபாரியாக விளங்கினார் பழனியாண்டி பிள்ளை.

(35) சென்னையில் ஒரு சாதாரணப் புஸ்தக வியாபாரியாயிருந்து, பள்ளிக்கு வேண்டிய பற்பல வாசக புஸ்தகங்களைத் தமிழிலும் தெலுங்கிலும் வெளியிட்டு, அபிவிருத்தி அடைந்து, அச்சுக்கூடம் ஏற்படுத்தித், தமிழ் தெலுங்கு மலையாளம் இங்கிலீஷ் முதலிய பாஷைகளிலெல்லாம் ஆரம்பப் பள்ளிப் பாடப் புஸ்தகங்கள் வெளியிடும் வியாபாரிகளாக விளங்குகிறார்கள் சென்னை குமாரஸ்வாமி நாயுடு குமாரர்கள்.

(36) ஆதியில் மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்து, ஆண்டிரு யூல் அண்டு கோ (Andrew yule & Co) என்ற கம்பெனியில் சின்னஞ் சிறு குமஸ்தாவாய் நுழைந்து, மெதுவாக உயர்ந்து, அக் கம்பெனியின் கூட்டுக்காரராகிக், கடைசியில் மதுரை ஜில்லாவில் கன்னிவாடி ஜமீனை விலைக்கு வாங்கினார் ராதாகிருஷ்ண அய்யர்.

(37) சகல வியாதிகளுக்கும் மருந்தென "அமிர்தாஞ்சனம்" என்ற மருந்தை உண்டாக்கி, பல பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்து, தென்னிந்தியா வெங்கும் பிரக்யாதி பெற்று, வியாபாரத்தைப் பெருக்கி, ஒரு தினசரிப் பத்திரிகையை இலாபத்துடன் நடத்தும்படியான அவ்வளவு பொருள் சம்பாதித்து, ஆந்திர தேசத்திற்கும் ஆந்திர மொழிக்கும் தொண்டு செய்ததால் செய்வதால் தேசோத்தாரகர் என்ற பட்டமும் பெற்று விளங்குகிறார் "ஆந்திரப் பத்திரிகா" பத்திராதிபர்—ஆசிரியர் நாகேஸ்வர ராவ்.

(38) தங்கள் சொந்த முயற்சியால் முன்னேற்றம் அடைந்த ஒரு குடும்பத்தில் பிறந்து, ஆங்கிலக் கல்வி கற்று, தொழிலில் பிரவேசித்துக், கவனிப்புடன் வேலை செய்ததால் வியாபாரத்தில் வெற்றி பெற்று, பற்பல தொழிற் சாலைகளுக்கும் பாங்குகளுக்கும் நிர்வாகஸ்தராகி, அநேக தர்மங்களைச் செய்து, பம்பாயில் பெரும் புகழுடன் விளங்குகிறார் பைரம்ஜி ஜிஜிபாய்.

(39) கான்பூரில் லால் அம்லி அல்லது செம் புளிய மரத்தடியில் முதலாவது ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலையானது புளிய மரம் பருத்து ஓங்கி அடர்ந்து வளருவது போன்று லால் அம்லி என்ற வியாபார அடையாளத்துடன் உயர்ந்த கம்பளித் துணிகள், லோஹிகள், பிளாங்கட்டுகள் முதலியவைகளை உண்டாக்கி, இந்தியா முற்றிலும் பெயர் பெற்றுப் பெரிய உல்லன் தொழிற்சாலையாக விளங்குகிறது கான்பூர் உல்லன் மில்ஸ்

(40) ஒரு சாதாரண பார்ஸி குடும்பத்தில் பிறந்து, தனது ஊரிலிருந்து பிழைக்கும் பொருட்டுப் பம்பாய்க்கு வந்து, கண்ணாடிப் புட்டிகளை (பாட்டில்) வாங்கும் பொருட்டும் விற்கும் பொருட்டும் அமைக்கப்பட்டிருந்த தனது மாமனாருடைய சிறிய கடையில் தன்னுடைய 12-வது வயதில் எடுபிடி வேலைக்கமர்ந்து, அப் பக்கங்களிலிருந்த கண்ணாடிப் புட்டிகளைத் தேடி அலைந்து விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து, ஒழிவு நேரங்களில் தனது மாமனாரிடமே தாய்ப் பாஷையும் கணக்கும் சிறிதே கற்று, அவருடைய மகளையே மணந்து, பாட்டில்கள் வாங்கிக் கொண்டிருந்தபடியால் "பாட்டில் வாலா" என்ற பெயர் பெற்றுக், கல்கத்தாவிலிருந்த தனது மைத்துனர் கடைக்கு உதவி ஆளாய்ச் சென்று, அப்பால் வேறு கடையின் சைனா தேசத்தின் கிளைக் கடைக்குக் கணக்குப் பிள்ளையாகவும் குமஸ்தாவாகவும் சென்று, அக் கடை முறிந்து விடவே பம்பாய்க்குத் திரும்பி வந்து, தனது மாமனாருடன் வியாபாரத்திற் கூட்டுக் கூடி, ரூ 40,000 திரட்டி, மீண்டும் சைனாவிற்குச் சென்ற பொழுது, பிரான்ச்சுச் சண்டைக் கப்பலால் பிடிக்கப்பட்டு, அதிலே தன்னுடைய பொருள் அனைத்தையும் இழந்து, தென்னாப்பிரிக்காவிற்குக் கொண்டு போகப் பட்டு, அங்கிருந்த பிரிட்டிஷ் ஸ்தானாதிபதியின் உதவியால் மீண்டும் பம்பாய்க்கு வந்து, மறுபடியும் வியாபாரம் செய்ததில் நஷ்டம் ஏற்பட்ட போதிலும், விடா முயற்சியுடன் செய்ததால், பொருள் அடைந்து பெரும் பணக்காரராகி, பெரும் பெரும் தர்மங்கள் செய்து, பல பெரிய கௌரவங்கள் அடைந்து, விக்டோரியா சக்கிரவர்த்தினியாரால் பிரபுத்துவப் பட்டமும் கொடுக்கப் பெற்றுத் தர்மப் பிரபுவாய் விளங்கினார் ஸர். ஜாம்செட்ஜி ஜிஜிபாய்.

---



# உடற் பயிற்சி.

சாண்டோ ஸ்ரீமான் லெ. சோமசுந்தரம் அவர்கள்

(உடற்பயிற்சி, காற்று, இரத்தம் இம் மூன்றுக்குமுள்ள தொடர்பினை ஆராய்தலே இக் கட்டுரையின் நோக்கம்.)

பிறந்தது முதல் இறந்து போமளவும் நல்ல காற்றை யனுபவிக்காமலே அநேகர் நோய் வாய்ப்பட்டு, அந் நோய் வேறு காரணங்களால் வந்ததென்றெண்ணி, கண்ட மருந் தெல்லாம் தின்று உடம்பைக் கெடுத்துக்கொண்டு உயிரொழிகிறார்கள். அநேகர் தேகம் இளைக்கிறதென்றும், அதை உணவால் புஷ்டியாக்கக் கூடுமென்றும் நினைத்துப் பெருந் தீன் தின்று, தேகத்தி னுள்ளிருக்கும் கருவிகளால் செய்து முடிக்கக் கூடாத வேலையைக் கொடுத்து, உடம்பின் கூறுகளை யெல்லாம் அலக்கழித்துப் பலவீனப்படுத்தி நித்திய நோயாளிகளாகவே தொலைகிறார்கள். ஏன்? இவர்கள் நல்ல காற்றுள்ள விடத்தில் உடற் பயிற்சி செய்யாக் குறையினாலேயாம்.

உடற் பயிற்சியை நாம் பலவகையால் பெறலாம். உடற் பயிற்சி செய்யும்போது நமது சுவாசப் பை காற்றை அதி வேகமாக இழுக்கின்றது. அதன் உதவியால் துரிதமாக இரத்தம் பரிசுத்த மடைகின்றது. அவ்வாறு இரத்தத்தைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுவதினால் அதற் கேற்றபடி அவ்வளவு கரியமல வாயுவை இரத்தத்தினின்றும் அகற்றிக் கொள்ளுகின்றோம். நாம் உடற் பயிற்சி செய்யும்போது நமது மார்பு பூரித்து எழும்

பியும் இறங்கியும் மாறுபட்டுக்கொண்டு சுவாசப்பை அதிகக் காற்றை உட்கொள்ளும் பொருட்டு நாடி நிற்கும் காரணத்தால், இருதயம் அடித்துக் கொள்ளுதல் அதிகரித்துச் சரீரத்தில் இரத்தம் நன்றாக ஓடிப் பரவிப் பொதுவாகச் சரீரம் முழுமைக்கும் சுவாசப் பைக்கும் சௌக்கியம் விளைவிப்பதுடன் இருதயத்துக்கும் முதன் முதல் முக்கிய சௌக்கியத்தைக் கொடுக்கின்றது.

இரத்தமானது இருதயத்தி லிருந்து தேக முழுவதும் பரவிச் சுற்றி வருகிறது. அது ஒவ்வொரு பாகத்திலும் சென்று அளவுப்படி வியாபிக்க வேண்டுமானால் ஒரே யொரு தரமாவது தேகத்திலுள்ள நரம்புகளெல்லாம் ஒக்க உபயோகிக்கப் படுதல் அவசியம். தசை நரம்புகள் உபயோகிக்கப்படும் விதத்தால் அவைகளிற் சேர்ந்திருக்கும் அசத்துகள் வெளியாகி ஒதுங்கி ஓட்டெடுத்து உடம்பிற்கு உல்லாசத்தையும் சௌக்கியத்தையும் உண்டாக்கும். சரியான இரத்தப் பாய்ச்ச லில்லாத உடம்பில் ஆரோக்கிய மிராது. ஆகையால் ஒன்றிருக்கு மிடத்தில்தான் மற்றொன்று மிருக்கும். இரத்தவோட்ட மில்லாவிடில் நரம்புகளுடைய வலிவிற் காதார மில்லை யாதலால் அது உடம்பிற்கு அத்யாவசியமானது. அதன் சுத்தத்தையும் பெருக்கத்தையும் அனுசரித்துத்தான் ஆரோக்கிய நிலை நிர்ணயிக்கப் படும். இரத்தத்தைச் சுத்தி செய்து கொள்ளவேண்டுமானால் சுத்தா காயத்தை யுட்கொண்டு உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

உடற்பயிற்சி செய்யும் பொழுது நம்முடைய சரீரத்தை மூடியிருக்கும் தோல் எங்கும் இரத்தம் நன்றாகப் பாய்ந்து, வேர்வை வெகு ஏராளமாக வழிந் தோடச் செய்து, தேகத்தில் அதிகயாக வளர்ந் திருக்கும் கொழுப்புத் தசையைக் கரையப் பண்ணும். சருமத்தின் மயிர்க்கால்களின் வழியாய்த் தேகத்தினின்று அதிகத் தண்ணீரும் சிலவித உப்புக் காரமும் உடற் பயிற்சி செய்யும் பொழுது வெளியே அகலுகின்றன. தேகத்தி லுண்டாகும் சிலவித கரியமல வாயு-உப்பு வாயு-ஜலவாயு இவைகளை எல்லாம் உடற் பயிற்சியால் பிரித்து அகற்றி, நற் காற்றை அதர்வது பிராண



வாயுவை இரத்தத்தில் கலந்து அதைப் பரிசுத்தம் செய்யும்படி ஏற்படுத்துகின்றோம். இரத்த வோட்டத்தையும் அதிகப்படுத்திக் கொள்ளுகின்றோம். இக்காரணத்தால் நமது தேக மெங்கும் சுத்த இரத்தம் பரவித் தேகத்தின் ஒவ்வொரு பாகத்திற்கும் அதிக வலிமை உண்டாகின்றது. உடற் பயிற்சி செய்யும் பொழுதெல்லாம் இரத்தாசய மாகின்ற இருதயத்திற்கும், அவ் வாசயத்திலிருந்து புறப்பட்டுத் தேகமெங்கும் வலைபோல் பரவி விளங்கும் இரத்தவாகினிகளாகின்ற தமனிகளுக்கும், ஓர் அழகான சம்பந்தம் ஏற்பட்டு, தமனிகளில் பழைய இரத்தம் நிற்காமல் ஓட்டப்பட்டு, சுவாசப் பையின் உதவியால் பிராணவாயு பெற்றுச் சுத்தமாகித் தேகத்திற்கு எப்பொழுதும் சௌக்கியத்தை விளைவிக்கின்றது. இப் பயிற்சியை ஏற்றத் தாழ்வு என்பதின்றிச் சரிவரச் செய்து வந்தால் அதைவிட நமது தேகத்தை வளர்க்கும் மருந்தொன்றை உலகிலே வேறு காண முடியாது.

தசையானது தக்க கொழுமையுடன் பலமுற்று வளரும் போது அதற் கேற்றவாறு நரம்புகளும் தாதுவும் வலுவை யடைகின்றன. இரத்தமே எல்லா உறுப்புக்களையும் போஷித்து வருவதாகும். இது செவ்வையாகத் தேக முழுவதும் விரைவாய்ப் பரவச் செய்வதற்கு உடற்பயிற்சியே தேவை. இவைகளின் பயனாக ஆண்மையுடையவன் எப்படியும் உலகத்தில் முன்னுக்கு வருவானென்பதில் தடையில்லை. தேகத்தின் ஒவ்வொரு பாகமும் சரியான நிலையிலிருந்து தன் கடமையைத் தக்கவாறு நடத்திக் கொண்டு வரும்போது தேகாரோக்கியம் உண்டாகும். தேகாரோக்கியத்தோடு ஆண்மையும் மிகுந்திருக்கும்.

உடற் பயிற்சியானது, தேகாரோக்கியம்-வலிமை-நோயின்மை முதலியவைகட்கு மிகவும் அவசியமானது. உடற் பயிற்சிகள் இல்லாமற் போனால் சரீரத்தில் உண்டாகும் அசுத்தங்கள் சுலபமாய்க் கழிவதற்கு ஏது ஏற்படுகிறதில்லை. பயிற்சி யின்மையால் சுவாசப் பைகள் சுருங்கி சுவாஸத்திலும் பலமற்று விடுகிறது. இரத்தத்தின் சஞ்சாரமும் மந்தப்பட்டு அதனால் சரீரத்தில் வியர்வை

விசேஷமாய் உண்டாவதும் நின்று விடுகிறது. அப்படியே சீரண சக்திக்கும் குறைவு ஏற்படுகிறது. மற்றும் சரீரத்திலுள்ள தசைகள்-நரம்புகள்-எலும்புகள் முதலியன பலப் படுவதற்கும் ஏதுவில்லை. ஆகவே, போதுமான அளவு சரீர முயற்சி அற்றிருக்கும் ஒரு சரீரம் பல வகையான கோளாறுகளால் பல வியாதிகளுக் குள்ளாகும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தேகத்தின் ஒவ்வொரு உறுப்புக்களும் அவ் வகைகளுக் கேற்பட்ட தொழில்களைச் சரிவரப் பூர்ண பலத்துடன் செய்ய வேண்டியதற்கு ஆதாரமா யிருப்பது இரத்த வோட்டமானால், இந்த ஓட்டத்தை விரைந் தோடும்படி செய்து அதன் மூலமாய் அத் தொழில்களும் விரைந்து நடக்கும் படி செய்ய வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை யோசித்துப் பாருங்கள். அப்படி இரத்தம் விரைந்தோடி சரீராவயவம் எங்கும் பாய்வதற்கு உடற் பயிற்சிக்குச் சமானமான வேறு சாதனம் இல்லையென்றால் உடற் பயிற்சியின் மேன்மை எவ்வளவு அத்யாவசியமாகிறது? என்பதை நேயர்களே! சற்றே நிதானியுங்கள்.

உடற் பயிற்சிகள் செய்யுங் காலங்களில் நுரையீர லென்ற சுவாச இயந்திரம் அகலமாக விரிந்து அதிக ஆகாயத்தை உட்கொள்ள நேருவதால், இரத்தம் அதிகச் சுத்தமாகித் தேகத்திற்குப் பலத்தையும் ஆரோக்கியத்தையும் தருகிறது. ஒருவன் படுத்துக் கொண்டிருக்கிற சமயத்தை விட எழுந்து நிற்கும் போது அரைப் பங்கு ஆகாயத்தை அதிகமாக உட்கொள்கிறான். ஒரு மணிக்கு மூன்று மைல்கள் வீதம் நடந்து செல்வானானால் மூன்று பங்கு ஆகாயத்தை உட்கொள்கிறான். இவைகளினால் வெவ்வேறு பயிற்சிகளின் பலாபலன் ஒருவாறு வெளியாகிறது. இப்படியே உடற் பயிற்சிக்குத் தகுந்த அளவுதான் தேகக் கழிவுகளும் வெளியேறுகின்றன. வளர்ந்த ஆள் சும்மா இருக்கும்போது ஒரு மணி நேரத்தில் சுமார் 600-கிரேன் கரியமல வாயுவையும் பலமான உடற்பயிற்சிகளைச் செய்யும் போது அதே நேரத்தில் சுமார் 2400-கிரேன் கரியமல வாயுவையும் வெளியேற்றுகிறானென உடற் கூறு சாஸ்திரிகள் கணித்திருக்கிறார்கள். கரியமல வாயு தேகத்தை விட்டுப் பூரணமாய் வெளியாகாவிட்டால் அது சரீரத்திலுள்ள இரத்தத்தில்



சம்பந்தப்பட்டு அதை விஷமாக்கும். அதனால் ராஜ வுறுப்புகளுக்குப் பல வீனம் ஏற்பட்டுப் புத்தி மந்தமும் காரியங்களில் ஊக்கமின்மையும் உண்டாகும். ராஜ வுறுப்புகளுக்கு மட்டுமல்ல இப்படியே மற்ற வுறுப்புகளுக்கும் பல வீனம் ஏற்படும்.

ஒரு நாள் முழுவதும் ஒரே இடத்தில் உட்கார்ந்து வேலை செய்பவர்கள், வேலையை விட்டு வரும் சாயங்காலத்தில் உண்டாகும் தேகச் சோர்வு-மனச் சோர்வு முதலியன, சுத்த ஆகாயமுள்ள வெளிகளில் போய் உலாவி வருவதாலும், அவசியமான உடற் பயிற்சிகள் செய்வதனாலும் மாறுவதை அநுபவத்தில் அறியலாம். மேலும் நல்ல பசியும் போஜனத்தைச் சுலபமாய்ச் சீரணிக்கத் தக்க சத்துவமும் நல்ல நித்திரையும் உண்டாகும். கல்வி கேள்விகளில் தேர்ச்சியடைய வேண்டினும் சரியான காலங்களில் போதுமான அளவு உடற் பயிற்சி அவசியம். உடற் பயிற்சியினால் மூளையும் மனோ தத்துவங்களும் நாளுக்கு நாள் விருத்தி யடைந்து அதன் மூலமாய்க் கல்வி கேள்விகளிலும் விருத்தி யுண்டாகிறது. போதுமான அளவு உடற் பயிற்சி இல்லாவிட்டால் படிப்பிலும் ஏற்றமில்லாமல் போவதுடன் அகால மரணத்திற்கும் ஏதுவாகிறது. உடற் பயிற்சியினால் ஜீரணம் வேகப்படுகிறது; சாப்பாட்டிலுள்ள நல்ல சத்துக்கள் யாவும் சரீரத்தில் தன்னினப்படுகிறது; மல சுத்தி தாராளமாய் நடக்கிறது; உடற் பயிற்சி சரீரத்திலுள்ள அநேக வியாதிகளையும் காலக் கிரமத்தில் விலகும்படி செய்ய வல்லதாயிருக்கிறது.

எப்போதும் வீட்டினுள்ளேயே யிருப்பவர்கள், அதிலும் அசையாமல் உட்கார்ந் திருப்பவர்கள் வியாதியினால் வெகுவாய் வருந்துவார்கள். வெளிப்புறங்களிற் பயிற்சி செய்பவர்களுக்கு அது ஒருபோதும் உண்டாகாது. பயிற்சி யில்லாது உட்கார்ந் திருப்பவர்களுக்குப் பல விதமான கெடுதிகளுண்டாகின்றன. இரத்தம் ஓடுகிற வேகம் மட்டிட்டுப் போகின்றது. அதனால் ஜீவாதாரமான கருவிகள் தத்தம் வேலையில் மந்தப்படுகின்றன. இராக் காலங்களில் அமைதியாய்த் தூக்கம் வருவதில்லை. அதனால் பகலில் உடம்பு சுறுசுறுப்பாக இராமல் மந்தமாகவே யிருக்கும். அடிக்கடி குளிர் முதலிய வியாதிகள் உற்பவிக்கும்.

இரத்தம் வேகமாய் ஓடுவதற்கு உடற் பயிற்சி எப்படிக் காரணமாகிற தென்பதைக் கவனிப்போம். நமது தேகமும் அவயவங்களும் அசைந்தால் தேகத்திலுள்ள மாமிசங்கள் தமக்குள்ளே யிருக்கின்ற இரத்த நாடிகளை அமுக்குகின்றன. அதனால் தோலினாற் செய்த தண்ணீர்க் குழாயை அமுக்கினால் தண்ணீர் எப்படி வேகமாய்ப் பீறிட்டுப் பாயுமோ அப்படியே இரத்தம் வேகமாய் ஓடித் தேக முழுவதும் பரவத் தலைப்படுகிறது. இருதயத்தை விட்டு வெளியே போன இரத்தம் அதேவிதமாக மறுபடியும் திரும்பி ஒருபோதும் இருதயம் வந்து சேராது. ஆதலால், நாம் அசைந்தாலும் நடந்தாலும் இரத்தமானது எதிர் முகமாய் ஓடத் தலைப்படுகின்றது. அவ்விதம் இரத்தம் ஓட ஓட மற்ற இயந்திரங்கள் வேகமாய் உழைக்க ஆரம்பிக்கின்றன. இருதயமும் தீவிரமாய் அடிக்கும். தன்னிடம் இரத்தம் வந்து சேரும்போ தெல்லாம் அதைச் சுத்தி செய்யப் போதுமான காற்றைத் துரிதமாய்ச் சுவாசப் பை ஏற்றுக் கொள்ளும். சுத்தமான இரத்தம் துரிதமாய்த் தேக மெங்கும் பரவிக், கெட்டுப்போ யிருக்கிற வஸ்துக்களை யெல்லாம் சுத்தி செய்து, தான் பிரவேசிக்கு மிடத்தை யெல்லாம் துரிதமாய்ப் பலப்படுத்தும். இவ்வாறு இரத்தம் வேகமாய் ஓடுவதனால் தேகத்தின் ஒவ்வொரு அவயவத்திற்கும் பலமும் உற்சாகமும் உண்டாகின்றது. இதனால் ஆகாரம் துரிதமாய்ச் சீரணமாகும் என்று முன்னரே குறித்துள்ளோம். ஆயினும் குடல்கள் அன்னப்பாகினின்றும் அன்ன சாரத்தை நன்றாய் வேறாகப் பிரிக்கும். நன்றாய் வேர்வையும் உண்டாகும். இதனாலேதான் சௌக்கியமாய் வீட்டில் உட்கார்ந்திருப்பவர்களைவிட உழைப்பவர்கட்குப் பசியும் தாகமும் அதிகமாய் எடுக்கின்றன. ஏனென்றால் அவர்களுக்குத் துரிதமாய் சுவாஸமுண்டாகி வேர்வையும் அதிகமாய் உண்டாகிற படியால் உண்ட உணவு சீக்கிரத்தில் சீரணமாகி விடுகின்றது. இத்தகைய உடற் பயிற்சியின்போது சுவாஸவாயு இரத்தத்தில் அதிகமாய் வந்து கலக்கு மாகையால் இரத்தத்திற்கு உயிர்ப்பிக்கிற சக்தி அதிகமாயுண்டாகும். வருந்தி யுழைப்பதும் பயிற்சி செய்வதும் தேகத்திற்குப் பலம். தேகத்தின் எந்தப் பாகம் அதிகமாய் வேலை செய்கிறதோ அவ்விடத்தில்தான் புதிதாய் இரத்தம் போய்ச் சேர்ந்து



அதைப் பலப்படுத்துகின்றது. கருமானுடைய கைகளைப் பாருங்கள்! எவ்வளவு உரப்பாயும் அழகாகவு மிருக்கின்றன. தேச சஞ்சாரம் செய்கிறவர்கள் எவ்வளவு பலசாலிகளாக இருக்கிறார்கள். எப்போதும் அசையாமல் வீட்டிலேயே உட்கார்ந் திருப்பவர்கள் ஒரு அடிகூட எடுத்து வைப்பதற்கு முடியாது பலவீனராய்க் கணேச மூர்த்திபோல இருப்பது எவ்வளவு பரிதாபம். ஆதலால் சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் நன்றாய்ப் பிரயாசைப் படும்படி செய்வதைவிடத் தேகத்திற்குப் பலமானது வேறொன்று மில்லை.

நம்முடைய அவயவாதிகள் பாடுபட்டா லொழிய நமது சரீரத்திற்கு ஆரோக்கியம் ஏற்படாது. ஜீவ ஜந்துக்களி லெல்லாம் மனிதன் மாத்திரம் நிமிர்ந்த நிலையுள்ளவனா யிருக்கின்றான். மற்ற ஜந்துக்க ளெல்லாம் தரையை நோக்கிக் குனிந்த அல்லது கவிழ்ந்த நிலையுள்ளவைகள். ஆகையால் இவைகளின் இரத்த வோட்டம் இலகுவாய் நடந்தேறுவதற்கு இடமுண்டு. மனிதனுடைய நிமிர்ந்த நிலையி னிமித்தம் அவன் போதுமான உடற்பயிற்சி செய்யாவிட்டால் இரத்த வோட்டம் தேக மெங்கும் சரியானபடி நடந்தேறுவதற் கிடமிராது. அல்லாமல், தேகாப்பியாஸ மற்றிருக்கும் போது நூறு ரூபாய் நிறையுள்ள போஜனத்திலிருந்து நமக் குண்டாகும் பிரயோஜனத்தைப் பார்க்கிலும், தேகாப்பியாஸம் செய்யும் போது ஐம்பது ரூபாய் நிறையுள்ள போஜனத்தினா லுண்டாகும் பிரயோஜனம் அதிகமா யிருக்கும். உடற் பயிற்சியினால் தோலானது களதளப் புள்ளதாகி நல்ல நிறத்தை யடையும். கண்கள் தெளிவும் பிரகாசமு முள்ளவைகளாகும். மனதுமே உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் அடையும். தேகத்திலுள்ள பல இயந்திரங்களின் தொழில்கள் யாவும் இலகுவாயும் சுறுசுறுப்பாயும் நடக்கும். ஆகவே, இவ்வித நலந் தரும் உடற் பயிற்சியைப் பின்பற்றி நடந்தால், சரீராரோக்கியத்தைப் பெறுவதுடன் அதைப் பாதுகாத்துங் கொள்ளலாம். இவ்விதம் நம்முடைய தேகம் ஆரோக்கியத்தை அடைவதனால் பலவித நோய்களுக்குச் சீக்கிரத்தில் நாம் இரையாவதில்லை. உடற் பயிற்சியை நாம் அநுசரிப்பதினால் சீக்கிரத்தில் வியாதிகளுக்கு

இரையாகாமல் இருப்பதுடன்கூட வியாதி சம்பவிக்கும் போதும் அதனுடன் போராடி அதினின்றும் மீளுவதற்குப் போதுமான சக்தியையும் பெறுகின்றோம்.

அன்பர்களே! எனக்கெழுந்த ஆர்வமிகுதியால், மீண்டும் மீண்டும் இவ் விஷயத்தைப் பலவிடத்தும் வற்புறுத்திக் கூறினமைக்கு மன்னிக்குக. கடைசியாகச் சில கூறி இக் கட்டுரையை முடிக்கின்றேன்.

நம் நாட்டில் ஜனங்களுடைய சரீர சக்தி தினே தினே குறைந்து தேய்ந்து கொண்டு வருகிறது. புதிது புதிதான வியாதிகள் தலைகாட்டுகின்றன. சென்ற நூறு வருடங்களுக்கு முன் வசித்தவர்களின் சரீர வன்மையையும் தற்போது வசிப்பவருடைய சரீர வன்மையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மிகுந்த வித்தியாசம் இருந்து வருவது புலப்படும். உடற் பயிற்சி முதலிய சுக வழிகளில் நாம் அறிவிலிகளாக இருப்பதும், நமது ஆகார முறைகளில் துர் வழக்கங்களை அப்பியாசத்திற்குக் கொண்டு வந்து விட்டதும் நமது தற்போதைய கேவல நிலைக்கு முக்கியமான காரணங்களென்பதை நாம் மறந்துவிடலாகாது. முற்காலங்களில் வசித்து வந்த நம் முன்னோர்களைப் போல் நாம் இப்பொழுது இருந்து வரவில்லை. தேசத்தின் நிலைமை விசேட மாறுதல் அடைந்து விட்டது. நவீன நாகரீகம் நமது வாழ்க்கை முறையில் சரீர ஆரோக்கியத்தைக் கெடுத்து விட்டது.

நமது சரீரத்தின்பால் நமக்குள்ள கடமையை நாம் நன்கு உணராவிடின் நமது ஜாதியின் அபிவிருத்தியே தடைப்பட்டுப் போம். ஜனங்கள் திடகாத்திரர்களாகவும் சுக சரீரிகளாகவும் இல்லாத வரையில் நமது நாடு சக்தியுடையதாக இருக்க முடியாது. ஏனைய நாடுகளில் ஜனங்களுடைய சரீர ஆரோக்கியமானது முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது. எதிர்க்கும் சக்தி தாங்கும் சக்திகளை அமைத்துக் கொள்ளுவதே ஒவ்வொருவருடைய முக்கிய நோக்கமா யிருக்க வேண்டும். ஆனால் நாம் இப்போது என்ன செய்கிறோம்? உடற்பயிற்சி முதலிய சாதனங்களைக் கவனியாது வியாதிக்கு ஆளாகி உடல் சோழிந்து போகும் வரையில் சரீரத்தைப் பற்றிக் கவனியாமலே இருக்கின்றோம். இது மிகவும் வருந்தத் தக்கது. இயற்கையின்படி நடந்து உடற் பயிற்சி முதலிய சுகவழிகளை அறிந்து அதன்படி நடக்காமையினாலேதான் இத் துர்ப்பாக்கியமான நிலைமைக்கு நாம் ஆளாயிருக்கிறோம். நமது சரீரத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளும் வழிகளைத் தெரிந்து கொண்டவர்கள் நம்மில் எத்தனைபேர்? படித்தவர்களும் போதிய வசதி யுள்ளவர்களுங்கூட இயற்கைக்கு மாறாக நடந்து சரீரத்திற்கு ஒவ்வாத ஆகாரங்களை யுண்டு நோயுற்றால் அது வைத்தியர்கள் வேலை யென நினைத்து அலட்சியமா யிருந்து வருகிறார்கள். இவ்விதம் இருப்பது முற்றும் வருந்தத்தக்கதே யல்லவா? ஆகவே, ஒவ்வொருவரும் அவ் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல் மிக அவசியம். இந்த அறிவைப் பெறத் தவறியவர் கடவுள் விதித்துள்ள கட்டளைகளை நிறைவேற்றத் தவறியவரே யாவர். ஆதலாலே உலக வாழ்க்கைக்கெல்லாம் உற்ற உரிய உயரிய பிரதானமான கருவியாகிய உடலை உடலாகுமாறு எனது தமிழகத்துச் சகோதரர்கள் ஒவ்வொருவரும் அதற்கு உற்ற துணையாகிய உடற் பயிற்சியைக் கடைப் பிடித்து ஒழுகி உடல் வளம் பெற்று உய்யுமாறு விரும்புகிறேன்.

---

1. உடற் பயிற்சி மனப் பயிற்சிக்கு உதவுகின்றது; மனோ பயிற்சி ஆத்மீகப் பயிற்சிக்கு உதவுகின்றது.

2. நமது வீட்டை நாம் எவ்வளவோ கவலையுடனும் சுத்தத்துடனும் வைத்துக்கொண்டிருக்கிறோம். அப்படியிருக்கக் கடவுள் அம்சமான ஆத்மா வசிக்கும் வீடான நமது உடம்பை, நாம் எவ்வளவு போற்றுதலுடனும் கவனிப்புடனும் வைத்திருக்க வேண்டும்!

— ரா. நா.

# மின்சாரம்.

## (Electricity)

திருவாளர் K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)

### மின்சாரம் என்றால் என்ன?

நமது வாழ்க்கையில் மிகவும் அற்பமானதாயும் அடிக்கடி கையாண்டு வரக்கூடியதாயும் உள்ள செய்கைகளைப் பற்றி அநேகமாய் நமக்கு அதிகம் தெரியாமற் போவது மிகவும் வியப்புறத் தக்கதாயிருக்கு மல்லவா? ஓர் சிறிய குழந்தை கேட்கும் கேள்விக்குக் கற்றறிந்த பெரியோரும் தக்க விடையளிக்கத் தெரியாது தயங்குவது சகஜம். திருஷ்டாந்தமாக "மின்சாரம் என்றால் என்ன?" என்று கேட்க முயலும் குழந்தைக்கு தக்க விடையளிப்பது இயலாததாயிருக்கிறது. "நெருப்பு என்றால் என்ன?" என்று கேட்கும் குழந்தைக்கு அது இன்னதென்று தெரிவிக்க முடியாமல் எரியும் சுடரைக் காட்டி அதில் அக் குழந்தையின் விரலைச் சிறிது நீட்டி அதனால் உண்டாகும் உணர்ச்சியால் நெருப்பு இன்னதென்று விளங்கச் செய்வது போலவே "மின்சாரம் என்றால் என்ன?" என்ற கேள்விக்கும் விடையளிக்க வேண்டியதாயிருக்கிறது. மின்சார சக்தியின் அபார வேலைகளை யாவும் கரை கண்டவரில்லை. மின்சார சக்தியோடு இதுகாலம் பழகியும் மானிடர் அதனிடத்தி லுள்ள சக்தியால் விளையும் கொடிய பயனின் பயத்திலிருந்து தெளிந்தாரில்லை. ஆதிகாலத்து மானிடர் பூமி, காற்று, நெருப்பு, தண்ணீர் என்னும் பதார்த்தங்களை ஜெயித்திருந்தார்கள். அவர்கள் உயர்ந்த கல் மலைகளின் உச்சியை ஏறிப் பார்த்தும், சுழல் காற்றோடு போர் புரிந்தும், சப்த சாகரங்களையும் பயமின்றிக் கடந்து சென்றும் இருந்தனர். ஆனால் மின்சார சக்தியா லுண்டாகும் கொடிய மின்னலைக் கண்டதும் மலை முடுக்குகளுக்குள் சென்று பதுங்கி வந்தனர். அன்றுதான் அப்படியென்றால் இன்றும் அப்படியே. மின்சார சாஸ்திரம் புதிது புதிதாக வளர்ந்து கொண்டே போகிறதே யொழிய ஒரு முடிவிற்கு வரவில்லை. ஆகவே "மின்சாரம் என்றால் என்ன?" என்ற கேள்விக்குப் பூரணமாக ஒன்றிரண்டு வரிகளில் விடையளிக்க முடியாது. மின்சார சக்தியின் விசித்திர வேலைப் பாடுகளை இன்னும் காத்திருந்து பாருங்கள் என்றுதான் கூறவேண்டியதாயிருக்கிறது. ஆனால் தற்போது "மின்சாரம் இயற்கையின் பரம ரகசியம் பொருந்திய ஓர் சக்தி" என்று மாத்திரம் கூறிவிடுவோமாக.



### மின்சார சக்தியின் சரித்திரம்

கி. மு. 600 வருஷங்களுக்கு முன் ஆம்பர் (Amber) என்ற கல்லைத் தேய்த்தவுடன் அது துண்டுக் கடிதங்கள் முதலிய இலேசான பொருள்களைக் கவருந் தன்மையை அடைந்ததைக் கிரீக் (Greeks) தேசத்தார்கள் கண்டிருந்தனர். சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பின் (1600 A. D.) இங்கிலாந்து தேசத்தின் எலிஜபெத் இராணிக்கு வைத்தியரா யிருந்த கில்பேர்ட் என்பவர் பளிங்கு-கிலாஸ்-த்தடி முதலிய சாமான்களைப் பட்டுத் துணிகளில் தேய்த்ததால் முன்பு ஆம்பர் என்ற கல்லுக் குண்டான சக்தி யுண்டானதைக் கண்டார். ஆம்பர் என்ற கல்லைக் கிரீக் பாஷையில் அழைக்கும் பெயரை இச் சக்திக்குக் கொடுத்து "எலக்ட்ரிக் சிட்டி" (மின்சாரம்) என்று அழைத்தனர். 1733-ம் ஆண்டில் பிரான்ஸ் தேசத்து சாஸ்திரி டுபே (Dufay) என்பவர் முத்திரை போடும் அரக்கைப் பூனைத் தோலில் தேய்த்ததால் சிறிய பொருளை இழுக்கும் சக்தியை யடைந்தது.

மின்சாரத்தை யடைந்த ஒரு பொருளை, மேலே குறித்த பூனைத் தோலால் தேய்க்கப்பட்ட அரக்கு இழுக்கும் சக்தியை யுடையதாயிருந்தால் பட்டுத் துணியால் தேய்க்கப்பட்ட பளிங்குத் தடி அப்பொருளைத் தூரத் தள்ளும் சக்தியை யுடையதாயிருக்கிறது. அப்படியே அரக்கு, தள்ளும் சக்தியை வாய்த்திருந்தால் பளிங்கு இழுக்கும் சக்தியை யடைந்ததாயிருக்கிறது. இவ்விதமாக இரண்டு மின்சார

சக்திக ளுண்டாயின. 1747-ம் ஆண்டில் பிராங்லின் (Franklin) என்பவர் பளிங்குத் தடியால் தள்ளக்கூடிய சக்திக்கு "பாசிட்டிவ்" (+ என்ற கூட்டல் குறிப்புடனும்) என்றும், அரக்கினால் தள்ளக் கூடிய சக்திக்கு "நெகட்டிவ்" (—கழித்தல் குறிப்புடனும்) என்றும் அமைத்துப் பெயர் வழங்கினர். ஒரே விதமான மின்சார சக்தியை ("பாசிட்டிவை"யோ அல்லது "நெகட்டிவை"யோ) யுடைய இரண்டு பொருள்கள் ஒன்றுக் கொன்று பொருந்தாமல் வேறுபட்டு ஓடுகின்றன. ஆனால் வேறுபட்ட சக்தியை (ஒன்று "பாசிட்டிவை" யும், மற்றது "நெகட்டிவை"யும்) யுடைய இரண்டு பொருள்கள் ஆண் பெண் இரு பாலர்களுக்குள் அமைந்திருக்கும் தன்மை (ஆசை) போல், பொருந்திக் கொள்ளுகின்றன. இப்படியாக ஆதியில் இருவிதப் பொருள்களை ஒன்றோ டொன்று தேய்ப்பதினால் மின்சார சக்தி கிடைக்கப் பெற்றனர். இதற்காக அக் காலங்களில் (18-ம் நூற்றாண்டுகளில்) அநேக அரக்கு அல்லது பளிங்குத் தகடுகள் ஒன்றோ டொன்று உரசும் படியான இயந்திரங்களைச் செய்து அவைகளிலிருந்து இரு பற்களைப் போலுள்ள ஊசிகளின் வழியாக மேற்கூறிய இருவித மின்சார சக்திகளைப் பெற்று வந்தனர். இவ்வித மின்சார சக்திக்கு ஒரு மெல்லிய கம்பியைத் தகித்துப் பிரகாசங் கொடுக்கவா மற்றும் உஷ்ணப் படுத்தும் வேலைகளைச் செய்யவா சக்தி போதாது, உண்டாக்கிய விடத்தில் தங்கி நிற்கும் ஆற்றலுடையதாயே யிருந்ததை முன்னிட்டு இதை "ஸ்டாடிக்" (Static) மின்சாரம் என ஆங்கிலேயர் அழைத்தனர்.

## (கம்பியில்) ஓடும் ("கரண்ட்") மின்சாரம்

கால்வானி (Galvani) என்பவர் அறிந்த சில விஷயங்களைக் கொண்டு 1779-ம் வருஷத்தில் வோல்டா (Volta) என்பவர் "கரண்ட்" மின்சாரத்தைக் கண்டு பிடித்தார். ஒரு பாத்திரத்தில் அநேக உலோகத் தகடுகளை வைத்து ஒவ்வொன்றுக் கூடே ஆசிட் (Acid) என்ற திராவகத்தில் நனைத்த பிளானல் (Flannel) துணிகளை வைத்து ஒவ்வொரு தகட்டையும் சிறு கம்பிகளால் பொருத்திக் கடைசி இருபுறம் கம்பிகளைச் சேர்த்தவுடன் மின்சாரம் ஒருபுறத்தி



லிருந்து மறு புறம் ஓடிற்று. இம் மின்சாரத்திற்கு "வோல்டேய்க்" மின்சாரம் எனப் பெயரும் உண்டாயிற்று. மேலே குறித்த பாத்திரத்தி லுள்ள ஆசிட் என்ற திராவகமும் உலோகத் தகடுகளும் சேர்க்கையினால் இச் சக்தி யுண்டாகிறதென் றறிகிறோம். தற்காலத்தில் உலோகத் திராவகச் சேர்க்கையால் உண்டாகும் மின்சார சக்தியை வெகு இலகுவில் வசப்படுத்துகின்றனர். ஒரு பளிங்குப் பாத்திரத்தில் தண்ணீர் கலந்த "சல்பூரிக் ஆசிட்" (Dilute Sulphuric Acid) என்ற திராவகத்தை யூற்றி ஒரு செம்புத் தகடையும் (அல்லது சுத்தக்கரி-Carbon-தகடையும்) துத்தனாகத் தகடையும் ஒன்று சேராமல் அதில் கிடத்தி இரண்டு தகடையும் ஓர் மெல்லிய செம்புக் கம்பியினால் இணைத்தால் செம்புத் தகட்டி லிருந்து துத்தனாகத் தகட்டிற்கு மின்சாரம் ஓடும். ஆகவே செம்புத் தகடை "பாசிட்டிவ்" என்றும், துத்தனாகத் தகடை "நெகட்டிவ்" என்றும் அழைக்கப் படுகிறது. இவ்விதமான அநேக பாத்திரங்களைக் கொண்டு வேண்டிய மின்சாரம் பெறவேண்டிய தாயிற்று.

## கரண்ட்' மின்சாரம் செய்யும் முக்கிய காரியங்கள், (Effects)

இம் மின்சாரம், மூன்று முக்கிய காரியக் குணங்களை யுடையது (1) மின்சாரம் தான் செல்லக் கூடிய கம்பிகளைத் தகித்து உஷ்ணப் படுத்தி சில சமயம் பிரகாசிக்கச் செய்யும். இக் குணத்தைக் கொண்டே நமது வீடுகளிலும் தெருக்களிலும் மின்சார விளக்குகள் பிரகாசமாய் எரிந்து கொண்டிருக்கின்றன. மேலும் மின்சார அடுப்புகளையும் பெற்றிருக்கிறோம்.

(2) அநேக உலோகங்கள் அல்லது திராவகங்களின் உள்ளே பிரவேசித்து அவைகளின் இயற்கையான பாகங்களை வெவ்வேறாகப் பிரித்து விடுகிறது. திருஷ்டாந்தமாகத் தண்ணீர் ஜலவாயு (Hydrogen) பிராணவாயு (Oxygen) என இரு விதக் காற்றின் அளவான ஒற்றுமையால் உண்டாகிறது. தண்ணீரில் மின்சாரத்தை உட்செலுத்தினால் பிராண வாயுவையும், ஜலவாயுவையும் வெவ்வேறாகப் பிரித்து விடுகிறது. இதுபோன்ற மற்ற உலோகங்களையும் அப்படியே செய்து தனித்தனியாக்கி விடுகிறது. 'சோடியம்', 'பொட்டாசியம்' என்ற

உலோகங்களை அவைகளின் கலப்பு உலோகங்களி லிருந்து பிரித்து விடுகிறது. இதுவும் ஓர் முக்கியமான செயலாம். மின்சாரமானது பலகை, ரப்பர், கந்தகம் (Sulphur) 'எபொனைட்', (Ebonite) முதலிய பொருள்களினுள் பிரவேசிக்க இயலாது. ஆதலால் மின்சார வேலை செய்வோர்கள் மின்சாரம் தங்கள் தேகத்தினுட் பிரவேசியா வண்ணம் கைகளில் ரப்பர் முதலிய உறை போட்டுக் கொள்கின்றனர்.

(3) மின்சாரத்தின் முக்கியமான மற்றொரு குணம் காந்தசக்தி (Magnetism). காந்த சக்தியை யுடைய ஒரு வஸ்து இரும்பு போன்ற சாமான்களைத் தன் வசம் இழுக்கும் சக்தியை வாய்ந்தது. காந்த சக்தியிலும் மின்சாரத்தைப் போல இருவித முண்டு. காந்த சக்தியையுடைய ஓர் சிறிய இரும்பைத் தனியாக ஆகாயத்தில் நிறுத்தினால் அதை எப்பக்கந் திருப்பினாலும் வட தென் பக்கமாகவே நிற்கும். ஒருபாகம் வட துருவத்தையே நோக்கி நிற்பதால் அப்பாகத்துக் காந்தப் பொருளை 'வட துருவம்' (North Pole) என்றும், மறு பாகம் தென் துருவத்தையே நோக்கி நிற்பதால் 'தென் துருவம்' (South Pole) என்றும் பெயரிட் டிருக்கிறது. இதுவும் மின்சாரத்தைப் போல ஒரே வித காந்த சக்தி வாய்ந்த பொருள்கள் ஒன்றுக் கொன்று விலகியோடுந் தன்மையையும், இரு வித காந்த சக்தியுடைய இரு வஸ்துகள் பொருந்திக் கொள்ளுந் தன்மையும் வாய்ந்தது. இயற்கையாகவே யுண்டான காந்தப் பொருள்களை ஆதியில் சீன தேசத்தார் அறிந்து தங்கள் கப்பல்களுக்குத் திசைகாட்டியாக உபயோகப் படுத்தியிருந்தனர். அவர்கள் அது ஒரு அதிசயப் பொருளென மாத்திரம் நினைத்து வாளா விருந்து விட்டார்களே யொழிய அதின் அதிசய அந்தரங்கத்தை ஆராய்ந் தறியும் ஆற்றலில்லாதவர்களா யிருந்தனர்.

ஒரு இரும்பைச் சுற்றிக் கம்பிகளின் வழியாக பலமான மின்சாரத்தைச் செலுத்தினால் அந்த இரும்பு காந்த சக்தியை யடைந்து தன் போன்ற வஸ்துக்களைக் கிரகிக்கிறது. ஆதலால் ஓடிக்கொண் டிருக்கும் மின்சாரம் தன் மார்க்கத்தின் பக்கங்களி லெல்லாம் காந்த சக்தியை விளைவிக்கிறதென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. பாரடே (Faraday) என்பவர் ஒரு காந்த சக்தியையுடைய வஸ்து சுற்றிக்



கொண்டே யிருந்தால் மின்சார சக்தியை உண்டுபண்ணுவதாகக் கண்டு பிடித்தார். இதைஓர் முக்கியமான கண்டு பிடிப்பென்று கூறலாம். மெல்லிய (செம்பு) கம்பிச் சுருள்களினூடே ஒரு காந்தப் பொருளைச் சுற்றினால் அருகிலுள்ள கம்பிகளின் மூலம் போதிய மின்சாரத்தைப் பெறலாம். அப்படிக் காந்தப் பொருளைச் சுற்றாது அதை நிறுத்தி இப்பொழுது காந்தமுள்ள வஸ்துவின் ஊடே கம்பிச் சுருளை வேகமாய்ச் சுற்றினாலும் இக் கம்பிகளி லிருந்து மின்சாரம் முன் போலப் பெறமுடியும். இதுவே இக் காலத்து 'டைனமோ' என்ற மின்சாரம் பிறப்பிக்கும் இயந்திரத்தின் அமைப்பு. 'டைனமோ' என்ற இயந்திரத்தில் காந்த சக்தி வாய்ந்த இரும்பின் வட தென் துருவங்களினூடே செம்புக் கம்பிச் சுருளை வெகு வேகமாக மற்றொரு இயந்திரத்தால் அல்லது நீர் வீழ்ச்சியினாலாவது சுற்றினால் இக் கம்பிகளில் மின்சாரம் உண்டாகிறது. ஆனால் இங்கு, கம்பிச் சுருள் காந்தப் பொருளின் வட தென் துருவங்களுக்கூடே சுற்றும் பொழுது மின்சாரமானது கம்பிச் சுருளின் ஒரு பாகத்தில் ஒரு பக்கம் செல்லுவதாயும், அடுத்த பாகத்தில் மறு பக்கஞ் செல்லுவதாயும் உண்டாகிறது. ஆகவே உண்மையில் இங்குக் கிடைக்கும் மின்சாரம் ஒரு புறம் விட்டு மறு புறம் மாறி மாறி உண்டாகக் கூடியதா யிருக்கிறது. இதற்கு "ஒரு புறம் விட்டு ஒரு புறம் மாறும்" (Alternating) மின்சாரமெனப் பெயர். இவ் விதமான மின்சாரத்தை மின்சார விளக்கு, மற்றும் உஷ்ணப் படுத்தும் வேலைகளுக்கும் உபயோகப் படுத்தலாம். இம் மின்சாரம் மாறி மாறி யுண்டாகும் நேரம் வெகு வெகு அற்பமானதால் எரிந்துகொண் டிருக்கும் விளக்கு விட்டு விட்டு எரிவதாகத் தோன்றுவதில்லை. இந்த மின்சாரத்தைக் கொண்டு முன் கூறிய திராவக உலோக சம்பந்தத்தால் மின்சாரம் உண்டாக மின்சாரத்தைச் சுமத்துவதற்காவது (To Charge batteries) அல்லது திராவகம், உலோகம் இவைகளைத் தனித்தனி இயற்கைப் பாகங்களாகப் பிரிப்பதற்காவது முடியாது. ஆதலால் "டைனமோ"வில் உண்டாகும் "ஒரு புறம் விட்டு ஒரு புறம் மாறும் மின்சாரத்தை ஓர் விதச் சாவியின் அமைப்பால் ஒரு முகப்படுத்திக் கம்பியில் ஒரு பக்கத்தி லிருந்து மறு பக்கமாகவே ஓடும்படி செய்து எல்லா வேலைகளுக்கும் உபயோகப் படுத்திக் கொள்ளுகின்றனர்.

## மின்சார விளக்கு விசிறி, மணி முதலியவை

மின்சார விளக்கு எரிவதற்கு மின்சாரத்தின் உஷ்ணத்தால் பிரகாசிக்கக்கூடிய அவ்வளவு மெல்லிய கம்பிகள் கிடைக்க வேண்டும். கம்பியின் உஷ்ணத்தால் கம்பிக்கும் காற்றிற்கும் ரஸாயன சக்தி (Chemical action) ஏற்பட்டுக் கெட்டுப் போகாதபடி கம்பியைக் காற்றில்லாததாயும் அல்லது 'நைட் ரோஜன்', 'ஆர்கன்' என்னும் சக்தியற்ற காற்று நிறைந்த சிறிய திரண்ட கண்ணாடிக் கூட்டில் அமைக்க வேண்டும். இங்கு உபயோகப் படுத்தும் கம்பி அதிக உஷ்ணத்தால் உருகிப் போகாமலும், எரிந்து நின்றவுடன் ஒடிந்து போகாமலும் இருக்க வேண்டியது. துவக்கத்தில் (1880) சுத்தக் கரியால் (Carbon) செய்தமெல்லிய கம்பியை உபயோகித்தனர். இக் கம்பியை மின்சாரத்தால் 1800° C டிகிரி அளவுக்கு மேல் உஷ்ணப்படுத்த முடியாது. அவ்வாறு உஷ்ணப் படுத்தினால் அது தூள்த் தூளாகக் கிளம்பி விளக்குக் கண்ணாடியைப் பற்றிக் கொள்ளுகிறது. மேலும் மேலே குறித்த அளவுக்கு உஷ்ணப்படுத்தினாலும் அவ்வளவு பிரகாசத்தைக் கொடுப்பதில்லை. தற்காலத்தில் 'டங்ஸ்டன்' (Tungsten) என்ற உலோகத்தின் மெல்லிய கம்பியை உபயோகிக்கின்றனர். இக் கம்பியை சுமார் 2500° C டிகிரி அளவு வரை உஷ்ணப் படுத்தலாம். இக் கம்பி அநேகமாய் முன்னே குறித்த சக்தியற்ற காற்று நிறைந்த கண்ணாடிக் கூட்டில் அமைக்கப்படுகிறது. இதனால் பிரகாசம் அதிகப்படுகிறது. மேலும் மிகுந்த பிரகாசத்திற்கு 'டங்ஸ்டன்' கம்பி சிறிய அளவான மின்சாரத்தையே கிரகிக்கிறது. சக்தியற்ற காற்று நிறைந்த விளக்கில் 'டங்ஸ்டன்' கம்பியை அடிப் பக்கத்தில் மாத்திரம் வளைந்து வளைந்து செல்லுமாறு அதிகக் கம்பியை அமைப்பார்கள். ஆனால் காற்றில்லாத விளக்கில் கம்பியை மேலுங் கீழுமாய் நீட்டி அமைப்பார்கள். 'பிலாட்டினம்' என்ற கம்பியும் மிகுந்த பிரகாசத்தைச் கொடுக்கும். ஆனால் அதன் விலை அதிகம். சுத்தக் கரிக் கம்பி (Carbon filament) விளக்கு ஒரு 'வாட்' (Watt) டிற்கு 0. 3 ($\frac{3}{10}$) பவரையும் (Mean Candle-power) காற்றில்லா விளக்கிலமைந்த 'டங்ஸ்டன்' கம்பி ஒரு 'வாட்' டிற்கு 0. 8 ($\frac{4}{5}$) பவரையும், சக்தியற்ற காற்று நிறைந்த விளக்கிலமைந்த 'டங்ஸ்டன்' கம்பி ஒரு 'வாட்' டிற்கு 1. 9 ($\frac{19}{10}$) பவரையுமுடையன.



மின்சாரத்தை ஒரு காந்த சக்தி வாய்ந்த இரும்பைச் சுற்றியிருக்கும் அநேக செம்புக் கம்பிகளில் செலுத்தினால் அக் காந்தமுள்ள இரும்பு தானகவே சுற்றத் தொடங்குகிறது என்று முன்னமே கூறியுள்ளோம். இக் காரணத்தைக் கொண்டே மின்சார விசிறிகள் அமைக்கப் பட்டுள்ளன.

ஒரு மிருதுவான நீண்ட இரும்பால் (Soft iron) அநேக செம்புக் கம்பிகளைச் சுற்றி அந்த இரும்போடு இணைக்கப்பட்டுச் சிறிது தூரத்தில் சிறிது இரும்பையுடைய ஒரு தடித்த சிறு செம்புக் கம்பியை செங்குத்தாய் அமைத்து அதைத் தொட்டுக்கொண்டிருக்கும் மற்றொரு கூரிய கம்பியின் வழியாக மின்சாரத்தைச் செலுத்தினால் செங்குத்தான இரும்பையுடைய செம்புக் கம்பியின் வழியாக மின்சாரம் சுற்றியிருக்கும் கம்பிகளின் வழியாகச் செல்லவே அதனுள் இருக்கும் மிருதுவான இரும்பு காந்த சக்தியை யடைகிறது. அப்படி அடைந்த மாத்திரத்தில் அதற்கருகி லிருக்கும் இரும்பு வாய்ந்த செங்குத்தான கம்பியைக் கிரகித்து வசப்படுத்துகிறது. இப்படிச் செய்யவும் மின்சாரம் பாயும் கூரிய கம்பியோடு சம்பந்தமில்லாமல் போகவே மின்சாரம் கம்பிகளுக்கூடே செல்லாது நின்று விடுகிறது. அப்பொழுது மிருதுவான இரும்பு காந்த சக்தியை இழந்து விடுகிறது. உடனே செங்குத்தாய் அமைந்துள்ள கம்பி விடுபட்டு மின்சாரம் வரும் கூரிய கம்பியைப் போய்ச் சேருகிறது. அப்படிச் சேர்ந்த வுடன் மின்சாரம் மறுபடியும் பாய்கிறது. அப்பொழுது முன் போல செங்குத்தான கம்பி மறுபடியும் மிருதுவான இரும்பைப் போய் அடைகிறது. இப்படியாக இச் செங்குத்தான கம்பி வெகு சீக்கிரத்தில் போவது வருவதின் காரணமாய் அது அங்கு மிங்கும் விரைவாக ஆடிக்கொண்டிருக்கிறது. இப்படி ஆடிக்கொண்டிருக்கும் கம்பி சிறு குண்டையுடைய தாய் ஒரு மணியின் மீது தாக்கிக் கொண்டே இருந்து நமக்கு மின்சார மணியோசையை அளிக்கிறது.

அணுக்களையுடைய மேகங்கள் (மாரி காலங்களில்) ஒன்றோடொன்று வெகு வேகமாய் மோதித் திடீரெனப் பிரிந்தோடுவதனலுண்டா

கும் அதிர்ச்சியான சப்தம் மேக மண்டலங்களில் அங்கு மிங்கும் தாக்கப்பட்டு எதிரொலித்துக் குமுறுதலுடன் 'கிடீர், கிடீர்' என ஒலிப்பதால் உள்ளங் கலங்கி மெய் பதறி நா வாய் குளற செவி சாய்க்கிறோம். இதையே இடி முழக்கம் என்பர். இம் மோதுதலின் காரணமாய் மேக மண்டலங்கள் இரு வித மின்சாரங்களைப் பெற்று அவைகள் ஒன்றுக் கொன்று அருகே வரும் போது மின்சாரச் சுடர் ஒரு மேகத்திலிருந்து மற்ற மேகத்திற்குப் பாய்ந்தோடுகிறது. இப்படிப் பாய்ந்தோடும் மின்சாரச் சுடரையே மின்னல் என்கிறோம். மாரிக் காலங்களில் ஆகாயத்தில் மேகங்கள் ஒரு வகை மின்சாரத்தை அடைவதின் காரணமாய்ப் பூமியும் மறு வகை மின்சாரத்தை யடைகிறது. மேகங்களின் மின்சாரம் அதிகரித்து பூமிக்கு மேல் உயரமாக இருக்கும் கட்டிடங்களுக் கருகில் வரும் போது மின்சாரம் இக் கட்டிடங்களின் வழியாகப் பூமிக்குள் பாய்ந்து கொண்டே இருக்கும். இப்படிச் சென்றுகொண் டிருப்பதால் கட்டிடங்கள் பிளவு பட்டு அதனால் நஷ்டம் ஏற்படுகிறது. இதைக் கருதியே உயர்ந்த வீடுகளுக்கு மேல் அநேக நீண்ட கம்பிகளை நாட்டி அதைத் தொட்டு ஒரு கம்பியை வீட்டின் வழியாகப் பூமியில் புதைத்து வைப்பதால் கட்டிடங்களுக்கு மேலே வரும் மின்சாரம், கம்பிகள் வழியாக வெகு சீக்கிரத்தில் பூமிக்குள் ஓடிவிடும். ஏனெனில் மின்சாரம், வீடுகளிலுள்ள கல், மரம் முதலிய வஸ்துக்களில் அவ்வளவு விரைவுடன் செல்ல முடியாததால் கம்பிகளைக் கண்டதும் சீக்கிரத்தில் பாய்ந் தோடி விடுகிறது. ஆதலால் வீடுகளுக்கு ஆபத்தில்லாமல் போய்விடுகிறது. மற்றொன்று மின்னல் (மின்சாரச் சுடர்) கட்டிடத்திற் கருகே பாய்ந்து வந்தாலும் பூமியிலிருந்து வீட்டின் மேலுள்ள கம்பிகளின் வழியாக மேல் நோக்கிப் பாய்ந்து கொண்டே இருக்கும் ஒருவகை மின்சாரம் மின்னலின் மின்சார சக்தியைக் கலக்கி நாலா பக்கமும் சிதறடித்து அதிகாரமில்லாது ஆக்கி விடுகிறது. மின்சாரத்தின் வேலைகள் ஒவ்வொன்றையும் எழுதுவதற்கு இவ்வேடு இடந் தராததால் இத்துடன் நிறுத்துவோம்.

## மின்சார அளவுகள்

மேலுங் கீழுமாய்ச் செல்லும் இரண்டு தண்ணீர்க் குழாய்களை எடுத்துக்கொள்ளுவோம். ஒரு குழாயிலிருந்து மற்றக் குழாய்க்குத்



தண்ணீர் செல்ல மூன்றாவதோர் சிறிய குழாயால் அவைகளை இணைக்க வேண்டும். இப்படி இணைத்த குழாயின் அமைப்புக்குத் தகுந்தபடி தண்ணீர் இரண்டாவது குழாயில் ஓடும். அதாவது முதல் குழாயில் உள்ள-இணைக்கப்படும்-துவாரம் எவ்வளவுக் கெவ்வளவு இரண்டாவது குழாயிலுள்ள துவாரத்திற்கு உயரத்திலிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு தண்ணீர் அதிகமாக இரண்டாவது குழாயில் ஓடுமல்லவா? அப்படி அமைந்த முதல் குழாயின் துவாரம் உயர்ந்த ஸ்தானத்திலிருப்பதை ஆங்கிலத்தில் மின்சார வார்த்தைகளை உபயோகப் படுத்தினால் அத் துவாரம் உயர்ந்த "பொட்டன்ஸியல்" (Higher Potential)உடைய தாகவும் மற்றத் துவாரம் குறைந்த "பொட்டன்ஸியல்" உடையதாகவும் கூறப் படுகிறது. இத் திருஷ்டாந்தத்தையே நாம் முன்னே கூறிய மின்சாரப் பாத்திரம் பெரும்பாலும் ஒத்திருக்கிறது. ஒரு மின்சாரப் பாத்திரத்தில் (Battery) A என்ற தகட்டை B என்ற தகட்டோடு ஒரு கம்பியால் இணைத்தால் A யிலிருந்து B க்கு மின்சாரம் ஓடினால் A என்ற தகடு உயர்ந்த "பொட்டன்ஸியல்" உடையதாகவும், B குறைந்ததிலிருப்பதாகவும் ஏற்படுகிறது. எப்படி மேற் கூறிய இரு குழாய்களையும் மூன்றாவது குழாய் சரி நேராக உள்ள துவாரங்களால் பொருத்தினால் தண்ணீர் ஒன்றிலிருந்து மற்றதற்குச் செல்லாதோ அப்படியே Aயும், Bயும் ஒரே நிலைமையிலிருந்தால் மின்சாரம் ஓடாது. ஆகவே A என்ற தகட்டில் Bயை விட மின்சாரம் அதிகமாய் உண்டாகிச் சுமத்தப்பட் டிருக்கவேண்டும். இப்படி சுமத்தப்பட் டிருப்பதற்கு "பொட்டன்ஸியல்" எனப் பெயர். இப் "பொட்டன்ஸியலின் தனிமைக்கு "வோல்ட்" என்று பெயர் (Unit of Potential is called a Volt). இதை அளவிடுவதற்கு ஒரு சிறிய "வோல்ட் மீட்டர்" என்ற இயந்திரக் கருவி உளது. இதனுள் மின்சாரத்தைச் செலுத்தினால் ஒரு முள் அதன் அளவைக் குறிக்கிறது. மற்றொரு அளவுமுண்டு.

செம்பு கலந்த கந்தகத் திராவகத்தினுள் (Copper Sulphate) சென்று 0·000329 கிராம் நிறையுள்ள செம்பைப் பிரிக்கும் மின்சாரத்திற்கு ஒரு "கூலோம்" (Coulomb) என்று பெயர். மேற் குறித்த

நிறையுள்ள செம்பை விடுவிக்க எவ்வளவு நேரம் பிடித்தாலும் பிடிக்கலாம். ஆனால் நேரம் மின்சாரக் 'கரண்டின்' அதிகரிப்பைத் தழுவி நிற்கிறது. இப்படியாக ஒரு "கூலோம்" அளவை யுடைய மின்சாரம் ஒரு செக்கண்ட (விநாடி) நேரம் வரை ஓடினால் அந்த அளவுக்கு ஒரு "ஆம்பியர்" (An Ampere) என்று பெயர். இதுவே மின்சாரக் காண்டின் தனிப் பகுதி அளவு (Unit of Current). இந்த அளவைக் குறிப்பதற்கு "அம்மீட்டர்" என்ற கருவி மின்சாரத்தின் உஷ்ண அளவைக் கொண்டு ஏற்படுத்தி யிருக்கிறது. மின்சாரக் 'காண்ட்' வியாபாரிகள், தாங்கள் விற்பனை செய்யும் அளவை மற்றொரு விதமாக அளவிட்டுக் கொள்ளுகின்றனர்.

இயந்திர சாஸ்திரத்தில் (In Mechanics) சக்தியின் தனி அளவை (Unit of Power) ஒரு குதிரைப் பவர் (Horse Power: H. P.) அதாவது 550 பவுண்டை ஒரு விநாடி நேரத்தில் ஒரு அடி தூரம் உயர்த்தும் ஒன்றின் சக்திக்கு 'ஒருகுதிரைப் பவர்' என்று பெயர். மின்சாரத்தில் அப்படியான அளவை ஒரு "வாட்" (Watt) என்று அழைக்கப் படுகிறது. இதையே ஒரு விநாடி "ஜூல்" என்றும் கூறப் படுகிறது. அவைகளின் சம்பந்தம் பின்வருமாறு:

ஒரு குதிரைப் பவர் = 550 பவுண்ட்—அடி—விநாடி

" $= \frac{550}{\cdot 737}$ "ஜூல்" விநாடி

" = 746 'வாட்ஸ்'

இதனால் ஒரு 'வாட்' ஒரு குதிரைப் பவரைவிட மிகக் கொஞ்சம் என்று தெரிகிற தல்லவா? ஆகவே ஒரு மணி நேரத்தில் ஓடும் 1000 "வாட்டை" (அதாவது 1000 × 60 × 60 வாட்ஸ்) தனி அளவு அல்லது ஒரு "யூனிட்" என்று அழைத்து ஒரு 'யூனிட்'டை ஒரு அணா அல்லது ஒரு ஷிலிங் என்று சமயம் போல் விலை கூறி மின்சாரத்தை விற்று வருகின்றனர். இந்த "யூனிட்" என்ற அளவுகளைக் குறிப்பதற்கு 'மீட்டர்' பெட்டி (Meter box) களை வீடு தோறும் அமைத்து வைத்து அவ் வீட்டார் செலவு செய்த மின்சார அளவை அதினின்றும் எடுத்துக் கொள்ளுவார்கள். இப்படிப் பட்ட பெட்டிகளில் மின்சார ஒழுக்கு (Leakage) ஏற்படுவதும் உண்டு. அப்படி



ஏற்பட்டால் நாம் நஷ்டத்திற் குள்ளாகிறோம். ஆதலால் நல்ல பெட்டியாகச் சோதனை செய்து மின்சாரம் வேண்டுவோர் தங்கள் வீட்டில் அமைத்துக் கொள்ளுவது அவசியம்.

மற்றொன்று, C அளவுள்ள 'ஆம்பியர்' மின்சாரமானது V அளவுள்ள "வோல்ட்ஸ்" சம்பந்தமாய்ச் செலவழிந்தால் இவ் விரு அளவையும் பெருக்கி வருவதை இத்தனை "வாட்ஸ்" என்று கூறப் படுகிறது C × V = வாட்ஸ்). ஒரு திருஷ்டாந்தக் கணக்கு. 200 "வோல்ட்டை"யும், பத்து குதிரைப் பவரையு முடைய ஒரு "டைனமோ" எவ்வளவு கரண்ட் கொடுக்கிறது?

ஒரு குதிரைப் பவர் = 746 வாட்ஸ்

10 " = 7460 "

கிடைக்கும் காண்டை C 'ஆம்பியர்' என்று குறிப்பிடுவோம். அப்படியானால்,

$$200 \times C = 7460$$

$$\because \; C = \frac{7460}{200} \doteq \underline{37.3} \text{ 'ஆம்பியர்' கரண்ட்.}$$

## மின்சார அலைகள்

பாரடே என்பவருக்குப் பின் மாக்ஸ்வேல் (Maxwell) என்பவர் தன் கணித வல்லமையால், மின்சாரம் ஆகாயத்தில் அலைகளாய்ச் செல்லும் என்றும், இந்த அலைகள் காந்த சம்பந்தத்தை யுடைய தென்றும், அவைகள் தண்ணீர் அலைகளைப் போல அலைந்து செல்லுமெனவும் வெளியிட்டார். அதைப் பரிசை (Experiment) செய்து பார்க்க முடியாமல் வெகு காலஞ் சென்றது. இதுவே தற்காலக் கம்பியில்லாத் தந்திக்குக் காரணமா யிருந்தது. 'ஒருபுறம் விட்டு ஒருபுறம்' மாறும் மின்சாரத்தை முன்பு குறித்துள்ளோம். இம் மின்சாரத்தை ஒரு கம்பிச் சுருளில் விட்டு அச் சுருளைத் தொடாமல் அதின் மேல் புறமாகச் சுற்றி யிருக்கும் மற்றொரு சுருளிலிருந்து மின்சாரம் கிரகிக்கலாம். மேற்புறமாகச் சுருட்டி யிருக்கும் கம்பிகள், உட்புறமாகச் சுருட்டி யிருக்கும் கம்பிகளைவிட எவ்வளவு அதிகமோ அதற்குத் தகுந்தவாறு அதிகமாக மின்சாரம் கிரகிக்கலாம். இப்படியாக

2000 'வோல்ட்ஸ்' அளவு வீதம் கரண்ட் உண்டாக்கி மேலே குறிப்பிட்ட சுருள்களின் மூலம் (By Means of transformer) 100,000 'வோல்ட்ஸ்' வரை கிரகித்துத் தூரமான இடங்களுக்குக் கொண்டு போய் 200 'வோல்ட்ஸ்' வீதம் குறைவு படுத்தி விளக்கு முதலியவைகளுக்கு விற்பனை செய்யப் படுகின்றன. இவ்வித மின்சாரத்தை ஆகாயத்தில் நீட்டி யிருக்கும் கம்பியில் செலுத்தினால் இக் கம்பியிலிருந்து உண்டாகும் அளவுக்குத் தகுந்தவாறு சிறு சிறு மின்சார அலைகள்' உற்பத்தியாகி நாலா பக்கமும் புறப்பட்டுத் தங்கள் அளவைக் கிரகிக்கும் (வெகு தூரத்தி லிருக்கும்) மற்றொரு ஆசாயக் கம்பியில் தாக்கிக் கீழ்ச் சென்று தன் ஆவேசம் குறைக்கப்பட்டு தன் அலைகளின் சப்தம் அதிகரிக்கப்பட்டு செய்தியைத் தெரிவிக்கின்றன. ஆகாயத் தந்தியின் முழு ரகசியத்தையும் எழுத இங்கு இடமில்லை.

சிறிது காலத்திற்கு முன் மின்சாரம் அணுவுக் கணுவான வஸ்துக்களை (Electrons)யுடையன வென்றும், இவைகள் சேர்ந்து வெகு வேகமாய் ஓடுவதால் மின்சாரம் உண்டாகிறதென்றும், இச் சிறு அணுக்கள் உலகத்தில் எல்லாவித வஸ்துக்களிலும் அமைந்த ஓர் சிறு பாகமாய் ஓரே நிறை யுடைய தென்றும், ஆச்சரியப் படத் தக்கதாகக் கண்டு பிடித் திருக் கின்றனர். இவ் வணுவுக் கணுவானது ஜலவாயு அணுவின் (Hydrogen Atom) $\frac{1}{1850}$-ம் பாகத்தின் கனத்தையுடையதா யிருக்கிறது. ஜலவாயு அணுவின் கனமோ $\overline{10}^{24}$ கிராம் (அதாவது ஒன்றின் கீழ், ஒன்றோடு 24 பூச்சியங்கள் சேர்ந்து வரும் அவ்வளவு சிறிய சில்லரைக் கனம்). இந்த அணுவின் ஓர் நுட்பமான அளவை நன்றாய் உணர்த்துவதற்குப் பின்வருமாறு கூறலாம்:- 16 மெழுகு வர்த்திப் பவரை யுடைய மின்சார விளக்கின் மெல்லிய கம்பியில் ஒரு விநாடி நேரம் ஓடும் மின்சாரத்தில் அமைந்துள்ள அணுவுக் கணுவானவைகளை 2,500,000 ஜனங்கள் நிறுத்தாமலும், உண்ணாமலும், உறங்காமலும். இறக்காமலும் ஒவ்வொருவரும் ஒரு விநாடிக்கு 2 அணுக்கள் வீதம் எண்ணினால் எல்லாவற்றையும் எண்ணி முடிய சுமார் 20, 000 வருஷங்கள் செல்லும். அப்படியானால் இவ் வணுவின் ஒரு நுட்பத்தை நீங்களே யோசித்துக் கொள்

ளுங்கள். இவ் வணுவுக் கணுவை விட இன்னுஞ் சிறிய பாகமும் உளதோ வென்பதையும் ஆராய்ந்து வருகிறார்களென்றால் எவ்வளவு தூரம் பதார்த்தம் அல்லது வஸ்துக்களின் அமைப்பின் அந்தரங்கத்தை அறிந்து வருகிறார்களென்று சொல்லத் தேவையில்லை.

மின்சாரத்தின் விநோதங்களைக் கண்டு அதிசயத்தால் வாயில் கைவையாத மானிடர் ஒருவரும் இலர். புகைப் படங்களை (Photo) கம்பியில்லாத் தந்தியால் ஒரு ஊரிலிருந்து மற்ற ஊர்களுக்கு மின்சார அலைகளின் மூலம் அனுப்பி வருகின்றனர் என்றால் இதைவிட மின்சார சக்தியின் விசித்திர வேலைக்கு வேறு திருஷ்டாந்தமும் வேண்டுமோ? இதுதானா? இன்னும் என்னென்ன விசித்திரங்கள் உண்டாகுமோ? யார் அறிவார்? இறந்தவர்களைச் சிறிது நேரம் பிழைக்க வைக்கவும், ஓர் வித மின்சார வெளிச்சத்தால் (X-rays) கண்ணுக்குப் புலப்படாமல் மூடப்பட்டிருக்கும் இடங்களை அல்லது வஸ்துக்களைப் படம் எடுத்துப் பார்த்துக் கொள்ளவும், அபாய நிலைமையை வெகு தூரத்திலிருந்து கம்பியில்லாமல் தெரிவித்து உதவி பெறவும், புகை வண்டிகளை ஓடச் செய்யவும், படக்காட்சி சாலைகளில் படங்களைப் பேசச் செய்யவும் இன்னும் கோடானு கோடி விநோதமான அரிய பெரிய செய்கைகளை பிரம ரகசியம் பொருந்திய மின்சார சக்தி செய்திருக்கிறது; இன்னும் செய்யப் போகிறது.

கொஞ்சக் காலத்திற்கு முன்பு தான் மின்சாரத்தின் அதிசயங்களையும் அந்தரங்கத்தையும் கண்டு விட்டோம் என்று பறைசாற்றினோம். ஆனால் இன்றோ அன்று தெரியாதிருந்த மின்சாரத்தின் ஆயிரக் கணக்கான அதிசய வேலைகளைக் கண்டு இன்னும் "எத்தனை எத்தனையோ" என்று கூசாமல் கூறுகிறோம். இவ்வளவு தூரம் மின்சாரத்தைப் பற்றித் தெரிந்தும் நாம் முன் குறிப்பிட்ட சிறு குழந்தையான கேள்விக்கு (மின்சாரம் என்றால் என்ன?) இன்னும் பூரணமாகப் பதிலளிக்கத் தெரியாமல் இருக்கிறோம். அதற்குப் பதிலாக நாம் சொல்லுவதாவது இன்னும் "காத்திருந்து (மின்சாரத்தின் விநோதங்களையும் இரகசியங்களையும்) பாருங்கள்".

194527

# ஆசிரியர் குறிப்புகள்

## பூரண சுதந்திரத் திருநாள்

இந்தியாவுக்குச் சுயேச்சை வேண்டும் சுயேச்சை வேண்டும் என்று பேசிக் கேட்டுக்கொண் டிருந்த காலமெலாம் போய் இந்தியாவுக்குப் **பரிபூரண சுயாட்சி** வேண்டும் என்று கேட்கும் காலம் வந்து விட்டது. ஜனவரி மீ 26வ யன்று பரிபூரண சுதந்திரத் திருநாளை இமயமுதல் குமரி வரை மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். சைனு, ஜப்பான், இங்கிலாந்து, ஜெர்மெனி, அமெரிக்கா முதலிய இன்னும் அநேக சுயாட்சி பெற்ற நாடுகளி லிருக்கும் இந்திய மக்களும் இந்திய தேசீயக் கொடியை உயர்த்தி மகிழ்ந்து, இப் பெரு நாளைக் கொண்டாடி யிருப்பது குறிப்பிடத் தக்கது. இவ் வைபவத்தின் மூலம் இந்தியா தனது உரிமையை ஸ்தாபித்து உலகத்திற்கே அறிக்கையை விடுவித் திருக்கிறது.

## வங்காளத்தில் அடக்குமுறை


ஒரு ஊர்வலத்தை நடத்திச் சென்றதை ராஜத் துவேஷமாகக் கருதி இந்திய வாலிப இயக்கத்தில் வங்காளத்திற்குச் சிரோன்மணியாக விளங்கும் ஸ்ரீமான் சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள் உள்ளிட்ட பதினொரு பிரபலஸ்தர்களும் 1-வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு, சிறைவாசம் அனுபவித்து வருகிறார்கள். அடக்கு முறையானது ஒரு நாட்டின் சுதந்திர தாகத்தை அடக்கிவிடாது; ஆனால் அது சுதந்திர தாகத்தை வளர்க்கும் என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். இதைப் பற்றி உலக சரித்திரத்தில் உதாரணங்கள் மலிந்து கிடக்கின்றன.

## கயனு இந்தியர்கள்

தாயகத்தை நோக்கித் திரும்பி வந்துகொண் டிருந்த இந்தியர்களில் 44 பேர் மத்தியில் இறந்துவிட்டார்களாம். ஐயோ! இந்தியர் உயிர்களுக்குக் கேள்விமுறை யில்லையா? இந்தியா இன்று சுதந்திரம் பெற்றநாடா யிருந்தால் ————?

---



தனது ஆயுட்காலம் முற்றிலும் வைத்திய ஆராய்ச்சியிலேயே உழைத்துக் கொண்டு வருபவரும், தமிழ் சித்த வைத்திய கான்பரன்ஸுகளில் தனது மேலான மருந்துகளுக்காகத் தங்க மெடலும், வைத்தியபதிப் பட்டமும் பெற்றவரும் உத்தமபாளையம் தர்ம சித்த வைத்தியசாலை ஸ்தாபகருமான அர்ஜுனன் செட்டியார் அவர்களால் சித்தர் முறைப்படி தயாரிக்கப்பெற்ற

**தங்க ரச பஸ்பம்**

குஷ்டங்கள், திமிர்கள், பக்க வாதங்கள், மேக ரோகங்கள், க்ஷய ரோகங்கள், துன்மார்க்க வியாதிகள், பேதி, ரூதகவாய்வு, சோகை, காமாலை, கண்டமாலை, ஈளை, யிருமல், காசம், மூலம், கிராணி, வாதத்தால் பித்தத்தால் விளையும் கேடுகள், வயிற்று வலி, குன்மவகைகள், சிலேற்பனங்கள், மகோதரம், பித்தப் பாண்டு, கருமேகக் குஷ்டம், பெரு வயிறு, இளைப்பு, தலை வலி, கபால இடி போன்ற காலனைப் போன்று வரும் 4448 வியாதிகளில் எந்த வியாதியானாலும் சரியே இந்தப் பஸ்பம் கானுது ஓட்டிக் குணப்படுத் தக்கூடிய அவ்வளவு அபார சக்தி வாய்ந்தது. பிற வைத்தியங்களினால் தீராத ரோகங்கள் என்று கைவிடப்பட்ட ரோகஸ்தர் உடனே

இதை உட்கொண்டால் 15 நாட்களில் குணம் தெரியும். 40 நாள் மருந்து விலை ரூ 10—0—0 ஷை மருந்துடன் சாப்பிடக் கடுக்காய் அல்லது இஞ்சி லேகிய அநுப்பானம் விலை ரூ 2—0—0

**மதன சஞ்சீவி லேகியம் தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து**

இது இழந்துபோன ஆண்மையை உண்டாக்கும் உயர்ந்த ஒளஷதம். இரத்தப் பெருக்கையும் வீர்ய விருத்தியையும் உண்டாக்கி எத்தனையோ நம்பிக்கை யற்றவர்களைத் தேவாமிருதத்தைப் போன்று காப்பாற்றி யிருக்கிறது. 40 நாள் மருந்து ரூ 5—0—0

**நீர்வேட்டித் தைலப் பால் சோப் ஸ்நானப் பவுடர்**

இந்தப் பவுடரைத் தேய்த்துக் கொண்டு ஸ்நானம் செய்வதால் சர்ம குஷ்டம், ஆனைத் தோல் முகப் பருக்கள், செம் மேகத் தடிப்பு, பற்று வகைகள், பிளவைகள், ரணம், கிரந்தி, வெண் குஷ்டம், குறை நோவு முதலிய சகல துர் நீர்களும், தோல் வியாதிகளும், கண் ரோகம் 96-ம், வெள்ளெழுத்தும் தீர்ந்து பால்ய வயது போல் காணப்படுவர். வெட்டையும், சொற்பனக் கலிதம் முதலியதும் பறக்கும்; தேகம் குளிர்ந்து பொன் போல் பிரகாசிக்கும்.

டப்பி 1-க்கு விலை ரூ 1—0—0

**தங்க தாம்பூல வாசனை மெழுகு**

இதன் உபயோகம்: காலரா, பிளேக் முதலிய தொத்து வியாதிகளை நீக்கும். கெந்ததாழி, வாய் நாற்றம், சரீரச் சூடு, வாந்தி, அன்னத் துவேஷங்களைப் போக்கும். அதிகமான ஜீரண சக்தியைக் கொடுக்கும். வாயில் கமகம வென்று வாசனையையும், முகவசீகரத்தையும், மனோரம்யத்தையும் உண்டாக்கும். டப்பி 1-க்கு விலை ரூ 2—0—0

**கல் நார் பற்பொடி**

இதை உபயோகித்து வந்தால் பற்களில் இரத்தம் வடிதல், சீழ் வடிதல், பல்லரணை, பல் கூச்சம், வாய் நாற்றம், வாய்ப் புண், பல்லசைவு முதலிய குற்றங்கள் பூராவும் நீக்கி, பற்களை முத்துப் போல் பளபளப் பாக்கும். மூட்டோடு அசைந்த பல்லும் இறுகும். பற்களில் உண்டாகும் நோய்கள், சூரியனைக் கண்ட பனி போல் அகன்று விடும். முகவசீகரமும் உண்டாகும். டப்பி 1-க்கு அணா 6.

இன்னும் இங்கு அநேக அரிய மருந்துகளும் கிடைக்கும். ஏழைகளுக்கு இனமாக வைத்தியம் செய்யப்படும்.

**வைத்யபதி அர்ஜுனன் செட்டியார்,**

தர்ம சித்த வைத்தியசாலை, உத்தமபாளையம், S. இந்தியா.





## புதிய மெஷின்கள்!

## நேர்த்தியான வேலைகள்!!

| | | |
|---|---|---|
| விசிட்டிங் கார்டுகள் | — | — |
| விலாசங்கள் — | — | — |
| பில் பாரங்கள் — | — | — |
| நோட்டீஸ்கள் — | — | — |
| வால் போஸ்டர்கள் | — | — |
| ரசீதுப் புத்தகங்கள் | — | — |
| உண்டியல் ,, | — | — |
| கணக்கு ,, | — | — |
| செக்ருல் ,, | — | — |
| இதர ,, | — | — |
| பலவித பைல் ,, | — | — |
| விவாஹப் பத்திரிகைகள் — | — | — |
| வரவேற்பு ,, | — | — |
| உபசார ,, | — | — |
| அழைப்பு ,, | — | — |
| காலெண்டர்கள் | — | — |

முதலியவைகளும், கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், கோவாப்ரேடிவ் பாங்குகள், ஜமீன்கள், எஸ்டேட்டுகள் ஆகியவற்றிற்கும் வேண்டிய விதம் விதமான பிரிண்டிங், ரூலிங் & பைண்டிங் வேலைகளைப் பலவித வர்ணங்களில் நேரான பார்வையில் கைதேர்ந்த வேலைக்காரர்களால் உறுதியாகவும் நேர்த்தியாகவும் உயர்தரமாகவும் குறித்த காலத்தில் சகாயமாகவும் செய்து கொடுக்கப்படும். எல்லாவித பேப்பர் தினுசுகளும் ஸ்டாக் செய்யப்பட்டிருக்கிறது. தபால் வழியாகவும், ரயில் மார்க்கமாகவும் அனுப்பி வைக்கப்படும்.

மாதிரியுடன் அட்வான்ஸையும் அனுப்பி, கடிதம் நன்கு தெரியும் வண்ணம் தெளிவாக எழுதி, சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷனையும் குறித்தனுப்புக.

**மானேஜர், ஆனந்தா பிரஸ்,**

உத்தமபாளையம், S. இந்தியா.

1929-ம் ஞு "பாரதி"யின் மணிகள் பைண்ட் செய்வதற்கு சார்ஜ் ரூ. 1—0—0. ஒன்றுதான். பைண்ட் நேர்த்தியான காலிக்கோவில் உறுதியாகவும் அழகாகவும் செய்து கொடுக்கப்படும்.

மானேஜர்,

ஆனந்தா பிரஸ், உத்தமபாளையம்.

# "லோகோபகாரி"

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினுல் லோகோபகாரிக்குச் சந்தாதாரராய்ச் சேருங்கள், உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தைந்தாவதாண்டு நடக்கிறது.

பத்திராதிபர்: பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை.
லோகோபகாரி பத்திரிகாலயம்,
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை.
வருஷ சந்தா ரூபாய் நான்கு.





# "கலா நிலயம்"

இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை.


கலையுணர்வும், கலா ஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவியென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்ப ராமாயணம், தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழி பெயர்ப்புகள், மற்றும் பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்.

சந்தா விபரம்.

சந்தா உள்நாட்டிற்கு ரூ. 7-8-0. வெளிநாட்டிற்கு ரூ. 9-0-0. தனிப்பிரதி அணு 3. ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—மானேஜர்,
11, வெள்ளாளர்தெரு, புரசைபாக்கம். சென்னை.

விலை சரசம்! ரங்கூன் புது வெயிரம். சரக்கு நயம்!



நிறம் ஜொலிப்பு கெட்டி உழைப்பு பார்வை மேன்மை எல்லாவற்றிலும் சிறந்தது. அரத்திற்குத் தேயாதது உண்மை வயிரத்திற்கு ஒப்பானது பெருத்த விற்பனையாவது. காரட் 1-க்கு 4ரூ. முதல் 6ரூ. வரையுள்ள தினுசுகளிருக்கிறது. மற்றும் இமிடேஷன் புஷ்பராகங்களும் ஏராளமாய்க் கிடைக்கும்.

விலாசம்:— அ. பொன்னுச்சாமி செட்டியார், சராப்புக்கடை, பெரியக்கடை வீதி, திருச்சி.

# NEW BOOKS OF RESEARCH.

By. Prof. PURNALINGAM PILLAI, B. A, L. T.

A FEW COPIES ON HAND.

**ENGLISH**

**Ravana the Great** Sewed As. 12. Cloth R. 1.
**Critical Studies in Kural.** Sewed R. 1-4. cloth R. 1-8
**Studies and Critiques in Modern English Literature** Re. 1.
**Stories from Goldsmith.** Sewed As. 12 Limp Re. 1.
**Collectanea:** Prose and Verse. As. 12. (In print)

**TAMIL**

**Tappili. or The Faultless.** (Essays) As. 10
**Marutthuvan Makal or The Doctor's Daughter.** (Novelette) As. 6.
**Katturai Kalanjiam.** (55 topics) As. 12.

Terms—11 copies for 10 purchased at a time. Liberal discount for large orders. No books on commission sale.

Apply to:— THE MANAGER, **The BIBLIOTHECA,**
Munnirpallam. Tinnevelly Dt.. South India.

## உங்கள் விலாசம்

உயர்ந்த கடிதத்தில் "பாரதி"யின்
அளவில் 100 பிரதிகள் அடங்கிய
பேட் 1-க்கு ரிஜிஸ்டர் தபாற்
செலவுட்பட ரூ 1—8—0 தான்;
பேட் 2-க்கானுல் ரூ 2—8—0.
உங்கள் ஆர்டரில் விலாசத்தைத்
தெளிவாக எழுதி,
தமிழா ஆங்கிலமா வென்பதையும்
எவ்விதக்
கலர் பேப்பரிலென்பதையும்
பணத்துடன் குறித்தனுப்புக.
மற்றத் தேவைகளுக்கும் கீழ்க்கண்ட
விலாசத்திற் கெழுதுக.

மானேஜர்,
ஆனந்தா பிரஸ்,
உத்தமபாளையம், S. I.

# T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி Ltd., கோம்பை.

1913-ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம்
900.000 பங்குகளின் பேரில்
2,700,000 ரூ மூலதனம்.

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும், லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்து லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்திய தேசங்களுக் கனுப்பி வைத்தும் பாம்பை, கல்கத்தா, காரச்சி முதலிய துறை முகங் களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்து வருவதோடு சக்கர், முல்டான், டில்லி, லாகூர், அம்ரிட்ஸார், அலகாபாத், கான்பூர், ஆக்ரா, ஆகரிஸ், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜெண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்து வரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும் இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்கப் புகழையு மடையும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உ. ம. சே. முகையித்தீன்பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்,
T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிடெட்.)
கோம்பை, மதுரை ஜில்லா.

**Wake up!** **Insure you must !!**

ஜெனரல் அஷ்யூரன்ஸ் சோஸைட்டி லிமிடெட், ஆஜ்மீர்.

இது மிக்க பழமையானதும், நம்பிக்கையுள்ளதும், அதிக லாபம் தரக்கூடியதும், ஏராளமான பாலிசிகளையுடைய ஸ்தாபனமும் ஆகும். வருஷம் 1-க்கு ரூ. 1000 மதிப்புள்ள பாலிசிக்கு லாபம் ரூ. 22—8—0 கொடுத்திருக்கும் முதன்மையான கம்பெனி இதுவே. இன்றே இன்ஷியூர் செய்யுங்கள்.

கம்பெனியின் விசேடங்கள்:—

ஐகேஜ் பூராவும் கவர்ன்மெண்டு உத்திரவாதம் பெற்றது. செலவோ குறைவு. லாபமோ அதிகம்.

சந்தாதார்களின் நன்மையைக் கருதி நடத்திவரும் கம்பெனி. இதில் ஒரு பாலிசி எடுத்தால் அது அழிவில்லாப் பொக்கிஷமாகும்.

கம்பெனியின் சட்ட திட்டங்கள் மிகவும் இலகுவானவை. அவைகளைப் பற்றித் தெரியவேண்டுமானால் அடியிற்கண்ட விலாசங்களுக்கு எழுதுங்கள்.

சீப் ஏஜண்டு:-

**S.** வெங்கட்டராம அய்யர் B.A., L.T., 21-வீர், மேலபட்டமார் தெரு, மதுரை.

லோகல் ஏஜண்டுகள்:—

**M.** பரிமணம் பிள்ளை, உத்தமபாளையம், P. O.

**R.** வெங்கட்டராமய்யர், மானேஜர், காளீஸ்வர ரைஸ் மில்ஸ், உத்தமபாளையம்.

# "பாரதி"

## ஓர் தேசீய மாஸிகை.

சந்தா விபரம்.

உள்நாடு ... 2—0—0
வெளிநாடு ... 2—8—0

அல்லது 4 ஷிலிங்

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. எம் மாதத்திலிருந்து சந்தாதாரராளுலும் வருட ஆரம்பமாகிய ஜனவரி மாதத்திலிருந்தே பத்திரிகை அனுப்பப்படும்.

விலாசம்:—

மானேஜர், "பாரதி,"
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt.